வாகீசன் ரேடர்ஸ்
Tél : 01 40 05 07 18
Fax : 01 40 05 06 92
15 rue de cail, 75010 Paris

K.KAPILAN & CO
IMPORTE & EXPORTE
இலங்கை லயன் ஸரவுட் மற்றும் Rabeena தயாரிப்பின் ஏக விநியோகஸ்தர்கள்
424, LA CLOSERIE,
93160 NOISY LE GRAND
Tel : 01 49 32 04 09
Fax : 01 43 03 30 86
Port : 06 13 41 28 51

இலவசம் Free Gratuit Gratis

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2005 04 - 10 Août 2005 73

Greenlands Restaurant
சுடச்சுட ரொட்டி, பரோட்டா,
கொத்துரொட்டி
207, rue du Faubourg st denis
75010 Paris
M°La chapelle/ Gare du nord
Tél 01 46 07 38 42




## தமிழீழத் தேசிய தொலைக்காட்சி சேவை தென்னாசிய நாடுகளுக்கு விரிவாக்கம்

(01.08.2005)

பிரான்சில் இருந்து ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி இணையம் (ரி.ரி.என்) ஊடாக ஐரோப்பிய நாடுகளில் ஒளிபரப்பாகிவரும் தமிழீழ தேசிய தொலைக் காட்சியின் (என்.ரி.ரி.) ஒளிபரப்புக்கள் இன்று முதல் தென்னாசிய மற்றும் சூழவுள்ள நாடுகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழீழத் தாயகம் உட்பட இந் நாடுகளில் தாயக நேரப்படி இரவு எட்டு மணி தொடக்கம் ஒன்பது மணி வரையும் (ஜி.எம்.ரி. நேரப்படி 14.30 தொடக்கம் 15.30 வரை) இத்தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும்.

ஈரோப் ஸ்ரார் செய்மதியூடாக கே.யு. பாண்ட் 45 பாகை கிழக்கு 11506 மெகா கேட்ஸ் அலை வரிசையில் இத்தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிட முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. ஒருமாத கால பரீட்சார்த்த ஒலிபரப்பின் பின்னர் இச் சேவை இரவு ஏழு மணி முதல் ஒன்பது மணிவரை இரு மணிநேரம் ஒளிபரப்பு இடம் பெறும்.

இவ் ஒளிபரப்பு தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ ஊடக இணைப்புச் செயலகத்தில் நடை

(தொடர்ச்சி 02ம் பக்கம்)

## போராளிகளின் பயணத்திற்கான அரசின் யோசனைக்கு விடுதலைப் புலிகளின் பதில் அனுப்பிவைப்பு

(01.08.05)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியினூடான தங்களது பாதுகாப்பான போக்குவரத்து குறித்து அரச தரப்பு முன்வைத்த `மேலதிக யோசனை`க்கு விடுதலைப் புலிகள் சாதகமாக பதிலளித்திருப்பதாகத் தெரியவருகிறது. விடுதலைப் புலிகளின் பாதுகாப்பான பயணம் குறித்து பெரும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில் அது மீண்டுமொரு மோதலுக்கு வழி வகுத்துவிடுமோ என்ற அச்சம் எழுந்தது.

விடுதலைப் புலிகளின் நிபந்தனையும் அரசு தரப்பின் நிராகரிப்பும் இவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்த, இரு தரப்பையும் சமாளிக்கும் முயற்சியில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு ஈடுபட்டது.

இந்த நிலையில் அரசு தரப்புடனும் படைத்தரப்புடனும் அடுத்தடுத்து

(தொடர்ச்சி 02ம் பக்கம்)

## மீண்டும் போர் தொடங்கினால் களத்தில் குதிக்க நாங்கள் தயார்

– வடமராட்சி மக்கள் –

(01.08.05)

தாயகத்தை மீட்டெடுப்பதற்கான போரைத் தொடங்குமாறு தமிழீழத் தேசியத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ள வடமராட்சி மக்கள் அவ்வாறு போர் ஆரம்பிக்கப்பட்டால் தாம் எல்லைப் படையாகவும், கடலோர காவல் படையாகவும், களத்தில் குதிக்க தயாராக இருப்பதாகவும், தெரிவித்துள்ளனர். கடந்த புதன்கிழமையன்று உடுத்துறையில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி

(தொடர்ச்சி 02ம் பக்கம்)

## தென் சூடான் விடுதலை அமைப்பின் தலைவர் சாவு!

(01.08.05)

தென் சூடானிய விடுதலை அமைப்பின் தலைவரும், சூடான் நாட்டின் துணை அரசுத் தலைவராக அண்மையில் பதவியேற்ற திரு. ஜோன் கிறாங் அவர்கள் இன்று இடம்பெற்ற உலங்கு வானூர்தி விபத்தில் சாவடைந்துள்ளதாக சூடானில் நிலை கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உகண்டாவின் அரசுத் தலைவரைச் சந்தித்து விட்டு சூடான் திரும்பிக் கொண்டிருக்கும் பொழுதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. தென் சூடானிய மக்களின் விடுதலைக்காக கடந்த 20 ஆண்டுகளிற்கும் மேலாக ஆயுதப் போராட்டத்தை தலைமையேற்று வழிநாடாத்தி வந்த திரு. ஜோன் கிறாங் அவர்கள் சூடானிய அரசுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்காப்பட்டை அடுத்து அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கதின் துணைத் தலைவராக கடந்த மூன்று வாரங்களிற்கு முன்பே பதவியேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவத்தையடுத்து ஏற்பட்ட வன்செயல்களை தொடர்ந்து தலைநகர் கார்ட்டூமில் சூடானிய அதிகாரிகள் ஊரடங்குச் சட்டத்தை பிரகடனம் செய்துள்ளனர்.

இன்றே விஜயம் செய்யுங்கள்
VS - CO Cash & Carry
Tél : 01 40 34 71 65
Fax : 01 53 26 72 04
197, rue du Fbg st - Denis 75010 PARIS

RESTAURANT BHARATH
Spécialitées Indienne & Srilankaise
நீங்கள் விரும்பும் விதத்தில் இலங்கை,இந்திய உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட இன்றே நாடுங்கள்
51, Rue Louis Blanc,75010 Paris
Tél - 01 42 09 35 84

ஐரோப்பிய மக்கள் விரும்பும் இலங்கை இந்திய சுவையில் தரம் குன்றாத வகையில் உணவு பரிமாறிட லாச்சப்பலில்
CAFE BHARATH
67, Rue Louis Blanc,75010 Paris
M° : La chapelle ou Gare du Nord விபரங்களுக்கு -
01 58 20 06 20 / 06 03 37 38 24

ASI இறைச்சிக்கடை
முழுஆடாக அல்லது பாதிஆடாக வாங்கினால் சிறப்பு விலைக்கழிவு
1Kg Chevre - 2,69€ / 1Kg Mouton(s) 3,80€
உடன் ஆட்டுப்பங்கும், கோழி, மற்றும் இறைச்சி வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.
195, rue du Fbg st - Denis 75010 PARIS.
Tél : 01 42 05 23 78
M° : La chapelle ou Gare du Nord

கோபால் அன் கோ
அனைத்துவிதமான மளிகைப்பொருட்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைபேசி அட்டைகள் போன்றவற்றை மிகவும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்
72, rue louis Blanc,75010 PARIS, FRANCE
Tél - 01 46 01 11 10 / Fax - 01 46 07 13 03

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்

# தமிழ் தேசிய.....

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், இத்தொலைக்காட்சி சேவை குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டன. இதன்போது தமிழீழ தேசிய தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த கு.வீரா உரையாற்றினார். அவர், தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் தமிழ் மக்களின் ஊடக வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு அதற்கான வழிகளை நெறிப்படுத்தி வருகின்றார். தமிழீழ விடுதலைப் போராட்ட ஆரம்ப காலகட்டங்களில் உண்மையான செய்திகளை மக்களிடம் கொண்டு செல்வதில் பல இடர்கள் இருந்தன. விடுதலைப் போராட்டம் தொடர்பான பொய்யான செய்திகளை சிறீலங்காவின் ஊடகங்கள் பரப்பி வந்தன. இந்த நிலையில் மக்கள் மத்தியில் உண்மையான செய்திகளைக்கொண்டு செல்லவேண்டுமென்ற நோக்கில் உறுமல் பலகைகள் போன்றவற்றின் மூலம் செய்திகளை வெளிப்படுத்தி வந்தோம். இன்று எமது விடுதலைப் போராட்டம் வலுவான நிலையில், உலகத்திற்குச் செய்மதி மூலமாக எமது தமிழீழ தேசிய தொலைக்காட்சி ஒகஸ்ட் மாதம் முதலாம் நாள் (இன்று) தனது தென்னாசிய நாடுகளுக்கான ஒளிபரப்பினை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய தமிழீழ தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளர் கருணாகரன், தமிழீழ தேசிய தொலைக்காட்சி கடந்த மார்ச் மாதம் 26ம் திகதி ஐரோப்பியாவுக்கான ஒளிபரப்பைத் தொடங்கியது. புலம்பெயர் ஐரோப்பிய மக்கள் தொலைக்காட்சியை ஆர்வத்துடன் வரவேற்றார்கள். குறிப்பாக அவர்கள் தெரிவிக்கின்ற கருத்தானது, தாயக மண்ணினூடான தொப்புள் கொடி உறவை இந்த தொலைக்காட்சி வலுப்படுத்தியுள்ளது. இத்தாயக மண்ணிலேயே தாங்கள் வாழ்வதைப் போன்ற ஒரு உணர்வை இத் தொலைக்காட்சி தந்து கொண்டிருக்கின்றது. அத்தோடு தமது இளம் தலைமுறையினருக்கு தாயகம் தொடர்பான உணர்வினை இது வழங்கி வருகின்றது என்பதாகும். இப்போது இந்தத் தொலைக்காட்சியை எமது தாயகத்திற்கு விரிவுபடுத்துகின்றோம். தாயகத்தில் மட்டுமன்றி தென்னாசியப் பிராந்தியமனைத்திலும் இது ஒளிபரப்பாகவுள்ளது. இதுவரையில் தமிழ் தேசியம் பற்றியும், விடுதலைப் புலிகள் பற்றியும் தவறான கருத்துக்களைப் பரப்பி வந்த ஊடகங்களினுடைய பொய்ப் பிரச்சாரத்திற்கு முடிவுகட்டும் முகமாக இந்த ஊடகம் வருகின்றது. ஏற்கனவே எமது சகோதர ஊடகங்கள் ஆற்றிய பணியின் தொடர்ச்சியாக இத் தொலைக்காட்சிசேவை அமைகின்றது

1987ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி விடுதலைப் புலிகளினால் நிதர்சனம் சேவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அத்தொலைக்காட்சி சேவை அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ம் திகதி இந்திய இராணுவத்தினரின் தாக்குதலால் இடை நிறுத்தப்பட்டது. பின் இச் சேவை 1990ம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு யுத்தம் தீவிரமடைந்ததால் மீண்டும் இடைநிறுத்தப்பட்டது. இப்போது 2005ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதி மீண்டும் ஐரோப்பிய நாடுகளுக்கான சேவையாக ஆரம்பமான இத்தமிழீழத் தேசிய தொலைக்காட்சி எதிர்வரும் முதலாம் திகதி தனது சேவையை விரிவாக்கம் செய்கின்றது என்றார்.

இத்தொலைக்காட்சி சேவையின் ஒளிபரப்பு விபரமடங்கிய கோவையும் இறுவட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடாக இணைப்பாளர் தயா மாஸ்ரரினால் வழங்கப்பட்டது.

தொடர்ந்து இத் தொலைக்காட்சியின் ஒரு மணிநேர இறுவட்டு ஊடகவியலாளர்களுக்கு காட்சிப் படுத்தப்பட்டதுடன் நிறுவனத்தினரால் சகோதர நிறுவனங்களான புலிகளின்குரல், ஈழநாதம், ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) ஆகிய வற்றுக்கு ஒளிபரப்பைப் பார்வையிடப் பயன்படும் சாதனங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. புலிகளின் குரலுக்கான சாதனங்கள் அதன் பிரதம செய்தியாசிரியர் தி.தவபாலனிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகத்துறைப் பொறுப்பாளர் நரேஸ் வழங்கினார்.

# மீண்டும் போர்...

கேணல் சூசை அவர்களுடன் நடந்த சந்திப்பின் போதே வடமராட்சி 'மக்கள் பிரதிநிதிகள்' இதனைத் தெரிவித்துள்ளனர்.

உடுத்துறை மகாவித்தியாலயத்தில் வடமராட்சி மக்கள் பிரதிநிதிகளுக்கு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களிற்கும் இடையே கடந்த புதன் கிழமையன்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது சமகால அரசியல் நிலைவரம் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்த கேணல் சூசை அவர்கள், மக்கள் விடுத்த கோரிக்கைகள் தொடர்பில் பதிலளிக்கையில் உங்களின் கோரிக்கைகளையும், ஆதங்கங்களையும் தேசியத் தலைவரிடம் தான் தெரிவிப்பதாகவும், தலைவர் விரைவில் நல்லதொரு முடிவை அறிவிப்பார் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போரைத் தொடங்குமாறு தமிழீழத் தேசியத் தலைவரை வலியுறுத்தி பாரிய பேரணி பூநகரியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி பூநகரி மகாவித்தியாலய முன்றலிலும் பூநகரி பிரதேச செயலக முன்றலிலும் இருந்தும், இருமுனைகளாக நகர்ந்து பூநகரி வாடியடி மத்திய பகுதியை இப்பேரணி அடைந்தது. பேரணியில் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் சிறீலங்கா அரசுக்கெதிரான கண்டன உரைகள் நிகழ்த்தப்பட்டன. தமிழீழ தேசியத்தலைவர் அவர்களுக்கும் மற்றும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் மனுக்கள் வழங்கப்பட்டன. கடற்புலிகளின் மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் பூரணி, மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழன், பூநகரி பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன், அரச அரசசார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# போராளிகளின்...

இரு தடவைகள் சந்தித்த கண்காணிப்புக் குழு, அரசிடமிருந்து இது தொடர்பாக மேலதிக யோசனையொன்றைப் பெற்று கடந்த திங்கட்கிழமை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்தது.

எனினும், இந்த மேலதிக யோசனையின் உள்ளடக்கம் குறித்து அரசு தரப்போ விடுதலைப் புலிகளோ எதனையும் தெரிவிக்கவில்லை. விடுதலைப் புலிகளின் போக்குவரத்தின் போது அவர்கள் பயணம் செய்யும் பேருந்துகளில் படையினரும் பயணம் செய்து தங்களது பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டுமெனப் விடுதலைப் புலிகள் வற்புறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக்கு தேவையான அளவு பாதுகாப்பை வழங்குமாறு சிறீலங்கா ஜனாதிபதி இராணுவ தரப்புக்கு உத்தரவிட்டிருந்தார். அத்துடன், அவசர சிகிச்சைக்காக திருகோணமலையிலிருந்து கிளிநொச்சிக்கு சென்ற விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கும் அதி உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன் அவர் பயணம் செய்த வாகனத்திலும் படையினரும் பயணம் செய்ததுடன் நாட்டின் மிக முக்கிய தலைவரொருவர் பயணம் செய்யும் போது வழங்கப்படும் பாதுகாப்பு போன்று பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதன் மூலம் விடுதலைப் புலிகள் வற்புறுத்திய கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே விடுதலைப் புலிகளின் பதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிறீலங்கா அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் இந்தப் பதில் குறித்து எதுவும் தெரிவிக்கப்படாத போதிலும், அரசின் மேலதிக யோசனையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்களைப் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தப் பதில் சாதகமாயிருக்கும் பட்சத்தில் இந்த விவகாரத்தால் ஏற்பட்ட முறுகல் நிலை தணிவடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.


## பிரான்ஸ் எழுச்சிமாலை 2005 நிகழ்வில் வெளிவரவிருக்கின்றது

மாவீரர் கப்டன் கஜன் எழுதிய

## ஆருக்குச் சொல்லி அழ

புலம் பெயர்ந்த வாழ்வியலின்
எழுத்துச் சித்திரமாய்...
ஈழமுரசுவில் வெளிவந்த
அற்புதமான தொடர்...
நூல் உருவில்
விரைவில் உங்கள்
கரங்களில்...




*வெள்ளையனே வெளியேறு!*
*வெள்ளையனே வெளியேறு!!*
*ஆரையோ நல்லா வாங்கு*
*வாங்கெண்டு வாங்கிக்*
*கொண்டிருந்தார்.*
*அந்தாள் பேசினதை நான்*
*எழுதினால், ஆள் ஆளுக்கு*
*செருப்பைத்தான்*
*கழட்டிக் கொண்டு வருவியல்...*



- ஆசைத்தம்பி



அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், பாரிஸ்.

## புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் வருடாந்த உற்சவம்.

அம்பிகை அடியார்களே,

பாரிஸ் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் வருடாவருடம், புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு விசேட அபிசேகம் நடைபெற்று வந்தது யாவரும் அறிந்ததே. இந்த வருடம் அடியார்களின் வேண்டுகோளின் பிரகாரம் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பெற்ற ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் விசேட அலங்கார உற்சவமாக நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

ஆகவே, எதிர்வரும் 09.08.2005 செவ்வாய்க்கிழமை கொடியேற்ற வைபவத்திலிருந்து அரம்பமாகும் அலங்கார உற்சவம் தினசரி மாலை 5மணியளவில் விசேட ஸ்நபன அபிசேகம் இடம்பெற்று மாலை 6.30 மணியளவில் விசேடமாக அலங்கரிக்கப்பெற்ற ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அலங்கார உற்சவபூசை இடம்பெற்று உள்வீதி வலம்வரும் காட்சியினைக் கண்டு தரிசித்து எம்பெருமாட்டியினது அருட்கடாட்சத்தினைப் பெற்றேகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்கனம்
நிர்வாகம்.

**26 Rue du Departement,**
**75018 PARIS**
**M.La Chapelle ou Marx Dormoy**
**Tel- 01 40 38 30 75**



## மோகன் ஜுவலரி மார்ட்

தரமான தங்கநகைகளை பெற்றிட பாரிஸ் மாநகரில்



வாடிக்கையாளர்களின் அபிமானம் பெற்ற நிறுவனம்

Tel: 01 42 05 65 26 , Fax: 01 42 05 65 79

**201 Rue du fg. st. Denis, 75010 Paris.**

Mº: La Chapelle / Gare du Nord

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# வெடிக்கும் மக்கள் போராட்டம்

மக்கள் போராட்டம் என்று வெடிக்கின்றதோ அன்று தமிழீழம் மலரும் என்பது தியாகி திலீபனுடைய அசைக்கமுடியாத நம்பிக்கையாக இருந்தது. அதனால்தான் தனது சாவின் இறுதிக் கணத்தில் கூட மக்கள் போராட்டம் வெடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார். ஒரு மக்களின் எழுச்சிமிக்க போராட்டம் மூலமே அடக்குமுறை அரசின் ஆதிக்கத்தில் இருந்து பிரெஞ்சு தேசம் விடுதலை பெற்றது. இன்று தமிழீழமும் அவ்வாறானதொரு முழுமையான மக்கள் போராட்டத்தை, மக்கள் எழுச்சியை நோக்கி நகர்ந்துவந்துள்ளது.

அகிம்சையின் மூலம் தமது நியாயங்களைப் பெற்றுவிட முனைந்து தோற்றுப்போய் இன்று ஆயுத பலத்தின் மூலம் சமவலுவுடன் நிற்கும் வேளையில் கூட, தமிழ் மக்களை கிள்ளுக்கீரையாக எண்ணுகின்றது சிறீலங்கா அரசும் அதன் இனவாதமும். மூன்றரையாண்டுகாலப் பொறுமையை, தமிழ் மக்களின் இயலாமை என்று அது இன்றும் தப்புக் கணக்கு போடுகின்றது. அதனால் தான் தனது மறைமுகப் படுகொலைகளை கட்டவிழ்த்துவிட்டு மீண்டும் ஒரு மோதலுக்கான வழியை ஏற்படுத்த முனைகின்றது.

மறுபுறத்தே, தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு இயல்புநிலையை ஏற்படுத்த முனையாமல், இராணுவ ஆக்கிரமிப்பை தொடர்ந்து தக்க வைத்து வருகின்றது. இயற்கையினால் ஏற்பட்ட அழிவிற்கு கூட, ஒரு மனித நேயத்துடன் உதவி புரிய முனையாத சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கு என்றைக்குமே எதையுமே நியாயபூர்வமாக வழங்கமாட்டாது என்பது தெளிவாகிவிட்டது. இனியும் சிறீலங்கா அரசை எதிர்பார்த்து காத்திருப்பது 'இலவுகாத்த கிளி'யின் கதையாகத்தான் இருக்கும் என்பதை தமிழ் மக்கள் நன்றாகவே உணர்ந்துகொண்டு விட்டார்கள். அந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் முற்றாக போயுள்ளமையால்தான், விடுதலைப் புலிகளின் பொறுமையைக் கூட ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக தேசியத் தலைவரை போரில் குதிக்குமாறு வலியுறுத்துவதுடன் பக்கபலமாக மக்களான தங்களின் ஒத்துழைப்பும் இருக்கும் என்று உறுதிமொழி பகர்கின்றார்கள்.

ஆனாலும், தங்களது அகிம்சைவழியான போராட்டங்களையும் மக்கள் இன்னும் கைவிடவில்லை. இதற்கு சான்றுகள் தான் அண்மைக் காலங்களில் நடைபெற்றுவரும் எழுச்சிப் போராட்டங்கள். கடந்த வாரம் வவுனியாவில் சகல மாவட்டங்களையும் சேர்ந்த பேராளர்கள் கலந்து கொண்ட தமிழ் தேசிய எழுச்சி மாநாடு மிக எழுச்சிகரமாக நடந்து முடிந்துள்ளது. இந்த மாநாட்டின் மூலம் தமிழ் மக்களின் நியாயங்களை சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் மீண்டும் ஒருமுறை அழுத்திக் கூறியிருக்கின்றார்கள். தமது இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாகவுள்ள சிறீலங்கா ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும், என வலியுறுத்தியிருக்கின்றார்கள். ஆனால், வழமைபோன்று சிறீலங்கா அரசும் அதன் இனவாதமும் இவற்றையும் எந்தளவிற்கு காதில் வாங்கிப் போடப்போகின்றார்கள் என்பது கேள்விக்குரிய ஒன்று.

ஆனால், தமிழ் மக்களின் நியாயங்களை புரிந்துகொண்டிருக்கும் சர்வதேச சமூகம் உறுதியான முடிவு ஒன்றை எடுக்கவேண்டிய கட்டத்தில் இருக்கின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது இழைக்கும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த முனைய வேண்டும்.

இல்லாது போனால், குமுறிக்கொண்டு இருக்கும் எரிமலைபோன்று தமிழ் மக்கள் நெஞ்சங்களில் அனலாக இருக்கும் கோபத்தீ, பற்றியெரிந்து ஒரு மக்கள் புரட்சியாக வெடிக்கும் என்பது உண்மை. இதனையே தமிழ் மக்களின் அண்மைக்கால நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.




# வட அயர்லாந்துப் பிரச்சனையும் தமிழீழப் பிரச்சனையும் வெவ்வேறு வகையிலானவை

பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து வட அயர்லாந்தை விடுவித்து அயர்லாந்துடன் இணைப்பதற்காக நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டத்துக்கு தலைமை தாங்கிவரும் வட அயர்லாந்து விடுதலை இராணுவம் இனித் தமது போராட்டத்தை அரசியல் ரீதியாக முன்னெடுத்துக் கொள்வதற்குத் தீர்மானித்திருப்பதால் தங்கள் ஆயுதங்களை வட அயர்லாந்து போராளிகள் களைவதற்கு விடுதலை இராணுவம் முடிவு செய்திருக்கிறது. சின்பெயின் என்ற இனவிடுதலை இராணுவத்தின் அரசியல் அமைப்புத் தொடர்ந்து அரசியல் ரீதியில் வட அயர்லாந்து பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முயற்சி செய்யும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வட அயர்லாந்துப் போராட்டத்தில் இப்படியொரு அறிவிப்பு வெளிவந்ததும் அதை பிரிட்டிஸ் பிரதமர் ரொனி பிளேயர் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அமெரிக்க அதிபர் புஷ்சும் பெரிதும் வரவேற்றார். ஆயுதங்களை கீழே வைப்பது என்ற வட அயர்லாந்து விடுதலை இராணுவத்தின் முடிவு உறுதியானதாக, நிரந்தரமானதாக இருக்க வேண்டுமென்று அமெரிக்கா எச்சரிக்கையுடன் அவதானமாக கருத்து வெளியிட்டது. ஏனெனில் 1994ம் ஆண்டு ஆகஸ்டில், இனி தாங்கள் அரசியல் ரீதியான போராட்டம் மூலம் அயர்லாந்து இணைப்பை அடைவோம் என்று தெரிவித்திருந்த அரசியல் பிரிவான சிம்பெயின், 1996ல் அமைதிப் பேச்சுக்கள் தடைப்பட்டபோது மீண்டும் ஆயுதப்போராட்ட பாதைக்கு திரும்பியதை அமெரிக்கர்கள் மறக்கவில்லை.

வட அயர்லாந்து நிலம் பிரதேசம் அபகரிக்கப் படவில்லை. திட்டமிட்டு இன அழிப்பில் யாரும் ஈடுபடவில்லை. ஒரு இனத்தை சேர்ந்த இளைஞர்கள் சிறைப்படுத்தி வதை செய்யப்படவில்லை. வட அயர்லாந்துப் பிரச்சினையுடன் விடுதலைப் புலிகளை ஒப்பிடுவதும் ஆயுதங்கள் களைய வேண்டும் என்பதும் அறியாமையின் வெளிப்பாடேயாகும்.

வட அயர்லாந்தில் விடுதலை இராணுவம் ஆயுதங்களை கீழே போட்டு அரசியல் ரீதியில் தமது போராட்டத்தை முன்னேடுப்பதற்கு முடிவு செய்துள்ளதாக செய்தி வெளியானதும் இலங்கை அரசின் சார்பில் பேசவல்ல நிமால் சிறிபால விடுதலைப் புலிகளும் இவ்வாற செய்யலாமென நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் கையிலுள்ள ஆயுதங்கள் எப்போது அவர்கள் கையிலிருந்து விலகுமென்று கனவு கண்டுகொண்டிருக்கும் சிங்கள அரசாங்கத்திற்கு ஐ.ஆர்.ஏயின் அறிவிப்பு பிரச்சாரத்திற்கு ஏற்றதாக அமையுமா எனக் காத்திருக்கின்றார்.

வட அயர்லாந்து போராட்டத்தை இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்துடன் ஒப்பிடமுடியுமா? இலங்கையில் தமிழ் மக்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருப்பதற்கு புலிகளின் கைகளில் ஆயுதங்கள் இருப்பதே காரணம்.

1956ம் ஆண்டில் தமிழ் மக்களின் மொழியை அழிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையுடன் தமிழ் மொழிபேசும் மக்களும் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டு சிலர் கொல்லப்பட்டார்கள்.

1958ம் ஆண்டில் இலங்கை முழுவதிலும் காலம் காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதிகளால் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டதுடன் அவர்கள் தேடிய பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

இதே ரீதியில் 1961, 1966, 1977ம் ஆண்டுகளில் காவல்துறையின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் தமிழ்மக்கள் நாடுமுழுவதும் சிங்களக் காடையர்களினால் திட்டமிட்டுகொலை செய்யப்பட்டனர். அவர்களுடைய சொத்துக்கள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்டன. இதன் பின் 1983ம் ஆண்டு ஆடி மாதம் ஆட்சி அதிகாரத்திலிருந்தவர்களின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பன கொழும்பு சிறையிலிருந்த 52 சந்தேக நபர்கள் உட்பட நாடுமுழுவதும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் தேடிய சொத்துக்கள் பூண்டோடு அழிக்கப்பட்டன. இதேசமயம் இலங்கை சுதந்திரமடைந்த 1948ம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் தாயக பிரதேசமான வடக்கில் ஒருபகுதியான கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் மண் அபகரிக்கப்பட்டு வந்தது. 1983ம் ஆண்டில் தமிழ் இன அழிப்பு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டதை உணர்ந்த போதுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தினார்கள். தமிழர் தாயக மண் அபகரிக்கப்படுவதையும் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்வதையும் எதிர்த்து விடுதலைப் புலிகள் ஆயுதமேந்தியிருக்காவிடில் இன்று தமிழினமே இலங்கையில் இருந்திருக்காது.

இலங்கையில் ஏற்பட்ட கடற்கோள் அழிவினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகதமிழ்பேசும் மக்களுக்கு வெளிநாடுகள் மனமிரங்கி வழங்கிய உதவிகளை கூட பகிர்ந்தழிப்பதற்கு சிங்கள பேரினவாதிகள் அனுமதிக்கிறார்கள் இல்லை.

தமிழ் மக்கள் எப்படியும் இலங்கையிலிருந்து அழித்தொழிக்க வேண்டும் அல்லது அடக்கி ஒடுக்கவேண்டும் என்பதாலேயே சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளின் திட்டமும் நோக்கமுமாகும்.

இலங்கையில் நடைபெறும் ஆயுதப்போராட்டம் தமிழ்மக்கள் உயிர்வாழ்வதுடன் சம்மந்தப்பட்டது. இரண்டுவேறு இனங்களுக்கு இடையிலுள்ள பிரச்சினை இரு மொழி மக்களுக்கு இடையிலான பிரச்சினை இருவேறு பிரதேசங்களுக்கிடையிலான பிரச்சினை இரு மதங்களை பின்பற்றுபவர்களுக்கு இடையிலான பிரச்சினை.

வட அயர்லந்து பிரச்சனை ஒரே மொழியோடு ஒரே இனத்தவருக்கிடையிலான அரசியல் ஆதிக்கம் சம்மந்தப்பட்ட பிரச்சினை, ஒரே மதத்தை சேர்ந்த இரு பிரிவினர் சம்மந்தப்பட்டது.

வட அயர்லாந்து நிலம் பிரதேசம் அபகரிக்கப்படவில்லை. திட்டமிட்டு இன அழிப்பில் யாரும் ஈடுபடவில்லை. ஒரு இனத்தை சேர்ந்த இளைஞர்கள் சிறைப்படுத்தி வதை செய்யப்படவில்லை.

வட அயர்லாந்துப் பிரச்சினையுடன் விடுதலைப் புலிகளை ஒப்பிடுவதும் ஆயுதங்கள் களைய வேண்டும் என்பதும் அறியாமையின் வெளிப்பாடேயாகும்.

– எஸ்.எம்.ஜீ

# செய்தித்துளிகள்

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வெடி விபத்துச் சம்பவமொன்றில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். உன்னிச்சை 08ம் கட்டையைச் சேர்ந்த 2ம் லெப்டினன் அழகுமதி (விநாயகமூர்த்தி - விஜயகுமார்) என்பவரே இவ்வாறு வீரச்சாவடைந்தவராவார். இவரது வித்துடல் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மகிழடித்தீவு மக்களுக்கு தற்காப்புப் பயிற்சி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை மகிழடித்தீவு மைதானத்தில் இடம்பெற்றது. தற்காப்புப் பயிற்சியின் அவசியம் பற்றி எடுத்துரைக்கப்பட்டதுடன் போராளிகளால் பயிற்சி வழங்கப்பட்டது. கிராமத்திலுள்ள பொதுமக்கள் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டனர். இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை வர்த்தகர்களுக்கான கிராம தற்காப்புப் பயிற்சி கொக்கட்டிச்சோலை பொது விளையாட்டு மைதானத்தில் வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது சிறீலங்காப் படையினரும், சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் நடாத்தும் தாக்குதல் சம்பவங்கள் இனியும் தொடருமானால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என அக்கினிப் படை எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துண்டுப் பிரசுரத்தில், படையினர், புலனாய்வுப் பிரிவினர் நடாத்தும் தாக்குதலை இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது தாக்குதல் தொடருமானால் பதில் தாக்குதல் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை மிகிந்தபுர பாடசாலையில் ஆண்டு 10ல் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் கடந்த 25ம் திகதி நள்ளிரவு அருகில் உள்ள இராணுவ முகாமினுள் சென்று அங்குள்ள சிப்பாய் ஒருவரின் ரி-56 ரக துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சென்ற ளேையில் அவரைப் பின் தொடர்ந்து துரத்திய சிப்பாய் ஒருவரை அந்த துப்பாக்கியினால் சுட்டுக் கொன்றுள்ளார். சிப்பாயை சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிய மாணவனை ஏனைய இராணுவத்தினர் சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர். குறிப்பிட்ட மாணவன் தற்போது மிகிந்தபுர காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். குறித்த மாணவன் தனது சகோதரனால் நல்வழிப்படுத்தும் நோக்கில் கடுமையாக தண்டிக்கப்பட்டதால் கோபம் அடைந்தனாலேயே இவ்வாறு செயற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி.யில் இருந்து கடந்த பத்து நாட்களுக்கு முன் விலகிய ஒருவர் செவ்வாய்க்கிழமை இரவு மட்டக்களப்பு திமிலைத்தீவில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். திமிலைத்தீவு சீலன் கடை ஒழுங்கையால் சென்றுகொண்டிருந்த போதே சைக்கிளொன்றில் வந்த இருவர், இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான தங்கராசா ரமேஷ் (ஜோர்ஜ் - 27) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். நீண்டகாலம் இந்த இயக்கத்திலிருந்து இவர் கடந்த 10 நாட்களுக்கு முன்பே அதிலிருந்து விலகினாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.



சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் கடந்த வியாழக்கிழமை (28.07.05) சாவடைந்துள்ளார். குச்சவெளி, வீரஞ்சோலை 2ம் வட்டாரம் திருகோணமலையைச் சேர்ந்த வீரவேங்கை இசைமுடி என்றழைக்கப்படும் தங்கவேல் தயாசீலன் என்பவரே சாவடைந்தவராவார்.

கொழும்பு 12ல் உள்ள விடுதி ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தமிழ் இளைஞரொருவர் இனந் தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை கிருபாகரன் (26) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார். வெளிநாடு செல்லும் நோக்கில் கொழும்பு வந்து இந்த விடுதியில் இவர் தங்கியிருந்துள்ளார். மேற்படி விடுதிக்கு சென்ற இருவர் இவரை வெளியே அழைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மண்கும்பான் அராலிச் சந்தியில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நாரந்தனை மத்தியைச் சேர்ந்த தேவராஜன் அமிர்தபாலன் (26) என்பவர் உயிரிழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த ஜோசப் நிரோஜன் (20) என்பவர் படுகாயமடைந்தார். பிரஸ்தாப இருநபர்களும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வேகமாகப் பயணித்துக்கொண்டிருந்த வேளை, வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், வீதியை விட்டு விலகிச் சென்று மண்கும்பான் அராலி வீதியில் இருக்கும் மதகு ஒன்றுடன் மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காலி உனவட்டுன பகுதியில் விபசாரத் தொழிலில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்ட ஆறு சீனப் பெண்களும் நீதிமன்றத்தில் இருந்து தப்பியோடியதை அடுத்து காலி குற்றப்புலனாய்வுப் பொலிசார் அவர்களைத் தேடி வருகின்றனர். மருத்துவ சிகிச்சை நிலையம் என்ற பெயரில் நடத்தப்பட்ட விபசார விடுதியில் இப்பெண்கள் இரண்டு வருடங்களாக இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என விசாரணைகள் மூலம் தெரியவந்தது. இந்நிலையில் இவர்களுடன் தொடர்பு கொண்டவர்கள் உடனடியாக இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுமாறும் பொலிசார் அறிவுறுத்தி வருகின்றனர்.

சிறீலங்காவிற்கு ஆழிப்பேரலை நிவாரண நிதியாக 49 மில்லியன் யூரோவை ஜேர்மன் அரசு அளித்துள்ளது. சிறீலங்கா நிதி அமைச்சு வட்டாரங்கள் இதைத் தெரிவித்தன. ஜேர்மனிடமிருந்து சிறீலங்கா கடனாகப் பெற்ற 13 மில்லியன் யூரோவைத் திரும்பச் செலுத்தும் காலத்தை ஓராண்டு காலத்துக்கு அந்நாடு நீடித்துள்ளதாகவும் அரச தரப்பு தெரிவிக்கிறது. ஜேர்மனுக்கும் சிறீலங்காவுக்கும் இடையே நிதி உதவி தொடர்பான ஒப்பந்தம் இன்று செவ்வாய்க்கிழமை காலை கையெழுத்தானது. சிறீலங்காவுக்கான ஜேர்மன் தூதுவர் மற்றும் சிறிலங்கா நிதித்துறை செயலாளர் ஜயசுந்தர ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடனர்.

# இலங்கைத் தமிழ் தம்பதிகள் லெபனானில் படுகொலை

(01.08.05)

லெபனான் தலைநகர் பெரூட்டில் மிகநீண்ட காலமாக வெளிநாட்டு தொழில் அனுமதி பெற்று வாழ்ந்து வந்த தமிழ் குடும்பம் ஒன்று படுகொலை செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சுன்னாகத்தை சேர்ந்த தம்பதிகளான பீற்றர் - சுமதி ஆகிய இருவருமே இனம் தெரியாதோரினால் அவர்களது இல்லத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

பீற்றர் பெரூட்டில் ஓர் கட்டடத்தின் காவலாளியாக மிக நீண்ட காலமாக கடமையாற்றி வந்ததுடன் இருவரும் அதே கட்டடத்திலேயே நீண்ட காலமாக வசித்தும் வந்துள்ளனர். இந்நிலையில் கடந்த யூலை 26ம் திகதி இவர்கள் இருவரது சடலங்களை லெபனான் பொலிசார் இவர்கள் வாசித்து வந்த இல்லத்திலிருந்து அடி காயங்களுடனும், துப்பாக்கி சூட்டு காயங்களுடன் மீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனையின் போது இவர்கள் சடலங்கள் மீட்பதற்கு 24 மணிநேரத்திற்கு முன்னரே இருவரும் படுகொலை செய்யப்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்படுகொலைபற்றி ஆராய்ந்து வரும் லெபனான் பொலிசார், பல சந்தேக நபர்களை விசாரித்துள்ளதாக தெரியவருகின்றது.

இவர்களது சடலங்கள் தொடர்ந்து லெபனான் மருத்துவமனையில் தற்காலிகமாக உடல்கள் வைக்கும் அறையில் லெபனான் பொலிசாரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது. இவர்கள் சடலங்களை சிறீலங்காவுக்கு அனுப்ப கையளிக்கும் வேளையில் இவர்களது லெபனான் வாழ் நண்பர்கள், ஓர் இரங்கல் கூட்டமொன்றை பெயட்டில் ஒழுங்கு செய்யவுள்ளனர் என லெபனான் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களாக லெபனானில் பல சிரியா நாட்டு ஆதரவு குழுக்கள் அங்கங்கே பல குண்டுகளை வெடிக்கவைத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

(01.08.05)

கனடா, ரொரன்ரோவில் நேற்று முந்தினம் சனிக்கிழமை இரவு 11:50 மணியளவில் உமாதேவன் தியாகராஜா (26) என்ற தமிழ் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக ரொரன்ரோ காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். வோடன் - பிஞ்ச் சந்திப்பில் உள்ள கடைத்தொகுகளின் வாகன தரிப்பிடத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதையடுத்து தாம் அங்கு சென்றபோது, உமாதேவன் தியாகராஜாவின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இவரைச் சுட்டுக்கொன்றவர்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை எனவும் இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# யாழ். இளைஞர்கள் வவுனியாவில் குரல்வளை வெட்டிக்கொலை

(01.08.05)

வவுனியா - மணிப்புரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வீதியோரத்தில் குரல்வளை வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட இரு சடலங்களும் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டன.

படுகொலை செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களென அவர்கள் வசமிருந்த தேசிய அடையாள அட்டைகள் மூலம் தெரியவந்தது. கொல்லப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குமாரசாமி பத்மநாதன் (23) எனவும் இவரது அடையாள அட்டையில் கொட்டாஞ்சேனை, கொழும்பு-13 எனவுள்ளது. மற்றவர் சரசாலை தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியன் கோகிலன் (26) ஆகிய இரு இளைஞர்களே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களாவர். கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு திங்கட்கிழமை இரவு வாடகைக்கு அமர்த்திச் சென்ற வாகனம் ஒன்றின் சாரதியும், உதவியாளருமே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

17 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த வாகனத்தை கடத்திச் சென்றவர்களே இந்த இரட்டைக் கொலையைச் செய்துள்ளனர் என பொலிசார் தெரிவிக்கின்றனர். கடத்தப்பட்ட இந்த வான் குறித்து நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். இதுபோன்ற சம்பவங்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்றதால் கொழும்பு மற்றும் தூர இடங்களில் இருந்து வாடகைக்கு வாகனங்களை அமர்த்தி வருபவர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தோம் எனவும், ஆனால் அதனை பொருட்படுத்தாமல் சிலர் செயற்படுவதால் தான் இவ்வாறான பரிதாபகரமான சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

### சீன யுத்த விமானங்கள் கொழும்பை வந்தடைந்தன

# சந்திரிகா சீனா பயணம்

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் 28ம் திகதி முதல் ஒரு வார காலத்துக்கு சீனாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். சீன ஜனாதிபதி ஹி ஜின்டாவின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த விஜயம் மேற்கொள்ளப்படுதாகத் தெரிவிக்கப்படுகிறது. சீனாவில் தங்கியிருக்கும் காலத்தில் பீஜிங்கில் நடைபெறவுள்ள பீஜிங் பெண்கள் மாநாட்டில் [29ம் திகதி] அவர் பிரதான உரை ஆற்றவுள்ளார். இதனைத் தவிர இரண்டு நாடுகளுக்கும் இடையிலும் பல ஒப்பந்தங்களும் செய்துகொள்ளப்படவுள்ளன.

இதுஇவ்வாறிருக்க, சீன நாட்டிலிருந்து கே-8 தரத்திலான குண்டு வீச்சு விமானங்கள் கடந்த வாரம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன. கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தை வந்தடைந்த 3 கே-8 ரக விமானங்களை சிறீலங்கா அரசாங்கத்துக்குக் கையளிக்கும் வைபவம் கொழும்பு கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தில் நடைபெற்றது.

இதில் சீன நாட்டின் சிறீலங்கா தூதுவர் சன்கொய்ங் விமானங்களை விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்சல் டொனால்ட் பெரேராவிடம் கையளித்தார். இந்த விமானங்கள் 2001ம் ஆண்டு முதன் முதலில் இலங்கையில் குண்டு வீசுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. கட்டுநாயக்க யுத்த விமானத் தளத்தைத் தாக்கியதன் ஊடாக இந்த விமானங்கள் அழிக்கப்பட்டிருந்தன. தற்போது மீண்டும் விமானப்படையினரால் யுத்தத்துக்கு இவை பயன்படுத்தப்படவுள்ளன.

# அமைதி வழியில் செயற்படும் அமைப்புகளுக்கு ஆதரவளிக்க உரிமை உண்டு

**- அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு**

[01.08.05]

அமெரிக்காவில் உள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் அமைதி வழியில் செயற்படும் அமைப்புக்களுக்கு ஆதரவளிக்க உரிமை உண்டு என்று அமெரிக்க நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது. இலங்கையிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், துருக்கி நாட்டிலுள்ள குர்திஸ்தான் அமைப்பின் பகுதிகளிலும் இயங்கும் அரசியல் அமைப்புகளுக்கு உதவி வழங்குவதில் இருந்த தடைகளுக்கு எதிராக 'சட்டபூர்வ உரிமைகளுக்கான மையத்தினால்' தொடரப்பட்ட வழக்கொன்றிற்கு ஆதரவாகவே லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

குறிப்பாக, கடந்த ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு கிழக்கு கரையோரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருப்பதும், அங்கு பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகளின் முக்கியத்துவத்தினையும் இந்த வழக்கு முன்னிறுத்தி வாதாடியதையும் இந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதலை புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையில் நடைபெற்று வரும் சமரசப் பேச்சுக்களில் சட்டபூர்வ ஆலோசனைகளை வழங்குவதற்கும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு அரசியல் ஆதரவு வழங்க விரும்புவதாகவும், இந்த மையம் தனது வழக்கில் மேலும் குறிப்பிட்டிருந்தது. சட்டத்தரணியும் ஜோர்ஜ் ரவுன் பல்கலைகழக சட்டத்துறை பேராசிரியருமான டேவிட் கோல்லே இந்த மையத்தின் சார்பாக வாதாடியது இங்கு குறிப்பிடத்தக்கது.

தடை செய்யப்பட்ட பட்டியலில் இந்த அமைப்புக்கள் இருப்பினும், அவற்றின் அமைதி வழி நடவடிக்கைகளுக்கு சட்டபூர்வமாக ஆதரவளிக்க உரிமை உண்டு என்பதனை நீதிமன்றம் ஏற்றிருப்பதனை பாராட்டுவதாக டேவிட் கோல்லே இந்த தீர்ப்பு தொடர்பாக தனது கருத்தினையும் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு அமைப்புகளை தடை செய்வதற்காக பயன்படுத்தப்படும் அமெரிக்க தேசாபிமான சட்டத்தின் சில சட்ட பிரிவுகளுக்கு அமெரிக்க காங்கிரஸ் போதியளவு விளக்கமளிக்க முயற்சிக்கவில்லை என அமெரிக்க நீதவான் ஓட்ரி கொலின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் தீர்ப்பளித்துள்ளார். இந்த சட்டம் சாதாரண மனிதர்கள் புரிந்து கொள்ளத்தக்க வகையில் வகையில் இயற்றப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


**மலர் வீடியோ விஷன்**

உங்கள் இல்லத்தில் நடைபெறும் மங்களகர வைபவங்களைச் சிறப்பிக்க

◆15 வருட அனுபவ சேவையில்◆ ◆மேளவாத்திய ஒழுங்கு மண்டப ஒழுங்கு◆
◆வீடியோ சேவை புகைப்பட சேவை◆ ◆சுவை மிகுந்த உணவுப்பரிமாற்ற சேவை◆
◆மணவறைகள் ஐயர் ஒழுங்கு◆

அனைத்திற்கும் ஒரே இடத்தில் தொடர்புகொண்டு உங்கள் மங்களகர வைபவத்தைச் சிறப்பாக கொண்டாடுங்கள்

Mittelweg 113G
4938 Rohrbach -Swiss

தொடர்புகட்கு 06 29 65 04 74 - 06 29 65 04 33


# ஆயுதக் குழுக்களே இல்லை என்று சந்திரிகா சொல்வது நகைப்புக்குரியது

**- சு.ப.தமிழ்ச்செல்வன்**

தமிழர் தாயகத்தில் சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமிப்புப் பகுதியில் ஆயுதக் குழுக்களோ இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களோ எதுவும் இல்லை என்று சிறீலங்கா அரசுத் தலைவர் சந்திரிகா கூறியிருப்பது பெரும் நகைப்புக்குரியது என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை தமிழீழ சட்டவாக்கல் கல்லூரியினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், எமது விடுதலைப் போராட்டம் வித்தியாசமான முன்னுதாரணத்தை தந்து நிற்கின்றது. நாம் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு போர்ச் சூழலுக்கு மத்தியில் வெற்றியீட்டியிருக்கின்றோம். இந்த செயலகத்தைக் கூட புலம்பெயர்ந்து வாழும் எமது நாட்டுப்பற்றாளர் அமைத்துத் தந்திருக்கின்றார். இந்த ஆர்வம் ஒவ்வெருவர் மனதிலும் உருவாகி வருகின்றது. இது நிச்சயம் எமது தேசம் விடுதலையடையும் என்ற நம்பிக்கையை தந்திருக்கின்றது.

சிங்களவர் ஆக்கிரமிப்பில் உள்ள பிரதேசங்களை விடுவிப்பதில் அக்கறையுள்ள அளவுக்கு மக்கள் சுதந்திரமாக நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதிலும் தேசியத் தலைவர் அக்கறை கொண்டிருக்கின்றார். விடுவிக்கப்பட்ட பிரதேசத்தின் கட்டுக்கோப்பை - நிர்வாகக் கட்டமைப்பை தேசியத் தலைவர் உருவாக்கியிருக்கின்றார். நீதித்துறை, காவல்துறை போன்ற அனைத்துக் கட்டமைப்புக்களையும் தலைவர் தீர்க்க தரிசனத்துடன் மக்களின் ஆதரவோடு அமைத்தார்.


தமிழீழ தேசம் - தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் அடிப்படை வாழ்வுரிமைகளை உறுதிப்படுத்துவதில் ஒன்றிணைந்திருக்கின்றார்கள். மூன்றரை ஆண்டுகால சமாதானத்துக்கான காலத்தில் சிறீலங்காவுக்கு தமிழர் தேசம் வழங்கிய அரிய சந்தர்ப்பத்தை சிங்கள தேசம் தவறவிட்டுள்ளது. அதனால், தமிழ் மக்கள் தீர்க்கமான முடிவெடுக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த சட்டவாக்க செயலகம் திறந்து வைக்கப்படுவது தமிழ் மக்களுக்கு பெருமையளிப்பதாகும். ஏனெனில், சிறீலங்காவின் ஒடுக்குமுறை சட்டமுறைமைகள் எமது தேசத்திற்கு அநீதிகளை, மிகப் பெரும் அழிவையே தந்துள்ளது. இந்த மூன்றரை ஆண்டுகால சமாதான முயற்சிகளில் சிறீலங்காவின் நீதித்துறை தமிழ் மக்களுக்கு எவ்வாறு நீதி வழங்கியது என்பது அனைவருக்கும் தெரியும். நிறைவேற்று அதிகாரமுள்ள அரச தலைவரால் ஏற்கப்பட்ட உடன்பாட்டை முடக்கும் தீர்ப்பை அண்மையில் சிறீலங்கா நீதிமன்று வழங்கியுள்ளதை தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே பார்க்கின்றோம். மனிதாபிமான நடவடிக்கைக்கு நாம் நல்லெண்ண அடிப்படையில் அரசியல் பிரச்சினைகளை முன்வைக்காமலே சர்வதேசம் முன்வைத்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டோம். சிறீலங்கா ஆறு மாதமாக இதை இழுத்தடித்து சர்வதேச உதவிகள் மக்களைச் சென்றடையாமல் தடுத்தது.

இறுதியில் தமது அரசியல் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக இதைப் பயன்படுத்தியது. இது திட்டமிட்ட ஒரு நாடகமாகவே அரங்கேறியது. சிறீலங்காவின் அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தை தேச நலனுக்காக பயன்படுத்த எடுக்கும் முடிவை எவராலும் தடுக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், சிறீலங்காவின் நீதிமன்று அதற்கு தடைவிதித்து தீர்ப்பளித்தது. சிறீலங்கா அரச தலைவரதும் நீதித்துறையினதும் திட்டமிட்ட செயற்பாடாகும்.

பொதுக்கட்டமைப்பு என்பது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்வாழ்வளிக்கும் ஒரு சாதாரண கட்டமைப்பு. இக்கட்டமைப்பினையே முடக்கும் வகையில் சிறீலங்கா நீதிமன்றின் தீர்ப்பு அமைந்ததானது தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு எந்தத் தீர்வினையும் வழங்கத் தயாரில்லை என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றது. சிறீலங்காவின் நீதிமன்ற தீர்ப்பானது சிறீலங்கா அரசத் தலைவர் தனது அரசியல் செல்வாக்கை பாதுகாக்கவும் சிங்கள சமூகத்திடம் இருந்து தப்பித்துக் கொள்ளவுமே பயன்படுத்தியிருக்கின்றார். சிறீலங்கா நீதித்துறை வரலாற்றிலேயே தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கின்ற சந்தப்பங்களில் பிழையான தீர்ப்புக்களை வழங்கி தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்காத வகையில் செயற்பட்டுவந்திருக்கின்றது.

சர்வதேச சமூகம் தற்போது ஒரு உண்மையை புரிந்து இருக்கின்றது. இலங்கைத் தீவிலேயே இரண்டு தேசங்கள் உள்ளன. இரு படைகள் உள்ளன. தமிழர் தாயகத்திலேயே நடைமுறை அரசு இருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து இருக்கின்றது. போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டுயிருந்த காலத்தில் நீதிமன்றம் செல்லாத சிங்கள பேரினவாத சக்திகள் சாதாரண பொதுக்கட்டமைப்புக்கு நீதிமன்றம் சென்றது நகைப்புக்குரியது. ஆனால் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு சிங்கள பேரினவாத சக்திகள் நீதிமன்றம் செல்லாதது சமபலம் பொருந்திய இரு படைகளுக்கிடையே ஏற்பட்ட உடன்பாடு என்பதால் நீதிமன்றம் செல்ல முடியவில்லை. நீதிமன்றத்தாலும் தடை உத்தரவை போட முடியவில்லை. தடை உத்தரவு போடப்பட்டியிருந்தால் சிங்கள தேசம் பேரழிவைச் சந்தித்திருக்கும். சந்திரிகா அம்மையார் சர்வதேச சமூகத்தினரைச் சந்தித்து ஒரு கேலிக்குரிய முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கின்ற மாதிரியான கதை கூறியிருக்கிறார். ஆயுதக் குழுக்களுக்கும் தமது அரசுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று கூறியிருக்கிறார். சர்வதேச சமூகம் கூட அரசுடன் இணைந்து ஆயுதக்குழுக்கள் இயங்குகின்றன என்ற உண்மையைப் புரிந்து அறிக்கைகள் விடும் நிலையில் சந்திரிக்கா அம்மையார் பொய்யான கதை அளந்திருப்பது நகைப்புக்குரியது என்றார் அவர்.




# *T.M.S* சற்றலைற்றின்


# புதிய நிர்வாகத்தில்...

# SKYROSE


## Electronics & Satellite




**Samsung - 210 €**
**2 Card** போடக்கூடியது




**Sat Star - 99 €**
**1 Card** போடக்கூடியது




**XSat - 190 €**
**2 Card** போடக்கூடியது



**Pixx - 130 €**
**4 Card** போடக்கூடியது



**Strong - 139 €**
**2 Card** போடக்கூடியது



**Rex II - 110 €**
**2 Card** போடக்கூடியது

**14, Rue Cail, 75010 Paris**

**Tél : 06 27 06 21 21**

# ஜரிஸ் போல் புலிகளும் ஆயுதங்களை கையளிக்க வேண்டும் என்று கோருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல

**– ஜோசப் பரராஜசிங்கம்**

(01.08.05)

தமிழ்த் தேசியத்திற்கு பாதுகாப்பு அற்ற சூழலில் ஜரிஸ் விடுதலை இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்தது போன்று விடுதலைப் புலிகளும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல. பிரித்தானியாவில் உள்ள ஜரிஸ் விடுதலை இராணுவம் போன்று விடுதலைப் புலிகளும் ஆயுதங்களை கையளிக்க வேண்டும் என்று சிறீலங்கா அரசு கோரிக்கை விடுத்திருப்பது தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஐ.பி.சி தமிழ் வானொலிக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியத்திற்கு பாதுகாப்பு அற்ற சூழலில் ஜரிஸ் விடுதலை இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்தது போன்று விடுதலைப் புலிகளும் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல. காரணம் என்னவெனில், விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசாங்கமும் யுத்த நிறுத் ஒப்பந்தத்தில் ஆர்வமில்லை அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் 14 நாட்கள் தவணையுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறலாம் என்று யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூட தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.


இவ்வாறான சூழ்நிலையில் கடந்த மூன்று வருடங்களும் நான்கு மாதங்களாக சமாதானப் பேச்சுவார்த்தை தொடரப்பட்டு ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு பிற்பாடு அது தடைப்பட்டிருக்கிறது, இடைநிறுத்தப் பட்டிருக்கிறது ஆனால் பேச்சுவார்த்தை இன்றுவரை தொடரவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக அந்த அடிப்படை தேவைகூட பேச்சுவார்த்தைக்காக எடுக்கப்படவுமில்லை. அது முன்னெடுத்துச் செல்லப்படவுமில்லை.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தேசிய அழிவு என்று கூறப்படுகிற ஆழிப்பேரலையின் பின்னரும் கூட அதற்கான மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பொதுக்கட்டமைப்பைக் கூட அரசு வழங்க முன்வராமல் அதனை கைச்சாத்திடுவதற்குக் கூட ஆறு மாதகாலம் இழுத்தடித்திருந்தது. சிறீலங்காவின் நீதித்துறை கூட அதனை தடை செய்துள்ளது. இவ்வாறான ஒருவித சூழலில் எவ்வாறு விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க முடியும்.

தமிழ் மக்களுடைய பலமே தமிழீழ விடுதலைப் புலிகளுடைய ஆயுதம் தான். தீர்வோ முறையான தீர்வு ஏற்பட்டு தமிழர்கள் கோருகின்ற அதே அடிப்படையில் தங்களைத் தாமே பார்த்துக் கொள்ளக்கூடிய அடிப்படையில் ஒரு தீர்வை எய்து தங்களுடைய தாயகத்தை தாங்களே ஆழக்கூடிய சூழ்நிலை ஏற்படாதவிடத்தில் அந்த ஆயுதம் என்கின்ற முழுமையான தற்பாதுகாப்பை ஒப்படைக்க முடியாது. இது ஒரு தவறான செயலாகும். முதலில் அவர்கள் பிரச்சனையை தீர்க்கட்டும். பிரச்சனையைத் தீர்த்த பிற்பாடு தமிழீழ விடுதலைப் புலிகள் அது தொடர்பாக சிந்திப்பார்கள் என்றார்.

# படைபலத்தை பிரயோகிக்கும்படி மக்கள் விடுதலைப் புலிகளைத் தூண்டுகின்றார்கள்

**– இளந்திரையன்**



(01.08.05)

தமிழர்களைப் பொறுத்த வரையில் சிறீலங்கா படை ஒரு கொலைப்படை. அது அச்சுறுத்தல் விடுவது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. ஆனால், தமிழினத்திடம் பலம் உண்டு. இவ்வாறான காடைத்தனங்களைக் கண்டு தமிழ் மக்கள் விரக்தியடைந்து படைபலத்தை பிரயோகிக்கும்படி விடுதலைப் புலிகளைத் தூண்டுகின்றார்கள் என மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் மட்டக்களப்பில் சிறீலங்கா படையினர் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டமை குறித்து கருத்து தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் சிறீலங்கா படையினர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். கடந்த வாரம் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான முறையில் செயற்படும் தனிநபர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கும் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்துள்ளனர். இதுகுறித்து மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் மேலும் தெரிவிக்கையில்,


தமிழ் மக்களின் ஜனநாயக வெளிப்பாடுகளை காடைத்தனமான அடக்குமுறைகள் மூலம் அடக்க நினைப்பதும் மிரட்டல் விடுப்பதும் சிங்கள இனவாதத்தின் வழமையான செயல்தான். தந்தை செல்வா காலத்திலிருந்தே இதற்கான சான்றுகள் உள்ளன. தமிழ் மக்கள் தங்கள் உணர்வுகளை உலகுக்கு வெளிப்படுத்துவதற்கான உரிமையை சிங்கள அரசும் படைகளும் மறுத்து வருகின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பார்வையிடுவதையே சிங்களம் விரும்பவில்லை.

இந்தக் கொலை மிரட்டல் துண்டுப் பிரசுரத்தைக்கூட சிறீலங்கா அரச படைகள்தான் அச்சிட்டு வெளியிட்டுள்ளன. அவர்களே ஒரு வெள்ளை நிற வாகனத்தில் இரவோடிரவாக தெருக்களில் அவற்றை வீசிச் சென்றதை பலர் பார்த்திருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

# நீதிமன்றத் தீர்ப்புக்களில் புலிகளின் தலையீடுகள் இல்லை

## விடுதலையான ஊர்காவல் படையினர் தெரிவிப்பு

கடந்த வெசாக் பண்டிகையன்று (மே 24ம் திகதி) இரவு 11 மணிக்கு மட்டக்களப்பு வாழைக்காலையில் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவியபோது மூன்று சிறீலங்கா ஊர்காவல்படையினர் விடுதலைப் புலிகளால் அனுமதியின்றி உள்நுழைந்ததன் குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டனர். தமிழீழ நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றம் இவர்களை பிணையில் விடுவித்தது. தமிழீழ நீதிமன்றத்தால் கடந்த 7ம் திகதி விடுவிக்கப்பட்டதன் பின்னர், 45 நாட்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்துபெற்ற தமது அனுபவங்களை இவர்கள் சிங்கள இதழான லங்காதீபவிற்கு வழங்கியுள்ளனர். அதில் இருந்து...



விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவரான, அம்பாறை பக்கியெல்லவைச் சேர்ந்த

### *ஜனக பிரதீப் இவ்வாறு தெரிவித்தார்...*

'நாங்கள் மூன்று பேரும் மட்டக்களப்பிலுள்ள வாழைக்காலை என்ற ஊருக்கு சாந்தபாலவினுடைய உறவினர்களைப் பார்ப்பதற்காகச் சென்றோம். வெசாக் காலமென்பதாலேயே நாம் இங்கு போவதற்கு விரும்பினோம். வாழைக்காலை என்ற கிராமத்தில் புலிகள் எங்களைப் பிடித்தார்கள். முதலில் சாந்தபால பிடிபட்டார். அதன்பின்னர் சமிந்தவையும் என்னையும் பிடித்துச் சென்றனர். மே மாதம் 25ம் திகதியே புலிகள் எங்களைப் பிடித்தனர். நாங்கள் திரும்பி வருவோமென்று ஒருபோதும் நினைக்கவில்லை.

நாங்கள் மூவரும் வாழைக்காலை கிராமத்துக்குச் சென்று சாந்தபாலவினுடைய சின்னம்மாவின் வீட்டில் தங்கியிருந்தோம். சாந்தபாலவும் இன்னொரு தமிழ் இளைஞரும் சைக்கிள் ஒன்று எடுத்து வருவதற்காக எமது சயிக்கிளில் சென்றனர். இரவான பின்னர்கூட சாந்தபால சின்னம்மாவின் வீட்டிற்கு வரவில்லை.

இரவு 11 மணியளவில் எங்கள் இருவரையும் பிடித்துச் செல்வதற்காகப் புலிகள் வந்தார்கள். 25ம் திகதி திருப்பியனுப்புவதாகக் கூறிவிட்டு இருட்டில் எங்கோ கூட்டிச் சென்றனர். நாம் மன்னப்பிட்டி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பின்னர் அறிந்தோம். அதன்பின்னர் அவர்கள் எம்மை புலிகளின் பொலிசாரிடம் கையளித்தனர். நாங்கள் பின்னர் புலிகளின் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டோம். மூன்று தவணைகளுக்குச் செல்லவேண்டியிருந்தது.

அவர்களுடைய நீதிமன்றமும் அரசாங்க நீதிமன்றம் போலவேயிருந்தது. வழக்குகளை தமிழ் மொழியிலேயே நடத்துகிறார்கள். வழக்கறிஞர்கள் மிகவும் சுதந்திரமாக இயங்குவதாக எமக்குத் தெரிந்தது. பொலிசும் நீதிமன்றமும் புலிகளுடையது. எனவே நீதிமன்றத் தீர்ப்புக்களில் புலி இராணுவத்தின் தலையீடு இருக்குமென நாம் நினைத்தோம். பொலிஸ் நிலையப் பொறுப்பாளருக்குக் கொடுத்த உணவுதான் எமக்கும் தரப்பட்டது. அவருக்கு வெங்காயம் கொடுத்தால் எமக்கும் தருவார்கள். தவறு செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை மிகவும் கடுமையானது. ஆகையால் அவர்களுடைய பிரதேசங்களில் தவறு செய்பவர்கள் குறைவு. இங்குள்ள தண்ணீரின் சுவை உப்பு. இதனால் குடிக்கமுடியாது. குளிப்பதற்கு எங்களை ஆற்றுக்குக் கூட்டிச் சென்றனர். தலைமுடி வெட்டி, முகச் சவரம் செய்து ஆடைகளை உடுத்தி ஆயத்தமாகும்படி கூறினார்கள். நாங்கள் அன்று விடுவிக்கப்படுவோமென்று நம்பினோம்.'

### *சாந்தபால இவ்வாறு கூறினார்...*

'வாழைக்காலை கிராமத்தில் எங்களுடைய சின்னம்மா ஒருவர் இருக்கிறார். நாங்கள் மூவரும் அங்கு போனோம். அவர்கள் தமிழர்கள். சைக்கிள் ஒன்று எடுத்து வருவோமென்று சின்னம்மாவின் மகன் கூறினார். அப்படிப் போகும்போதுதான் புலிகள் என்னைப் பிடித்தனர். நாங்கள் வேவுபார்க்க வந்தோமென்று கூறித்தான் எங்களை பிடித்தார்கள். எங்களுக்கு அவர்கள் எவ்வித துன்பமும் செய்யவில்லை. எங்களைக் கொண்டு வேலை செய்விக்கவுமில்லை.

ஒரு வாரத்தில் நான்கு தடவைகள் கோழி இறைச்சி தந்தார்கள். ஏனைய நாட்களில் மீன் தந்தார்கள். எங்களை அவர்கள் அடைத்து வைக்கவில்லை. இருப்பினும் எந்த நேரத்தில் எங்களைக் கொல்லுவார்களோ என்று நினைத்துக்கொண்டுதான் அங்கிருந்தோம். செஞ்சிலுவைச் சங்கம், யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு ஆகியோர் இரண்டு மூன்று தடவைகள் எங்களை வந்து பார்த்துச் சென்றனர்.'


### *கே.எம். சமிந்த' இவ்வாறு கூறினார்...*

'புலிகள் இரவு 11 மணியளவில் வந்து எம்மை அழைத்துச் சென்றபோது அதுதான் எங்களுடைய கடைசிநாள் என நினைத்தோம். எங்களுடன் சிங்களம் பேசக்கூடிய தமிழர் ஒருவரும் இருந்தார். செய்யவேண்டிய எல்லாக் காரியங்களையும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டோம். சிங்களவர்கள் என்ற வகையில் எங்களைத்தான் முதன்முதலாக பட்டிப்பளை பொலிசிற்கு கொண்டு சென்றுள்ளனர். எல்லா இடங்களிலும் புலிகள் ஆயுதங்களுடன் இருந்தனர். அவர்கள் கூட்டங்கூட்டமாக அங்குமிங்கும் செல்வதை நாம் கண்டோம். புலிகளின் பொலிஸ்காரர்கள் நல்லவர்கள். அவர்கள் நீதியை மிகவும் கடுமையாகக் கடைப்பிடிக்கிறார்கள்.


# வரலாற்றின் திருப்பு முனையாக வவுனியா தமிழ் எழுச்சி மாநாடு

வவுனியாவில் நடைபெற்ற தமிழ் எழுச்சி மாநாடு ஒரு எழுச்சிமிக்க மாநாடாக அமைந்துள்ளது. சிறீலங்கா இராணுவத்தின் அச்சுறுத்தலால் அடங்கிக்கிடந்த தமிழினத்தை, யாழில் ஆரம்பித்த பொங்குதமிழ் நிகழ்வு எவ்வாறு எழுச்சிகொள்ள வைத்து யாழில் இருந்து தமிழீழம் எங்கும் பரவி புலம்பெயர் நாடுகள் எங்கும் பரவியதோ, அதேபோன்று இதுவும் வரலாற்றின் திருப்புமுனையாக விளங்கப்போவதும் உறுதி.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகத் துக்கு எடுத்துக்கூறும் வகையில் - தமிழ் தேசிய எழுச்சி மாநாடு வவுனியா - வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் கடந்த 27ம் திகதி புதன்கிழமை உணர்வுபூர்வமாக நடைபெற்றது.



இந்த மாநாட்டில் தமிழர் தாயகத்தின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் பொது அமைப்புக்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மலையக மக்கள் முன்னணி மற்றும் மேல்மாகாண மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள், மதத்தலைவர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம், தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சய், மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர்.





இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் தாயார் திருமதி மாப்பாணபிள்ளை ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் லெப்.கேணல் விக்ரரின் தந்தையார் ச.மருசலீன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை தமிழீழத்தின் அனைத்துப் பிரதேசப் பிரதிநிதிகளும் ஏற்றினர். சர்வமதத் தலைவர்களின் ஆசியுரையினைத் தொடர்ந்து தமிழ் மக்களின் கல்விப் புறக்கணிப்புத் தொடர்பான ஆய்வுக் கட்டுரையை முதலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத் தலைவர் நந்தகுமார் சமர்ப்பித்தார்.

நிகழ்வின் நிறைவில் பேராளர் மாநாட்டு பிரகடனத்தை யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் க.சிதம்பரநாதன் வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து நன்றியுரையினை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் எஸ்.விமலா நிகழ்த்தியதுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

இதேவேளை வெளியிடப்பட்ட பிரகடனத்தை தமிழீழத் தேசியத் தலைவரிடம் ஒப்படைக்கும் வகையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தூயவன் அரசறிவியல் கல்லூரியில் வைத்து நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் அரசியல்த்துறை, துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் கையளிக்கப்பட்டது.

## சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள்

வவுனியாவில் நடைபெற்ற தமிழர் தேசிய எழுச்சி மாநாட்டில் பேராளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 14 ஆய்வுக்கட்டுரைகளும் வருமாறு -

- சிறீலங்கா அரசின் திட்டமிட்ட கல்விப் புறக்கணிப்பு (பா.நந்தகுமார் - முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி. யாழ். பல்கலைக்கழகம்)
- தமிழினப் படுகொலைகள் (கணபதிப்பிள்ளை, அதிபர்.)
- சிறீலங்கா அரசின் கடல் வலய ஆக்கிரமிப்பும் கடல் வளச் சிதைவும் (சூரியகுமாரன், செயலாளர், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ். மாவட்டம்)
- இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசம் (உயர் பாதுகாப்பு வலயம்) (ச.விஜயரூபன், தலைவர், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்)
- திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், நிலப்பறிப்பும் (கனக சபை தேவகடாட்சம், இலக்கிய எழுத்தாளர், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதிய ஸ்தாபகத் தலைவர், திருகோணமலை)
- இடப்பெயர்வும், அவல வாழ்வும் (திரு.சூ.பத்மநாதன், தேசிய எழுச்சிப் பேரவை, மன்னார்)
- சிறீலங்கா அரசினால் தமிழர் தாயக விவசாயிகள் புறக் கணிப்பு (திரு.இ.கணேசபிள்ளை, கிளிநொச்சி மாவட்டம், வெகுஜன அமைப்பின் உப தலைவர், அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர்)
- தாயகப் பகுதிகளில் பேரினவாதிகளின் திட்டமிட்ட பெருளாதாரச் சீர் குலைப்பு (செல்வி வெ.ஜெயகலா, உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம், யாழ். மாவட்டப் பெண்கள் மேம்பாட்டுக்குழு)
- தாயகப் பகுதிகளில் கடற்கோள் அழிவுகளும், அரசின் பாராமுகமும் (இ.செல்வநாயகம், தேசிய எழுச்சிப் பேரவை உப செயலாளர், முல்லைத் தீவு)
- சிறீலங்கா அரசினால் கிறிஸ்தவ மதப் புறக்கணிப்பு (ஆண்டகை இராயப்பு ஜோசப் அடிகள், மன்னார்)
- முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் மீதான பேரினவாத அரசின் அடக்குமுறை (மௌலவி எஸ்.எம்.சகீர், முஸ்லிம்களுக்கான பணிமனை இயக்குநர், யாழ். மாவட்டம்)
- சிறீலங்கா அரசினால் இந்துமதப் புறக்கணிப்பு (திருமதி கண்மணி இரத்தினவடிவேல், பெண்கள் மேம்பாட்டு நிறுவனம், திருகோணமலை)
- தமிழ்ப் பெண்கள், குழந்தைகள் மீதான சிறீலங்கா பேரினவாதத்தின் தாக்கம் (திருமதி பத்மினி சிதம்பரநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் யாழ். மாவட்டம்)
- ஈழத் தமிழர் அரசியல் வரலாறு (மு.திருநாவுக்கரசு, அரசியல் ஆய்வாளர், தமிழீழம்)

## மாநாட்டு திடலருகில் கைக் குண்டு வீச்சுகள்

வவுனியாவில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு நடைபெற்ற இடத்திற்கு அருகே, காலையும் மாலையும் மூன்று குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள் ளன. மாநாடு நடைபெற்ற இடத்திற்கு அருகில் சுமார் 200 யார் தூரத்தில் பார்க் வீதியில் தொடருந்து கடவை அருகிலேயே முதல் குண்டு வீச்சு நடைபெற் றுள்ளது. மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இருவரே இக்கைக்குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். இதேநேரம் மாலை இப்பகுதியில் 2வது குண்டு வெடித்தது. கிளேமோர் ரகக் குண்டு வெடித்துள்ளது. மீண்டும் மாலை 6.15 மணிக்கு வவுனியா குருமன்காடு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் அருகே மூன்றாவது குண்டுவெடித்தது. மூன்று குண்டுவெடிப்புகளிலும் எவரும் காயமடையவோ, சேதங்கள் ஏற்படவோ இல்லை. தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டைச் சீர்குலைக்கும் வகையில் இராணுவம் நடாத்தி வரும் இந்தக் குண்டுவெடிப்புகள் குறித்து மாநாட்டில் பங்கேற்ற அனைத்துப் பிரதேச பிரதிநிதிகளும் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

## மட்டக்களப்பிலும் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு!


தமிழினத்தின் விடுதலைக்கான அவசியத்தை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் எழுச்சி பூர்வமாக நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பிற்பகல் 3 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும். இம் மாநாட்டில் தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய நிலை தொடர்பாகவும், சமாதானத்தின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்படவுள்ளது.

இதேவேளை, மாநாட்டில் கலந்து கொள்ளும் முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ மக்கள் தங்கள் பாரம்பரிய உடைகளிலும் பெண்கள் சிவப்பு மஞ்சள் உடைகளிலும் வருகை தருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மாவட்டத்தின், சகல பிரதேசங்களில் இருந்தும் பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்விமான்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பலதரப்பினரும் கலந்து கொண்டு தமது உணர்வுகளை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கவுள்ளனர்.

# மாநாட்டில் ஒலித்த குரல்கள்

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களே எடுத்த முயற்சியைத் தொடருங்கள். உங்கள் பின்னால் இலங்கைத் தீவில் வாழும் அனைத்துத் தமிழர்களும் நிற்கிறோம். தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மூன்று நிமிடங்கள்கூட போராட்டத்தில் ஒய்வு எடுத்ததில்லை. ஆனால் மூன்றரை வருடகால போர்நிறுத்த அமைதியை கடைப்பிடித்திருக்கின்றார். சிறீலங்கா அரசையோ சிங்களப் பேரினவாதிகளையோ நம்பி அவர் அமைதியைக் கடைப்பிடிக்கவில்லை, சர்வதேச சமூகத்திற்கு சிங்களப் பேரினவாதத்தைத் தோலுரித்துக் காட்டுவதற்காகவே அவர் அமைதி காத்தார். ஆனால் சமாதானம் என்கின்ற சவப்பெட்டிக்கு கடைசி ஆணி இப்போது அறையப்பட்டுக் கொணடிருக்கின்றது. சிங்கள அரசிற்கு கொடுக்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பம் முடிவடையப்போகின்றது. சர்வதேச சமூகம் இப்போது உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழ்மக்கள் போராடுவதை தவிர இனி வேறு வழியில்லை என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இன்னும் ஓர் யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் அது இந்த நாடு முழுவதையும் அதிரச்செய்யும்.

**- மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன்**





தமிழீழம் தான் இறுதித்தீர்வு என்ற தீர்மானத்திற்கு நாங்கள் கட்டாயமாக தள்ளப்பட்டு விட்டோம். இந்த சிங்கள தேசம் எதுவும் தராது. இடைக்கால நிர்வாகம் கேட்டோம் எதுவும் இல்லை. தமிழீழத்தை புலிகள் கேட்கவில்லை. தமிழ் மக்கள்தான் கேட்டார்கள். தந்தை செல்வா அன்று தமிழீழ பிரகடனத்தை செய்துவிட்டு மேடையில் இருந்து கீழே இறங்கி வந்து என்னிடம் சொன்னார், தம்பி என்னால் எதுவும் செய்ய முடியாது, எனக்கு வேறு வழி தெரியவில்லை. அதனால்தான் தமிழீழத்தை பிரகடனப்படுத்தினேன். தமிழ் மககளுக்கு தமிழ்த் தேசியத்திற்கு நல்லதொரு தீர்வை வழங்கக்கூடிய நல்ல சிங்கள தலைவனை காணவில்லை. என்று அவர் கூறினார். இதன் பின்னர்தான் அந்த குறிக்கோளை அந்த இலட்சியத்தை உறுதியோடு முன்னெடுக்க ஆரம்பித்தார்கள். சர்வதேச சமுகத்திற்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். சிங்களத் தலைமைகள் ஒன்றிணைந்து ஒற்றுமையாக ஒரு தீர்வைத் தர முன்வரவில்லையானால் தமிழீழம் என்ற எமது இலட்சியத்திற்கு ஆதரவு தர வேண்டும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கேட்டதைத்தான், பிரகடனப்படுத்தியதைத்தான் நாங்கள் இன்றும் கேட்கின்றோம்.

**- தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குழுத் தலைவர் இரா.சம்பந்தன்**

அடுத்த கட்ட ஈழப்போரில் தமிழர்களின் கட்டங்கள் மேல் குண்டு போட்டு தகர்த்தால் அதே நேரம் தென்னிலங்கை உள்ள கட்டடங்களும் தகரும். அந்தளவிற்கு இப்போது தமிழர்கள் பலமாக இருக்கின்றார்கள். வட்டுக்கோட்டையில் 1976ம் ஆண்டு நடைபெற்ற மாநாடு வரலாற்றில் பெற்ற முக்கியத்துவத்தை விட இந்த வவுனியா மாநாடு வரலாற்று முக்கியத்துவம் பெறப்போகிறது. தமிழீழ தேசியத் தலைவரின் வழிகாட்டலோடு தமிழர்கள் மிகவும் பலமான நிலையில் நடைபெறும் மாநாடு இது. இந்த மாநாடு எடுக்கும் முக்கியமான தீர்மானங்கள் எங்கள் விடுதலைப்போராட்டத்தை முக்கியமான கட்டத்திற்கு கொண்டு செல்லும்.

**- தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செல்வம் அடைக்கலநாதன்.**

தமிழர்களின் உரிமையை சர்வதேச சமூகம் மீட்டுத்தர வேண்டும் அல்லது போரின் மூலம் அந்த உரிமைகளை நாமே வென்றெடுப்போம். இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட உரிமை மறுப்பின் விளைவாக தங்களுடைய வாழ்வுக்காக ஆயுதப்போராட்டத்தை தவிர்க்க முடியாமல் தமிழர்கள் தெரிவு செய்தனர். இத்தகைய நிலையில் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மிலேச்சத்தனமான போரை கட்டவிழ்த்துவிட்டது. 1999ம் ஆண்டு மடுத்திருப்பதியில், இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவில் தஞ்சம் புகுந்திருந்த போது இராணுவம் அதனை ஆக்கிரமித்தது. மடுத்திருப்பதி நிலைமையை அரசுத் தலைவர் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு தெரிவித்து அதன்மீது படையெடுப்புச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டோம். அவ்வாறு படையெடுப்பு செய்யமாட்டோம் என்று கடைசிவரை வாக்களித்துவிட்டு அதற்கு மாறாக படையெடுப்புச் செய்ததால், மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். போராளிகள் ஆயுதங்களுடன் நின்றிருந்த போதும் மக்களைக் காப்பதற்காக படையினருக்கு எதிராக தாக்குதல் எதுவும் நடத்தாமல் நகர்ந்தனர். ஆனால், படைகள் மக்களை கொன்றொழித்த காரணத்தால் அப்படைகளை போராளிகள் ஓட ஓட விரட்டியடித்தனர். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சர்வதேச சமூகத்தை நம்பியே இந்த அமைதி நிலைக்கு தமிழ் மக்கள் வந்தனர். இலங்கை அரசை நம்பியல்ல. இன்று தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில் சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டும். அல்லாவிடில் போராட்டம் மூலம் தமது உரிமைகளை தாமே அமைத்துக் கொள்ள வேண்டிவரும்.

**- மன்னார் மாவட்ட ஆயர் வண.இராயப்பு ஜோசப்**

தமிழ் மக்கள் பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டார்கள். புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு என்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதீத உழைப்பாலும் தேசப்பற்றாலும் தமிழ் மக்கள் இன்று ஒன்று சேர்ந்திருக்கின்றனர். இறைமை, தன்னாதிக்கம் என்ற எங்களது வாசகங்களை இலங்கையின் சுதந்திரத்திற்காக நாங்கள் 1948ல் சொல்லிக்கொடுத்ததை இன்று சிங்களவர்கள் எங்களுக்கு கூறுகிறார்கள் என்று, 1976ல் தந்தை செல்வா சொன்னார். தமிழர்களின் முயற்சியால் இலங்கையின் இறைமை அன்று மாறியது. ஆனால் அந்த உரிமையை சிங்களவர் எங்களுக்கு தர மறுத்து விட்டார்கள். அன்று பல தமிழ்த் தலைவர்கள் சொன்னார்கள், எந்தவொரு தமிழனும் இனிமேல் சிங்களவர்களை நம்ப முடியாது என்று. தந்தை செல்வா சொன்னார் அன்று மலையக மக்களுக்கு நடந்தது, இன்று எங்களுக்கும் நடக்கும் என்று. முஸ்லிம் மக்களை பார்த்து தந்தை செல்வா உங்களுக்கு வாழ்வுரிமை இருக்கின்றது நாங்கள் ஒன்று சேருவோம் என்று சொன்னார். ஆனால் இன்று முஸ்லிம்கள் பேரினவாத சக்திகளின் சதித்திட்டத்திற்கு இரையாகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். தமிழ் மக்கள் என்று சுயநிர்ணய உரிமையை பெற்றுக் கொள்கின்றார்களோ அன்றுதான் சிங்கள மக்கள் சுதந்திர காற்றை சுவாசிப்பார்கள். எமக்கு சுதந்திரம் கிடைத்ததும் சிங்கள மக்களை நாங்கள் ஆதரிப்போம், அரவணைப்போம், சிங்கள மக்களுக்கு வேண்டிய உதவியை செய்வோம்.

**- விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்.**



தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென அன்று தந்தை செல்வா கூறினார். அந்தக் கடவுள் வேறு யாருமல்ல, தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்தான். தமிழர்களுக்கு எதுவுமே வழங்கக் கூடாது என்பதில் சிங்களப் பேரினவாதம் கவனமாகவே இருக்கிறது.
பொதுக்கட்டமைப்பு என்பது பொய்க் கட்டமைப்பாக மாறிவிட்டது. சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளை கூட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. முற்று முழுதாக சிங்களவர்களைக் கொண்ட இராணுவம் தான் இந்த நாட்டிலுள்ளது. இதனால்தான் புலிகளின் படை தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றது. புலிகளின் போராட்டத்தினால்தான் நாடு முழுவதிலுமுள்ள தமிழர்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள். இதனை யாரும் மறுக்க முடியாது.

**- மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் திரு. மனோ கணேசன்**



# மும்பாயில் கடும் மழை வெள்ளம் 1000ற்கும் அதிகமானவர்கள் உயிரிழப்பு

இந்தியாவின் மும்பாய் நகரிலும் அதனைச் சூழவுள்ள மகாராஷ்டிர மாநிலத்தின் இதர பகுதிகளிலும் பெய்த பெரும் மழையால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. 1000ற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர். மண்சரிவுகளில் அகப்பட்டே பலர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை பலர் காணாமலும் போயுள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகள் மற்றும் உடமைகள் வெள்ளத்தினால் அழிந்துபோயுள்ளன. தற்போது மழை விட்டுள்ளபோதும் தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளமையாலும், வெள்ளம் முற்றாக வடியாமையினாலும் பல்லாயிரக்கணக்கானோர் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். மழை ஓய்ந்துள்ள நிலையில் மீட்பு பணிகள் முனைப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர்களை மீட்க கடற்படையின் வள்ளங்களும், உலங்குவானூர்திகளும் பயன்படுத்தப்படுகின்றன.



மும்பாய் நகரில் ஒரு நாளில் மாத்திரம் 944.2 சென்ரி மீற்றர் மழை பெய்திருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் இதற்கு முன்னர் ஒரேநாளில் இந்த அளவு மழை பெய்ததில்லை என வளிமண்டல நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. பொதுமக்கள் வீட்டிற்கு வெளியே புறப்படுவதைத் தவிர்க்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள். இதேவேளை, மிருகங்களின் சடலங்களும், குப்பை கூளங்களும் பெருமளவில் காணப்படுவதால் தொற்று நோய்கள் உருவாகலாம் என்ற அச்சமும் காணப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்க, மாநிலத்தின் தலைநகரான மும்பாயின் சேரிப்புறம் ஒன்றில், சுனாமி மீண்டும் வந்து கொண்டிருப்பதாக வதந்தி கிளம்பியதில், ஏற்பட்ட அமளிதுமளியில், நெரிசலில் சிக்கி 22 பேர் கொல்லப்பட்டனர். வதந்தி பரப்பிய சந்தேகத்தின் பேரில் 17 பேர் கைது செய்யப்பட்டனர்.



# கற்பழிப்பை 'பாலியல் வன்முறையாக' மாற்ற வேண்டும்

## இந்திய தண்டனை சட்டத்தில் மாற்றம் செய்ய சட்ட ஆணைக்குழு கோரிக்கை

`கற்பழிப்பு` என்பதற்குப் பதில் `பாலியல் வன்முறை` என மாற்றவேண்டும் என மத்திய அரசுக்கு சட்ட ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது. உள்துறை இராஜாங்க அமைச்சர் எஸ்.ரகுபதி, டெல்லி மேல் சபையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் இந்த தகவலை தெரிவித்தார். அவர் கூறியதாவது, கற்பழிப்பு சட்டம் பற்றிய மறு ஆய்வின் 172வது அறிக்கையை சட்ட ஆணைக்குழு அளித்துள்ளது. அதில் `கற்பழிப்பு` என்ற வார்த்தைக்குப்பதில் `பாலியல் வன்முறை` என்ற வார்த்தையை பயன்படுத்தலாம் என்று சிபாரிசு செய்துள்ளது. கற்பழிப்பு தொடர்பாக பல்வேறு பிரிவுகளில் தொடரப்படும் வழக்குகளில் தண்டனையை அதிகரிக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது. ஆத்துடன் கள்ளத்தொடர்பு வைத்திருப்பவர்களை தண்டிக்கும் வகையில் புதிய சட்டப் பிரிவை சேர்க்கும்படியும் சட்ட ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

சட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து அமைச்சகங்கள் ஆய்வு செய்யும். அதன்பின்னரே அரசு இது விடயத்தில் முடிவு எடுக்கும். குற்றவியல் நீதித்துறை நிர்வாகம் மேலும் சிறப்பாக செயல்பட மாநில அரசுகள் அதிக கவனம் செலுத்தவும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க கூடுதல் அக்கறை செலுத்தவும் இந்த வழி காட்டுதல் நெறிமுறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2004ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளுக்கு சில யோசனை தெரிவித்து கடிதம் எழுதியது. அதில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடந்தால் உடனடியாக யாருக்கு தகவல் (ஹெல்ப்லைன்) தெரிவிக்க வேண்டும் என்ற அறிவிப்பை மருத்துவமனைகள், பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் எல்லோரும் அடிக்கடி பார்க்கக் கூடிய முக்கிய இடத்தில் விளம்பரப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளது.


பெண்களுக்கு எதிரான குற்றம் நடந்ததாக வரும் புகார்கள் உள்பட அனைத்து புகார்களையும் தாமதமில்லாமல் முதல் தகவல் அறிக்கையில் (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் முழு அளவில் விசாரணை நடத்தி, சம்பவம் நடந்த 3 மாதத்துக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவேண்டும் என்றும் உள்துறை அமைச்சகம் அதில் கூறியுள்ளது. இவ்வாறு மந்திரி ரகுபதி தெரிவித்தார்.

ஏற்கனவே, இலங்கை தமிழர்களின் நடைமுறையில் பெண்கள் மீதான பலாத்கார முயற்சிகளுக்கு கற்பழிப்பு என்ற சொல் கைவிடப்பட்டு 'பாலியல் வன்முறை' என்ற சொற்பதம் பாவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவில் இடம் தராவிட்டால் நிதி உதவி குறைக்கப்படும் என ஜப்பான் எச்சரிக்கை

ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவில் நிரந்தர உறுப்பினர் பதவியை தங்களுக்கு தராவிட்டால் ஐ.நாவுக்கான நிதி உதவி குறைந்து விடும் ஆபத்து ஏற்படும் என்று ஜப்பான் எச்சரித்துள்ளது. ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவில் உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இந்நிலையில் இந்தியா, ஜப்பான், ஜெர்மனி, பிரேசில் ஆகிய 4 நாடுகளும் தங்களுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரும் ஒரு தீர்மானத்தை ஐ.நா. பொதுச் சபையில் தாக்கல் செய்தன. அதில் உறுப்பினர் எண்ணிக்கையை 25 ஆக உயர்த்த வேண்டும் என்றும் கோரப்பட்டு இருந்தது.



ஆனால், பாதுகாப்பு ஆணைக்குழுவினை, பெரிய அளவில் விரிவுபடுத்துவதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. எனினும் இரு நாடுகள் மட்டும் நிரந்தர உறுப்பினர்களாக நியமிக்கப்படலாம். அதில் ஒரு இடத்துக்கு ஜப்பானை நியமிக்க அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. இந்த 4 நாடுகளின் அண்டை நாடுகளாக உள்ள பாகிஸ்தான், இத்தாலி, தென்கொரியா, சீனா, அர்ஜென்ரீனா ஆகிய நாடுகள் யாருக்கும் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து தரக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்து புதிய தீர்மானம் ஒன்றை தாக்கல் செய்துள்ளன.

இந்நிலையில் ஐ.நா. சபையின் செலவுக்காக அமெரிக்காவுக்கு அடுத்தபடி அதிக நிதி உதவி செய்து வரும் ஜப்பான், ஒரு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. தங்களுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்காவிட்டால், ஐ.நா.வுக்கு கொடுக்கப்படும் நிதியை குறைக்கும்படி ஜப்பானிய மக்கள் வலியுறுத்தும் அபாயம் ஏற்படும் என்று ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் நொபுரகா மச்சிமுரா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது அவர் கூறியதாவது, தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் தோல்வி ஏற்படும் என எதிர்பார்க்கவில்லை. தோல்வி ஏற்பட்டால் என்ன செய்வது என்பதை நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை. தோல்வி ஏற்பட்டால், ஐ.நா. வுக்கு நிதி உதவி செய்வதற்கு எதிர்ப்பு கிளம்பும், ஜப்பானிய மக்களின் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் உதவியை குறைக்கும் நிலை ஏற்படும் ஆபத்து உருவாகும்.

ஜப்பானுக்கு ஆதரவாக பெரும்பாலான நாடுகள் வாக்களித்தால், அதை சீனா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி இரத்து செய்து விடும் என்று நாங்கள் நினைக்கவில்லை. பாதுகாப்பு ஆணைக்குழுவை விரிவுபடுத்துவதுதன் நோக்கமே, வளரும் நாடுகளின் குரல் உலக அரங்கில் ஒலிக்க வேண்டும் என்பதுதான். எனவே இதற்கு குறுக்கே சீனா நிற்காது. இவ்வாறு அமைச்சர் மச்சிமுரா கூறினார். ஐ.நா. ஆண்டு தோறும் 120 கோடி அமெரிக்க டொலரைச் செலவிட்டு வருகிறது. இதில் 22 சதவீதத் தொகையை அமெரிக்கா கொடுக்கிறது. ஜப்பான் 19 சதவீதத் தொகையை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா போன்று நாங்களுக்கும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வோம்

- பாகிஸ்தான் கூறுகிறது

இந்தியாவுடன் அமெரிக்கா செய்து கொண்டது போன்ற ஒரு இராணுவ ஒப்பந்தத்தை செய்து கொள்ள தாங்களும் விரும்புவதாகவும், அப்போதுதான் இராணுவ நிலை சமமாக இருக்கும் என்று பாகிஸ்தான் வெளிவிகாரச் செய்தித் தொடர்பாளர் நதீம் கான் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது, நாங்கள் நேட்டோ இல்லாத மிகப்பெரிய நட்புநாடு என்பதால் இது போன்ற ஒப்பந்தத்தை செய்து கொள்ள விரும்புகிறோம்.

விண்வெளி தொழில்நுட்பம், அமைதி வழிக்கான அணுசக்தி ஆகிய துறைகளிலும் அமெரிக்காவின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம் என்று நதீம் கான் கூறினார்.

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் தனக்கு தோழமை நாடாக இருக்கும் பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசு இராணுவக்கூட்டு (நேட்டோ) இல்லாத மிகப்பெரிய தோழமை நாடு என்ற அந்தஸ்தை வழங்கியுள்ளது. இருந்தபோதிலும் அமெரிக்கா இந்தியாவுடன் இராணுவக் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அது தவிர சமீபத்தில் பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்கா சென்றபோது அவருக்கு இதுவரை அளிக்கப்படாத சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனையடுத்து மன்மோகன் சிங்குக்கு அளித்ததுபோன்று தனக்கும் சிறப்பு வரவேற்பு அளிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் கோரியபோது அதை அமெரிக்கா ஏற்க மறுத்து விட்டது. இந்நிலையில், இந்தியா போன்று தாமும் இராணுவ ஒப்பந்தமொன்றை செய்துகொள்ளப்போவதாக பாகிஸ்தான் கூறியுள்ளது. ஆனால், பாகிஸ்தானும், இந்தியாவும் சமமான நாடுகள் அல்ல. இந்தியா ஜனநாயக நாடு. அணு ஆயுதத்தை ஒழுங்காக பராமரித்து பாதுகாக்கிறது என்று கூறும் அமெரிக்கா கூபாகிஸ்தானின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுமா என்பது தெரியவரவில்லை.

# மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானம் சேற்றில் சிக்கியது 335 பயணிகள் உயிர் தப்பினார்கள்

மும்பை விமான நிலையத்தில் தரை இறங்கிய விமானம், ஓடு பாதையில் சறுக்கி விபத்துக்குள்ளானது. எனினும் பயணிகள் அனைவரும் காயங்கள் இன்றித் தப்பித்துள்ளனர். மும்பையில் பெய்த கடும் மழையினால், விமான போக்குவரத்து அனைத்தும் துண்டிக்கப்பட்டிருந்தது. விமான நிலையத்தின் பிரதான ஓடுபாதை வெள்ளத்தில் மூழ்கி இருந்ததால், அந்த வழியாக விமான போக்குவரத்து நடைபெறவில்லை. எனினும் 2வது ஓடு பாதை விமான போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டு இருந்தது.



இந்நிலையில் பெங்களூரில் இருந்து வந்த போயிங் விமானம் மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கி அங்கிருந்து ஜேர்மனியின் பிராங்போர்ட் வழியாக அமெரிக்காவின் சிகாகோ நகருக்குச் செல்ல வேண்டும். இவ்விமனாத்தில் பா.ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு உள்பட 335 பயணிகள் பயணம் செய்தனர்.


மும்பை விமான நிலையத்தின் 2வது ஓடு பாதையில் விமானம் தரை இறங்கியபோது மழை பெய்து கொண்டு இருந்தது. இதனால், விமானம் சறுக்கி சில மின்விளக்குகளை சேதப்படுத்தியபடி, ஓடுபாதையை தாண்டிச் சென்று முன்பக்க சக்கரம் சேற்றில் சிக்கி நின்றது. உடனடியாக அதிகாரிகள் விரைந்து சென்று அனைத்து பயணிகளையும் பத்திரமாக மீட்டனர். பின்னர் மாற்று விமானம் மூலம் சிகாகோ செல்லும் பயணிகள் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த விபத்து குறித்து மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் பிரபுல்பட்டேல் நிருபர்களிடம் கூறியதாவது, ஓடுபாதை முடிவதற்குள் விமானம் நின்றுவிடும் என்று விமானி கணித்து இருக்கிறார். மாறாக, சில அடிதூரம் தள்ளிச்சென்று விமானம் சேற்றில் சிக்கிவிட்டது. முழு அளவில் விமானி `பிரேக்` போட்டிருந்தால், சறுக்கலின் வேகம் அதிகரித்து இருக்கும், எனறார்.

# அரபிக் கடலிலுள்ள இந்திய எண்ணெய் அகழ்வுத் தளத்தில் தீ

## *10 பேர் பலி – 300 பேர் மீட்கப்பட்டனர்*

இந்தியா மும்பை அரபிக் கடலிலுள்ள இந்தியாவின் மிக முக்கிய எண்ணெய் அகழ்வுத் தளத்தில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தொன்றில் 10 பேர் வரை உயிரிழந்துள்ளனர். சம்பவம் இடம்பெற்ற போது, 300 பேர் வரையில் அங்கு பணியாற்றியதாகவும் பலரை தாம் மீட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கடற் படுக்கையை துளையிட்டு எண்ணெய் அகழும் நகரும் தொகுதி நிலையான தளத்துடன் மோதியதாலேயே இவ்விபத்து




ஏற்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் இடம்பெற்றபோது அத்தளத்தில் சுமார் 370 ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் பலர் உடனடியாக விரைந்து சென்ற மீட்புப் படையினரால் உயிருடன் மீட்கப்பட்டனர்.

மராட்டிய மாநிலம் மும்பையில் இருந்து மேற்கே 160 கடல் மைல் தொலைவில் அரபிக் கடலில் இந்த எண்ணைக் கிணறு உள்ளது. கடலின் அடியில் எண்ணை இருப்பது 1974ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. 1976ம் ஆண்டு முதல் அங்கிருந்து எண்ணை எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கு 3 இடங்களில் இரும்பு தளவாடங்களால் தளங்கள் அமைத்து கடலுக்கு அடியில் இருந்து எண்ணை எடுக்கப்படுகின்றது. இதுவே இந்தியாவின் மிகப் பெரிய எண்ணைக் கிணறு ஆகும். இந்தியாவில் உற்பத்தியாகும் கச்சா எண்ணையில் 40 சதவீதம் இங்கிருந்துதான் பெறப்படுகின்றது.

இப்போது விபத்துக்கு உள்ளான இந்த எண்ணைக் கிணற்றில் 3 ஆண்டுக்கு முன்பு ஒரு முறை தீவிபத்து ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து எண்ணைக் கிணற்றுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிப்பது குறித்து யோசனைகள் வழங்க மத்திய அரசு குழு ஒன்றை அமைத்தது. அந்த குழு பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து பாதுகாப்பு வசதிகளை அதிகரிப்பது குறித்து அரசுக்கு தனது சிபாரிசுகளை அறிக்கை மூலம் தெரிவித்திருந்தது. எனினும் இப்போது 2வது முறையாக அங்கு தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

தீப்பிடித்ததும் அவர்களில் பலர் உயிர் தப்புவதற்காக கடலில் குதித்தனர். சிலர் உயிர் காக்கும் மிதவைகள் மூலம் தப்ப முயன்றனர். மற்றும் சிலர் இணைப்பு பாலத்தின் மூலம் அருகில் உள்ள மற்ற பிளாட் பாரங்களுக்கு செல்ல முயன்றனர். இந்நிலையில் சம்பவத்தை அறிந்து 8 கடற்படை கப்பல்கள் மற்றும் கடலோர காவல் படை கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அந்த கப்பல்களில் சென்றவர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டதோடு எண்ணைக் கிணறு தளங்களில் சிக்கியவர்களை மீட்கும் பணியிலும் ஈடுபட்டனர். இரு கடற்படை உலங்குவானூர்திகள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக எண்ணை மற்றும் இயற்கை எரிவாயு கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் அபிராகா கூறுகையில், 'மும்பை ஹை' பகுதியில் உள்ள 20 எண்ணை கிணறுகளில் இருந்து தினசரி 80 ஆயிரம் பீப்பாய் கச்சா எண்ணை உற்பத்தி செய்யப்படுவதாகவும், மீண்டும் வழக்கமான எண்ணை உற்பத்தி தொடங்க பல




மாதங்கள் ஆகும் என்றும் தெரிவித்தார். மும்பை எண்ணை கிணற்றில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து பிரதமர் மன்மோகன்சிங் மிகுந்த அதிர்ச்சியும், துயரமும் தெரிவித்துள்ளார். இந்திய அரசுக்கு சொந்தமான இத்தளம் நாளொன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் பீப்பா மசகு எண்ணெயை உற்பத்தி செய்வது குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை

## -இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி-

சிறீலங்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கவில்லையென இந்திய பாதுகாப்பமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மாநிலங்களவையில் (ராஜ்யசபாவில்) அவர் கூறியதாவது, சிறீலங்காடன் இந்தியா பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க சிறீலங்கா அரசு யோசனை தெரிவித்தது.

இது பற்றி இந்தியா ஆராய்ந்து வருகிறது. ஆனால் இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லை. இந்தியாவுக்கும் சிறீலங்காவிற்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தைகளுக்கான நிறுவனக் கட்டமைப்பு எதுவும் செயல்பாட்டில் இல்லை. எனினும், பாதுகாப்பு உள்துறை சார்ந்த ஒத்துழைப்பு குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




இரு நாடுகளுக்கிடையில் இரு தரப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்திய இராணுவ பயிற்சி நிறுவனங்களில் சிறீலங்கா இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. வெள்ளம், கடல்கோள் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது நிவாரண உதவி, உயர் இராணுவ அதிகாரிகளின் சுற்றுப்பயணம், கடற்படை கப்பல்களின் பயணம், கடல் பகுதிகளில் கூட்டுக் கண்காணிப்பு ஆகியவை சிறீலங்காவுடனான பிற ஒத்துழைப்பு நடவடிக்கைகளில் அடங்கும் என்று கூறியுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, இந்திய - சிறீலங்கா இராணுவ ஒப்பந்தத்தால் தமக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று பாகிஸ்தான் கருத்துத் தெரிவித்துள்ளது. கொழும்பு வந்துள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் குர்சித் எம் கசூரி இது தொடர்பாக கூறியதாவது, சிறீலங்கா ஒரு இறையாண்மையுள்ள நாடு. அதன் நலனுக்காக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளலாம். சிறீலங்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லுறவு நீடித்து வருகிறது. இந்திய-சிறீலங்கா இராணுவ ஒப்பந்த சாத்தியம் குறித்து நாம் அறிந்திருக்கவில்லை. இருப்பினும் அத்தகைய ஒப்பந்தத்தால் எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. இது குறித்து மேலும் கருத்து தெரிவிக்க இயலாது. சிறீலங்கா அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க சிறீலங்காவின் இராணுவ அதிகாரிகள் பெருமளவில் பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வருகின்றனர். சிறீலங்காவின் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது அது சிறீலங்காவின் உள்விடயம். அதில் நாம் தலையிட விரும்பவில்லை. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மசூதிகளையும் வீடுகளையும் கட்டித்தர பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது என்றார் கசூரி.

# இந்தியாவில் ஓடும் தொடருந்தில் குண்டுவெடிப்பு

இந்தியா பாட்னாவிலிருந்து தலைநகர் டில்லி நோக்கிச் சென்று கொண்டிருந்த சரம்ஜீவி கடுகதி தொடருந்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் ஒரு பெண் உட்பட 10 பேர் கொல்லப்பட்டு 50ற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாட்னா - டில்லி தொடருந்து, உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஜான்பூர் - சுல்தான்பூர் நிலையங்களுக்கு இடையே ஹர்பால் கஞ்ச் பகுதியில் கடந்த 28ம் திகதி மாலை 5 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது இக்குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றது. முன்பதிவு செய்யாத பயணிகளுக்கான பெட்டியில் கழிவறைக்கு அருகே இக்குண்டு வெடிப்பு நடைபெற்றுள்ளது. இக்குண்டு நேரம் கணித்து வெடிக்க வைக்கப்படும் குண்டு என ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இது குறித்து காவற்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.




தமிழகத்தில் கடந்த ஆண்டு தொடர்ச்சியாக 36 மணிநேரம் கண்கட்டி வித்தை (மஜிக்) புரிந்து கின்னஸ் சாதனையை நிலைநாட்டிய நடிகர் அலெக்சுக்கு, கின்னஸ் நிறுவனம் சாதனைப் பட்டியலில் இணைக்கப்பட்டமைக்கான சான்றிதழை வழங்கியுள்ளது. இச்சான்றிதழை கடந்த வாரம் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் வழங்கிப் பாராட்டினார்.

# தமிழீழ மக்களின் உரிமையை மீட்க உலகம் வழங்கும் உறுதிமொழி என்ன?

அமைதி வழியிலான பேச்சுவார்த்தைகள் முடங்கிப்போய்விட்டன. என்று கூறுவதிலும் பார்க்க தோல்வியடைந்து விட்டன என்று குறிப்பிடுவதே பொருத்தமானது.



1833ம் ஆண்டு வெள்ளைக்காரரால் இலங்கைத்தீவில் ஒற்றையாட்சி முறை புகுத்தப்பட்டு தமிழர் தாயகம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டதோடு தமிழரின் இறைமை பறிக்கப்பட்டது. எனவே தமிழர் தாயகத்தில் வாழும் மக்களது சகல உரிமைகளும் பறிக்கப்பட்டமைக்கு முதற்காரணமானவர்களாக வெள்ளைக்காரர்களே இருந்துள்ளனர்.

பல்வேறு அமைதி முறையிலான போராட்டங்களும் தோல்வியடைந்த நிலையிலேயே தமிழ்மக்கள் கடந்த 20 வருடங்களாக ஆயுதமேந்தி போராடி வருகின்றனர். அந்த ஆயுதப்போராட்டத்தை தற்போது வெள்ளைக்காரர்களே இடைநிறுத்தி வைத்துள்ளனர். அதாவது இலங்கைத்தீவில் நிலவும் இனப்பிரச்சனைக்கு அமைதித்தீர்வை விரும்புவதாக கூறும் அனைத்துலக சமூகத்தினர்.

மூன்று வருடகாலமாக தொடர்ச்சியாக யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு தற்போது நின்றுபோயுள்ளது. எனினும் யுத்தம் மீண்டும் மூளவில்லை.

யுத்தம் மூளக்கூடிய வாய்ப்புக்கள் முனைப்புப்பெறும் வேளைகளில் எல்லாம் அனைத்துலக சமூகமே அதனைத்தடுத்து நிறுத்திவிடும் முயற்சியில் ஈடுபடுகின்றது. அல்லது யுத்தத்தை தள்ளிப்போடும் வகையில் காய்களை நகர்த்திவருகின்றது.

நிழல் யுத்தம் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க, சிங்கள பேரினவாத அமைப்புக்களின் தமிழர் விரோத கடும் போக்கு ஒரு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இவ்வாறானதொரு சூழலில் மீண்டும் யுத்தம் ஒன்று மூழுவதற்கான நிலமைகளே அதிகம் காணப்படுகின்ற போதும் யுத்தம் தள்ளிப்போய்க்கொண்டே இருக்கின்றது.

இதற்கு காரணம் இலங்கை விவகாரங்களில் அதிக ஈடுபாடு காட்டிவரும் உலக நாடுகள்தான். தமிழ் மக்களின் கோணத்தில் இருந்து பார்த்தால் 'பந்து' இப்போது உலகநாடுகளின் கைகளில்தான் இருக்கின்றது. அதனால்தான் கடந்த 27ம் திகதி வவுனியா மாநாட்டின் தமிழ்மக்கள் எழுச்சி பிரகடனம் உலகநாடுகளை நோக்கி அமைந்தது.

தமிழ்மக்கள் சிறீலங்கா அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு எதுவுமில்லை. சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு உரிமைகளை மட்டுமல்ல சாதாரண சலுகைகளைக்கூட தரப்போவதில்லை என்பதில் தமிழ் மக்கள் நூறு வீதம் தெளிவாகவே உள்ளனர்

**தமிழீழ மக்களின் உரிமையை மீட்க உலகம் வழங்கும் உறுதிமொழி என்ன என்கின்ற கேள்விக்கான பதிலையே அனைத்துலக சமூகத்திடம் தமிழ் மக்கள் தற்போது எதிர்பார்க்கின்றனர்.**

சிறீலங்கா அரசின் உண்மைத்தோற்றத்தை அனைத்துலக சமூகத்திற்கு தோலுரித்துக்காட்ட வேண்டிய அவசியம் கருதியே மூன்றரை வருடங்களாக தமிழர் தரப்பால் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.


சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் போரை நிறுத்தி அமைதிவழியில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என உலக நாடுகள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வற்புறுத்தின. எதை நோக்கி பேச்சுவார்த்தை நடாத்துவது என்பது தொடர்பாக ஒஸ்லோவில் ஒரு உடன்பாடும் எட்டப்பட்டது. அதன்படி சீரான ஒழுங்கில் எந்தவெரு விடையமும் நடைபெறவில்லை

நிரந்தர தீர்வு பற்றி பேசுவதற்கு முன்பு போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கான மறுவாழ்வுப்பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட சிரான் என்கின்ற அமைப்பு கூட சிறீலங்காவின் சட்ட பிரச்சனைகளால் தோல்வி கண்டது. பின்னர் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக முன்வைப்புக்களும் முடங்கிப்போய்விட்டன. இடையில் சுனாமி வந்ததால் சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பு என ஆறு மாதங்கள் கடத்தப்பட்டன. அப்பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாகியும் அதன் செயற்பாடு சிறீலங்காவின் உயர்நீதிமன்றத்தால் முடக்கப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகளுக்கான பயண ஒழுங்குகளுக்கு சிறீலங்கா அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டும் என்கின்ற விடயமே தற்போது பேச்சுவார்த்தைக்குரிய விடயமாக உள்ளது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையிதுதான்!

போர்நிறுத்தகால இடைவெளிக்குள் சிறீலங்கா அரசு பலகாரியங்களை மேற்கொண்டுள்ளது. இராணுவ நிலைகள் மட்டுமல்லாது அரசின் பல்வேறு அமைப்புகளும் கூட விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு என்நேரமும் இலக்காக கூடும் என்கின்ற பயக்கெடுதியில் இருந்த அரசாங்கம், தற்போது சாவகாசமாக தனது படைநிலைகளை பலப்படுத்தி வருகின்றது. ஆயுதங்களையும் கப்பல்களையும் விமானங்களையும் வாங்குகின்றது. அமெரிக்கா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிடமிருந்து இராணுவ நிபுணர்களின் ஆலோசனைகளையும் - படையினருக்கான விசேட பயிற்சிகளையும் பெற்று வருகின்றது.

சிறீலங்காவின் புலனாய்வுப்படையினர் நிழல் யுத்தம் ஒன்றை போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.



இருபது வருடகால போரினால் நலிவுற்ற தமிழ் மக்கள் தங்கள் இயல்பு வாழ்வை கட்டியெழுப்ப முடியாமல் தவிக்கின்றனர். உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிறீலங்காப் படையால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படாமல் உள்ளன. பலவருடகாலமாக சொந்த வாழ்விடங்களுக்கு திரும்பமுடியாமல் அல்லலுறும் மக்கள் விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந் நிலையில் ஆயுதப்போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்தால்தான் தமிழ்மக்கள் தொலைந்த வாழ்விடங்களை மீட்டெடுக்க முடியும் தங்கள் வாழ்வையும் தற்காத்துக்கொள்ள முடியும் என்பது தான் இன்றிருக்கும் உண்மையான நிலை. இவையெல்லாவற்றையும் விடவும், போராட்டம் இடைநடுவில் நின்றால் அல்லது இன்னமும் இழுபட்டு போனால் அடுத்த சந்ததியும் கொடிய யுத்தத்தை எதிர்நோக்கவேண்டி வரும் என்கின்ற பயமும் தமிழ் மக்களிடம் இருக்கின்றது.

இந்த யுத்தநிறுத்த காலம் தமிழர் தரப்பிற்கு அனைத்துலக ரீதியில் ஒரு அங்கீகாரத்தை வழங்கியிருப்பதும் தமிழ் மக்களின் பிரச்சனைகளின் ஆழத்தை அனைத்துலகத்திற்கு புரியவைத்திருப்பதும் தான் தமிழ்மக்களுக்கு கிடைத்திருக்கும் ஒரேயொரு நன்மை.

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் விடுதலைப் புலிகளின் பயணப்பாதுகாப்பிற்கு சிறீலங்கா அரசு புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கையின் அமைதி முயற்சிகளுக்கான இணைத்தலைமை வழங்கும் நாடுகள் குரல் கொடுத்திருப்பதும் விடுதலைப் புலிகளுடன் அமெரிக்கா நேரடித் தொடர்புகளைப் பேணவேண்டும் என சிறீலங்காவிற்கான முன்னாள் அமெரிக்கத்தூதுவர் சமீபத்தில் கருத்து வெளியிட்டிருப்பதும் விடுதலைப் புலிகளின் அமைதிவழி நடவடிக்கைகளுக்கு அமெரிக்கர்கள் சட்டரீதியாக உதவலாம் என லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதும் தமிழ்மக்களுக்கு ஆறுதலளிக்கக்கூடிய விடையங்கள் தான். தமிழர் தரப்பை சாந்தப்படுத்தும் விதத்தில் இவ்வாறான கருத்துக்கள் வந்துகொண்டிருக்கும் சமகாலத்திலேயே, அமெரிக்க கடற்படையை சேர்ந்த ஆறு அதிகாரிகள் இரகசியமாக யாழ்ப்பாணத்திற்கு வந்து சிறீலங்காவின் படைமுகாம்களை பார்வையிட்டுள்ளனர், படையதிகாரிகளுக்கு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர்.

யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் சூழலில் அதனை எதிர்கொள்ள தமிழர்தரப்பு முனைப்புறும் வேளைகளில் அதனைத்தடுக்கும் இராஜதந்திரமாக தந்திரோபாயமாக - காய்நகர்த்தலாக உலகின் குரல்கள் அமையாமல் உண்மைக்கப்பாற்பட்டு குரல்கள் ஒலிக்கவேண்டும்.

தமிழீழ மக்களின் உரிமையை மீட்க உலகம் வழங்கும் உறுதிமொழி என்ன? என்கின்ற கேள்விக்கான பதிலையே அனைத்துலக சமூகத்திடம் தமிழ் மக்கள் தற்போது எதிர்பார்க்கின்றனர்.

- விவேக்.

# வான் படைபலத்தை அதிகரிக்கும் சிறீலங்கா அரசு

2001ம் ஆண்டு கட்டுநாயக்க விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது சீனத்தயாரிப்பான K8 ரகத்தை சேர்ந்த மூன்று பயிற்சி விமானங்களை விமானப்படை இழந்தது இன்னொரு K8 விமானம் சேதமடைந்தது.

இந்த தாக்குதலுக்குப் பின்னர் சிறீலங்கா விமானப்படை தனது ஜெட் விமான அணிக்கான மேலதிக பயிற்சிகளை (Advanced Training) வழங்குவதில் பலத்த நெருக்கடியை எதிர்கொண்டு வந்தது.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில்தான் மூன்றுபுதிய K8 ஜெட் பயிற்சி விமானங்களை விமானப்படை கடந்தவாரம் பெற்றிருக்கிறது.

சினாவின் Hongdu (Nanchang) Aviation Industry Corporation நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட k8 (Karakorum) ஜெட்விமானங்கள் மூன்றும் கடந்த 25ம் திகதி கட்டுநாயக்கா விமானப்படைத தளத்தில் வைத்து சீனத் தூதுவரால் விமானப்படை தளபதி எயார் மார்சல் டொனால்ட் பெரேராவிடம் கையளிக்கப்பட்டது.

மூன்றாம் கட்ட ஈழப்போரின் முடிவுகாலகட்டப் பகுதியில் மிகவும் பலவீனமான நிலையில் இருந்த விமானப்படையை நவீனப்படுத்துவதில் சிறீலங்கா அரசாங்கம் கணிசமான முன்னேற்றத்தை பெற்றிருக்கிறது.

இப்போதய கால கட்டத்தில் ஜெட் போர் விமானங்கள் மூலமே புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இதனால் விமானப்படையிடம் உள்ள சினத்தயாரிப்பு FT7 இஸ்ரேல் தயாரிப்பான கிபிர் மற்றும் ரக்ஷ்யத் தயாரிப்பான மிக்-27 ஜெட் போர் விமானங்களின் மூலமான தாக்குதல் திறனை வளர்த்து கொள்வதுதான் அதன் முக்கிய இலக்காக இருக்கிறது.

1992ம் ஆண்டு சீனாவிடம் வாங்கிய சுப்பர்சொனிக் எனப்படும் FT7 ரகஜெட் விமானங்களின் 800 மணி நேரப்பறப்புக்காலம் முடிவடைந்தாலும் இவற்றைவிட திறன்வாய்ந்த கிபிர், மிக்-27 ஜெட் போர் விமானங்களை கொள்வனவு செய்தாலும் FT7 ஜெட்கள் இதுவரை பயன்பாட்டில் இருக்கவில்லை.

FT7 விமானங்களில் சில மட்டுமே பயிற்சிக்காகப் பயன்படுத்தப்பட்டன ஆனால் அண்மையில் இந்த FT7 ரக ஜெட் விமானங்களை பாகிஸ்தான் விமானப்படை முற்றிலுமாக மறுசீரமைத்துக் கொடுத்திருக்கிறது.

இதன் மூலம் ஆறு FT7 ரகஜெட்விமானங்கள் இனிமேல் போர்த் தேவைகளுக்காகப் பயன்படுத்தக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

இதைவிட கிபிர், மிக்-27 போன்ற ஜெட்களைப் போர்நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதென்பது



சாதாரனமானதல்ல இதன் விமானிகளுக்கு சிறப்பு பயிற்சிகள் அவசியம்.

இந்தப் பயிற்சியை வழங்குவதற்கு K8 போன்ற (Advanced Training) ஜெட்கள்தான் தேவையாகும் கடந்த நான்கு வருடகாலமாக K8 ஜெட்களின் பற்றாக்குறையால் விமானப்படைகளிடம் ஜெட் போர்விமான ஸ்குவாட்ரன்களின் விமானிகளிற்குப் பயிற்சிகள் வழங்குவதில் நெருக்கடிகள் எதிர்நோக்கப்பட்டன.

ஆனால் சீனாவிடம் விமானப்படைக்கு கிடைத்திருக்கும் மூன்று K8 ஜெட் விமானங்களின் மூலம் விமானிகளை பயிற்றுவிப்பதற்கான சிக்கல்களிலிருந்து விமானப்படை மீட்சி பெற்றிருப்பதாகவே கருதப்படுகிறது.

சீனாவிடம் வாங்கப்பட்ட ஒவ்வொரு K8 ஜெட்களினதும் பெறுமதி 41 இலட்சத்து 75 ஆயிரம் டொலராகும். இலங்கைப் பெறுமதி தலா 42 கோடி ரூபா என மதிப்பிடலாம்.

இந்த ஜெட் விமானங்கள் தனியே பயிற்சிக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டவை. ஆனால் வானத்தில் இருந்து தரை இலக்குகளை தாக்குவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளும் இதில் இருக்கின்றன.

பாகிஸ்தான், எகிப்த், சிம்பாவே, தன்சாணியா, இலங்கை உள்ளிட்ட 12 இரண்டு நாடுகளின் விமானப் படைகளின் பாவனையில் K8 ஜெட் விமானங்கள் இருந்து வருகின்றன.

முன்பின்னாக இரண்டு விமானிகள் பயணம் செய்யக்கூடிய இந்த விமானத்தின் விமானிகள் அறை குளிரூட்டப்பட்டது. முன் ஆசனத்தை விட பின் ஆசனம் சற்று உயரமானது.

அடிப்படை பயிற்சிகள் pt-06 விமானத்தில் பெறும் விமானப்படை விமானிகளுக்கு துரிதமாக K8 விமானங்களில் பயிற்சியினை வழங்க விமானப்படை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பொழுது விமானப்படையிடம் FT-07 ரகத்தை சேர்ந்த ஆறு ஜெட் விமானங்கள் கிபிர் வகையை சேர்ந்த ஆகக்குறைந்தது 12 விமானங்களும் மிக்-27 ரகத்தை சேர்ந்த 7 விமானங்களும் ஆகக்குறைந்தது 25 ஜெட் போர் விமானங்களை விமானப்படை வைத்திருக்கிறது.

இவை எல்லாவற்றையும் ஒரே தடவையில் இயக்குவதற்கான பயிற்சி பெற்ற விமானிகள் பற்றாக்குறையாகவுள்ளனர். விமானங்களை வாங்கிக் குவிப்பதில் வேகம் காட்டிய விமானப்படை, அவற்றிற்கு பயிற்சி அளிப்பதற்கான விமானங்களை மிகத்தாமதமாகவே வாங்கியிருக்கிறது.

> நவீன ஆயுத தளபாடங்கள் மட்டும் ஒரு படையின் பலத்தை தீர்மானிக்கும் என்பதை சிறீலங்கா அரசபடைகள் இன்னமும் உணரவில்லை என்பதையே இத்தகைய செயற்பாடு எடுத்து காட்டுகிறது.

இதனால் விமானிகளுக்கு ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையை நீக்க உடனடியாக ஜெட் விமானங்களில் பயிற்சிகளை ஆரம்பிக்கிறது விமானப்படை.

அதேவேளை பலாலி விமான ஓடுபதை புனரமைப்பு ஆரம்பமாகியிருப்பதால் இரத்மலானையில் இருந்து சரக்கு விமானங்களின் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது.

AN-31-B மற்றும் C.130 சரக்கு விமானங்களை பலாலியில் தரையிறக்குவதில் பிரச்சனைகள் இருப்தால் ரஷ்யாவிடமிருந்து விமானப்படை இரண்டு MI-26 இராட்சத உலங்குவானூர்திகளை குத்தகைக்கு பெறவிருக்கின்றது.

20 தொன் எடையுள்ள பொருட்களை அல்லது 82 படையினரை முழு அளவிலான ஆயுதங்களுடன் அல்லது ரஷ்யாவின் BMP-01 கவசவாகனம் அல்லது BTR கவசவாகனம் ஒன்றை ஒரே தடவையில் கொண்டு செல்லக்கூடியது இந்த MI26 உலங்குவானூர்திகள்.

விமானங்களைவிட மிக சுலபமாக தரையிறங்கக் கூடியதும் ஓடுபதை தேவையற்றதுமான இந்த உலங்குவானூர்திகள் இரண்டை அடுத்த சில மாதங்களுக்கு



குத்தகைக்கு பெற்றிருக்கிறது விமானப்படை சுமார் 6 மாதங்கள் வரை இவை பயன்படுத்தலாம் என்றபோதும் இவற்றை தொடர்ந்து விமானப்படை வைத்திருக்கவே விரும்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே புலிகளின் விமான ஓடுபாதைகள் விமானங்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதில் விமானப்படை தீவிர கவனம் செலுத்திவருகிறது. அத்துடன் புலிகளின் வான் தாக்குதல்களை முறியடிப்பதற்கான வான் பாதுகாப்பு உதவிகளை விமானப்படை பெற்றிருக்கிறது.

இதற்கமைய பெங்களூரில் உள்ள இந்திய விமானப்படை தளத்தில் 20 பேர் கொண்ட சிறீலங்கா விமானப்படை அணியொன்றுக்கு விமான எதிர்ப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ராடர் மற்றும் இலத்திரனியல் பயிற்சிகள், விமான எதிர்ப்பு ஆயுதங்களின் பயிற்சிகள் என சகலவான் பாதுகாப்பு திட்டங்களையும் உள்ளடக்கியதாக இந்தப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

புலிகளின் விமானப் படையை முறியடிக்கும் பலம் தம்மிடம் உண்டு என்றும் அதைப்பற்றித் தாம் கவலைப்படவே இல்லை என்றும் கூறிய விமானப்படை தளபதி, போர் விமானங்களையும் அவற்றிற்கான பயிற்சிகளையும் பெற்றுக்கொடுப்பதற்காக அலைந்து திரிகிறார்.

இது போதாதென்று இந்தியாவிடம் வேறு வான்பாதுகாப்பு உதவிகள் நாடப்பட்டிருக்கின்றன. புலிகளின் சிறிய விமான அணிக்கு பயப்படவில்லை அதை இலகுவாக முறியடித்து விடலாம் என்றால் ஏன் இத்தனை ஆர்ப்பாட்டமான நடவடிக்கைகள் என்றல்லவா கேட்கத் தோன்றுகின்றது.

ஏதோ நவீன போர் விமானங்கள் யுத்த தளபாடங்கள் மூலம் புலிகளின் சிறிய விமான அணியை தோற்கவைத்து விடலாம் என்று சிறீலங்கா விமானப்படை நம்புகிறது. ஆனால் இந்தக்கருத்து சரியாக இருக்குமானால் சிறீலங்கா இராணுவத்தால் புலிகளை எப்போதோ தோற்கடித்திருக்க வேண்டும்.

அப்படி நடக்கவில்லையே! நவீன ஆயுத தளபாடங்கள் மட்டும் ஒரு படையின் பலத்தை தீர்மானிக்கும் என்பதை சிறீலங்கா அரசபடைகள் இன்னமும் உணரவில்லை என்பதையே இத்தகைய செயற்பாடு எடுத்து காட்டுகிறது.

- சுபத்ரா -


SINGAPORE GOLD HOUSE
T.P 02088430807
நவீன டிசைன்களில் அசல் 22 கரட் தங்கநகைகளை மிக மலிவான விலையில் நீங்கள் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்
Importers and Retailers of 22 Carat Gold Jewelley
233B, The Broadway, Southall, Middlesex, UB1 1ND, UK,

# அகவணக்கம்

விடுதலை என்னும் பெரும் பயணமதில் தன்பணி செய்ய
புலம்பெயர் மண்ணில் அயராது உழைத்த...

## நாட்டுப்பற்றாளர் விஜயரட்ணம் கணேஸ்வரன்

**18.09.1947-28.07.2005**



தமிழீழ விடுதலையின்பால் தீராத பற்றுக்கொண்டு அந்த விடுதலையை வென்றெடுக்க யேர்மனிக் கிளையுடன் இணைந்து தாயகத்துக்காய் தன்பணிசெய்த எங்கள் அன்பு அண்ணன் இழப்பின் பின்னால் துயருற்றிருக்கும் அவரது துணைவியார், மற்றும் உறவினர், நண்பர்களுடன் எங்கள் துயரையும், இழப்பையும் பகிர்ந்துகொள்கின்றோம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

**தமிழீழ விடுதலைப் புலிகள் யேர்மனிக்கிளை**

## ‘தற்கொலைப் படையினர் தியாகிகள் அல்ல, குற்றவாளிகள்’

# பயங்கரவாத தாக்குதலுக்கு அமெரிக்க முஸ்லிம் அறிஞர்கள் கண்டனம்

தீவிரவாதிகள் அப்பாவிப் பொதுமக்களை குண்டு வைத்து கொன்று குவிப்பது இஸ்லாத்துக்கு எதிரானது என்றும் இந்தக் காட்டுமிராண்டித் தனமான செயல்களில் ஈடுபடும் தற்கொலைப் படையினர் தியாகிகள் அல்ல, அவர்கள் குற்றவாளிகள் என்றும் கூறி முஸ்லிம் அறிஞர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அமெரிக்கா, இந்தோனேஷியா, இங்கிலாந்து, ஸ்பெயின் என்று பல்வேறு நாடுகளிலும் தீவிரவாதிகள் குண்டுகளை வெடிக்கச் செய்து உயிர் இழப்பு ஏற்படுத்துவதற்கு முஸ்லிம் அறிஞர்கள் முதல் முறையாக கண்டனம் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவைச் சேர்ந்த 130 முஸ்லிம் அறிஞர்களை கொண்ட குழு (ஹபிக் கவுன்சில்) அனைத்து வகையான தீவிரவாதச் செயல்களும் இஸ்லாத்துக்கு எதிரானவை என்பதால் அதில் ஈடுபடவும், தீவிரவாதிகளுக்கு உதவி செய்யவும் தடை விதித்து பட்வா (மத உத்தரவு) பிறப்பிப்பதாக அறிவித்தது.

அமெரிக்காவில் உள்ள 600ற்கும் மேற்பட்ட மசூதிகளிலும் உள்ள இமாம்கள் இந்த பட்வாவை வாசிக்க வேண்டும் என்று அறிஞர்கள் குழு கேட்டுக் கொண்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள 130 முஸ்லிம் அமைப்புகளும் இந்த பட்வாவை ஏற்றுக்கொண்டு உள்ளன. `பட்வா` வெளியிட்டுள்ள முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாமிய நீதி நெறியிலும் சட்டத்திலும் பயிற்சி பெற்றவர்கள். இஸ்லாமிய சட்டத்துக்கு விளக்கம் தரத் தகுதி படைத்தவர்கள் ஆவார்கள்.

இந்த அறிஞர்கள் குழு நிருபர்களிடம் கூறியதாவது, மதத்தீவிரவாதத்தையும், அப்பாவிகளுக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்துவதையும் இஸ்லாம் கண்டிக்கிறது. தீவிரவாதத்தையோ, பயங்கரவாதத்தையோ இஸ்லாம் நியாயப்படுத்தவில்லை. தற்கொலை தாக்குதல் மூலமோ அல்லது வேறு எந்த வகையிலுமோ அப்பாவிகளின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் தீங்கு விளைவிப்பது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது என முஸ்லிம் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

# இலண்டன் தொடர்குண்டு வெடிப்பு சவூதி அரேபியாவில் சதித் திட்டம்

## தேடப்பட்ட நால்வரும் - உதவிய 12 பேரும் கைது

இலண்டனில் நடந்த குண்டு வெடிப்பில் பொலிசாரால் தேடப்பட்ட 4 தீவிரவாதிகள் பிடிபட்டதையடுத்து குண்டுத் தாக்கதல்களுக்கான திட்டமிடல்கள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. இலண்டன் தாக்குதல்களுக்கான திட்டம் சவூதி அரேபியாவில் வைத்து தீட்டப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தற்போது கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களில் இருந்தே இது தெரியவந்துள்ளது.

இலண்டனில் கடந்த மாதம் 7ம் திகதி நான்கு இடங்களில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களில் 52 பேர் பலியானார்கள். பின்னர் கடந்த மாதம் 21ம் திகதியும் அதேபோன்று தொடருந்திலும் பேருந்திலும், நான்கு தாக் குதல்கள் நடத்தப்பட்டன. எனினும் அதனால் பாதிப்பு எவையும் ஏற்படவில்லை. இந்த சதித் திட்டம் நிறைவேறாததால் மீண்டும் இலண்டனில் குண்டு வைக்க சரியான நேரத்தை அவர்கள் எதிர்நோக்கி காத்திருந்தனர்.

இலண்டன் நகரில் குண்டு வைத்ததாக சந்தேகப்பட்ட 4 தீவிரவாதிகளில் ஒருவரான யசின் உசேன் ஓமர் என்பவரை பொலிசார் பிடித்தனர். அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் ஏனைய 3 தீவிரவாதிகளை பிடிக்கும் தீவிர முயற்சியில் ஸ்கொட்லாண்டு யார்ட் தீவிரமாக செயல்பட்டது. தீவிர விசாரணையில், வடக்கு இலண்டனில் ஒரு இரகசிய இடத்தில் பதுங்கி இருப்பது தெரியவந்தது. உடனே ஸ்கொட்லாண்டு யார்ட் பொலிசார் அங்கு விரைந்து சென்றனர். வடக்கு கென்சிங் டொன் பகுதியில் டல்கார்னோ கார்டனில் உள்ள ஒரு அடுக்கு மாடி குடியிருப்பை சுற்றி வளைத்து அங்கு பதுங்கியிருந்த இப்ராகிம் (27), ராம்ஜி மொகமது (28) ஆகிய இருவரைக் கைது செய்தனார்.

இவர்களிடம் பொலிசார் நடத்திய தீவிர விசாரணையில் தேடப்படும் 4வது தீவிரவாதி ரோம் நகரில் பதுங்கி இருப்பது தெரியவந்தது. உடனே ஸ்கொட்லாண்டு யார்ட் பொலிசார் ரோம் நகர பொலிசாருடன் தொடர்பு கொண்டு அங்கு ஒரு இரகசிய இடத்தில் பதுங்கி இருந்த 4வது நபரான உஸ்மான் உசேன் (27) என்பவரையும் கைது செய்தார்கள்.

ஸ்கொட்லாண்டு யார்ட் பொலிசார் 4 தீவிரவாதிகளிடமும் நடத்திய அதிரடி விசாரணையில், திடுக்கிடும் தகவல் வெளியானது. இலண்டன் நகரை குண்டு வைத்து தகர்க்க, 4 தீவிரவாதிகளும் சவூதி அரேபியாவில் ஒரு இரகசியமான இடத்தில் கூடி சதித்திட்டம் தீட்டியது கண்டுபிடிக்கப்பட்டது. சவூதிஅரேபிய பொலிசாரும் இதுபற்றி மேலும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதேவேளை, இத்தாலியில்கைது செய்யப்பட்ட நபர் நாடு கடத்தப்படுவதற்கான விசாரணையை சந்தித் துள்ளார் என்றும், ஆகவே இவர் இலண்டனுக்கு விசாரணைகளுக்காக விரைவில் கொண்டுவரப்பட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது பின்னணி பற்றிய மேலதிக விபரங்களை இத்தாலிய அதிகாரிகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர் முன்பு கூறப்பட்டது போல் சோமாலியாவில் இருந்து வந்தவரல்ல என்றும், எத்தியோப்பியாவில் இருந்து வந்தவர் என்றும், உண்மையில் இஸாக் ஹம்டி என்றே அழைக்கப்பட்டவரென்றும் அவர்கள் கூறியுள்ளனர்.




இந்த நபர் ‘ஈரோ ஸ்டார்’ தொடருந்து மூலம் பிரான்ஸ் வந்து இத்தாலி வந்ததாகவும் இவரது செல்பேசியை ஒற்றுக் கேட்டதன் மூலம் இவரைப் பின்தொடர்ந்து சென்று இத்தாலிய பொலிஸ் கைது செய்ததாக இத்தாலிய உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக 3 பெண்கள் கைது செய்யப்பட்டனர். இந்த 3 பெண்களும் தெற்கு இலண்டனில் ஸ்டாக் பெல் பகுதியில் உள்ள பொதுக்குடியிருப்பு பகுதியில் வசித்து வந்தனர். இதேவேளை, டூட்டிங் என்ற ஒரு இடத்தில் 6 பேரும், இன்னொரு இடத்தில் 3 பேரும் இவர்களுக்கு உதவிய காரணத்தினால் கைது செய்யப்பட்டனர்.

நான்கு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு விட்டாலும், இலண்டன் நகருக்கு தீவிரவாதிகளால் ஆபத்து இன்னும் நீங்கிவிடவில்லை என்று இலண்டன் நகர துணை காவற்துறை ஆணையாளர் பீற்றர் கிளார்க் கூறியுள்ளார். இதேவேளை, எந்த நேரத்திலும் இலண்டனை தீவிரவாதிகள் தாக்கக்கூடும் என்று இலண்டன் மாநகர பொலிஸ் ஆணையாளர் இயான் பிளேயர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இலண்டன் நகர மக்களை குண்டு வெடிப்பில் இருந்து காப்பாற்றுவதற்காக ஆயிரக்கணக்கான பொலிசார் பேருந்து, தொடருந்து நிலையங்களில் நிறுத்தப்பட்டுள்ளனர். 2வது உலக யுத்தத்துக்குப்பிறகு, இதுபோன்ற சவாலை இப்போது தான் இலண்டன் பொலிஸ் சந்தித்துள்ளது என்றும் இயான் பிளேயர் மேலும் கூறினார்.

# இலண்டன் குண்டுவெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய இந்தியர் சம்பியாவில் கைது

இலண்டனில் நடந்த தொடர்குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு மூளையாகச் செயல்பட்ட குற்றச்சாட்டுடன் இந்தியர் ஒருவர் சம்பியாவில் கைது செய்யப்பட்டார். இவர் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த பிரித்தானிய பிரஜை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரது பெயர் ஹாரூன் ரஷீத் அஸ்வத்.

கடந்தவாரம் சம்பியாவில் பிடிபட்ட இவர் அந்நாட்டிலுள்ள லுசாகா பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை நடத்தவதற்காக பிரித்தானிய மற்றும் அமெரிக்க பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் அங்கு சென்றுள்ளனர். இத் தகவலை தி டைம்ஸ் நாளேடு தெரிவித்துள்ளது.

எனினும் இந்த செய்தி பற்றி பிரித்தானிய அதிகாரிகள் உடனடியாக எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. பிரித்தானியாவில் செயல்படும் அல்-ஹைடா அமைப்பில் முக்கியமானவர் அஸ்வத் என்று கருதப்படுகிறது. இவர் இந்த அமைப்புடன் 10 ஆண்டுகளாகவே நெருக்கமாக இருந்து வருகிறார் என்பதும் தெரியவந்துள்ளது.

இலண்டனில் தொடர்குண்டு சம்பவம் நடப்பதற்கு சில மணி நேரங்கள் முன்பாக ஹித்ரூ நகரிலிருந்து விமானத்தின் மூலம் வெளியேறிவிட்டார் அஸ்வத். குண்டு வெடிப்பை நிகழ்த்திய பயங்கரவாதிகளில் 2 பேருடன் அவர் 20 தடவை தொலைபேசியில்? பேசியது தெரியவே அவரை பொலிசார் தேடி வந்தனர்.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு முன்னதாக அந்த தாக்குதலை நடத்திய 4 பயங்கரவாதிகளின் சொந்த ஊர்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளார் அஸ்வத்.

மேலும் இலண்டனில் தாக்குதல் நடத்த நிர்ணயித்த இடங்களுக்கும் சென்றுள்ளார் என்று டைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தி மேலும் தெரிவிக்கிறது. அமெரிக்காவின் ஓரிகான் நகரில் பயங்கரவாத முகாம் அமைக்க 1999ல், இலண்டனில் உள்ள ஒருவர் இவரை அனுப்பியுள்ளார் என்ற தகவலையும் அமெரிக்க புலனாய்வு அமைப்பின் ஆவணம் தெரிவிப்பதாக பத்திரிகை செய்தி மேலும் தெரிவிக்கிறது.

## ‘நாங்கள் அல்–ஹைடா இல்லை ஈராக் சம்பவத்தால் பாதிக்கப்பட்டே தாக்கினோம்’ — கைதான இளைஞன் தெரிவிப்பு

இலண்டன் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை (01.08.2005) சுமார் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் வாஹ்பி முகமது என்ற 23 வயது இளைஞன் இலண்டன் பூங்காவில் கடந்த வாரம் குண்டு வைக்க முயற்சித்தது தொடர்பாக கைது செய்யப்பட்டார். இவர் ஏற்கனவே கைதான 4 தீவிரவாதிகளில் ஒருவரான ரம்சி முகமதுவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரிடம் காவற்துறையினர் மேற்கொண்ட புலன்விசாரணையின்போது, இந்த தாக்குதலுக்கும், அல்-ஹைடாவுக்கும் தொடர்பு இல்லை என்று கூறியதுடன், ஈராக் போரில் பிரித்தானியா ஈடுபட்டதுதான் தங்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது என்றும் அதற்கு பதிலடியாகவே இலண்டனில் தாக்குதல் நடத்த திட்டமிட்டதாகவும் கூறியுள்ளார்.

அந்த இளைஞன் மேலும் கூறியதாக வெளிவந்த தகவல்களில், அல்-ஹைடாவுக்கும் எங்களுக்கும் தொடர்புகள் கிடையாது. ஆனால், இணைய தளம் மூலம் அந்த இயக்கத்தின் செயல்பாடுகளைத் தெரிந்து கொள்வோம். நேரடியாக எங்களுக்குத் தொடர்பு கிடையாது. ஈராக் போரில் கொல்லப்பட்ட அப்பாவிகளின் மனைவிகள், குழந்தைகள் படங்களை தொலைக்காட்சியில் நாங்கள் பார்த்து வேதனை அடைந்தோம். எங்களுக்குள் வெறுப்பு ஏற்பட்டது. ஏதாவது செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம். எங்கள் 4 பேரில் முக்தார் சேட் இப்ராகிம் தான் எங்களை வழி நடத்தினான். நாங்கள் யாரையும் கொல்ல நினைக்கவில்லை. மக்களை அச்சுறுத்தவே விரும்பினோம். அவர்கள் என்னிடம் ஒரு பையை கொடுத்து எடுத்துச் செல்லும்படி கூறினார்கள். வெடிகுண்டு பையை கொடுத்தது யார் என்பது தெரியாது. 7ம் திகதி நடந்த தாக்குதல் எங்களுக்கு வியப்பை எற்படுத்தியது. பாகிஸ்தானியர்களோடு எங்களுக்குத் தொடர்பு இல்லை என்று உசேன் உஸ்மான் கூறினார்.

இந்நிலையில், 7ம் திகதி, 21ம் திகதி நடந்த தாக்குதல்களை இரண்டு வெவ்வேறு குழுக்கள் நடத்தியுள்ளன. இந்த இரண்டு குழுக்கள் தவிர 3வது குழு ஒன்றும் உள்ளது. அந்தக்குழு தாக்குதல் நடத்தகாத்திருக்கிறது என்று காவற்துறை உளவுப்படை எச்சரித்துள்ளது. இந்தக் குழுவும் பாதாள தொடருந்து நிலையங்களையும், பேருந்துகளையும் குறிவைத்து இருக்கிறது என்று உளவுப்படை கூறியுள்ளது.

## TPR TRANSPORT DEMENAGEMENT

**France ல் பதிவுசெய்யப்பட்ட உத்தரவாதத்துடன் வாகனசேவை**

**எமது சேவைகள் ......**

பெரியதொகை பொருட்களா? சிறியதொகைப்பொருட்களா ? கவலை வேண்டாம். பாரிஸ் நகரம் மற்றும் பிரான்சின் ஏனைய பகுதிகளுக்கும் அதுமட்டுமன்றி ஐரோப்பா எங்கும்

பாரிசிலிருந்து இலண்டனுக்கு நியாயமான கட்டணத்தில் (Demenagement) செய்து தரப்படும்.

பாரிசில் இடம் பற்றாக்குறையால் பொருட்கள் வைத்துஎடுப்பதற்கு பாதுகாப்பபாகவும் காப்புறுதி உத்தரவாதத்துடனும் (Stockage) வசதிகளும் எம்மிடம் உள்ளன.

வர்த்தக நிறுவனங்களுக்கு வாகனபற்றாக்குறை உள்ளவர்களுகக்கும; Metro Marche, Rancy, Air port et le havre fret க்கு வாகனசேவையுண்டு.

வீடு மாறும் குடும்பத்தினருக்கு எமது வாகனசேவைக்கு செலுத்திய பற்றுச்சீட்டை கொண்டு Allocation Family மூலம் அறவிடலாம்.

தொடப்புகளுக்கு - email - euromouers@wanadoo.fr
Tel 01 48 45 49 10
Mobil 06 11 17 23 51

## JAFFNA STORES

அனைத்து உணவுப் பொருட்கள் மற்றும் இலங்கை, இந்தியா, மரக்கறி வகைகளும் பசுமையுடன் பெற்றிட

9 ,RUE CAIL - 75010 PARIS
Tel -0140343118
Fax-0140343167
Mob-0660206147

**மங்களகர வைபவங்களிற்கான அலங்கரிப்பு சேவையில்**

HEIMA STYLE CRAFT & BEAUTY PARLOUR



உங்கள் அனைத்து மங்களகர வைபவங்களிற்கான ஆடைஅலங்காரம், சிகைஅலங்காரம், முகஅலங்காரம் போன்ற அனைத்தையும் உங்கள் எண்ணங்களுக்கு அமைய நவீன முறையில் நிபுணத்துவம் மிக்கவரால் செய்து தரப்படும்

திருமதி ஹேமா குமரன்
06 98 00 29 11
06 66 13 81 83

## EUROCONSULT SARL TRADUCTIONS

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழிபெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet, 75010 Paris
Tel - 0153267210
Fax - 0153267502

## ANU TELECOM

Taxi Phone

Vente Tele Carts

187, Rue du Crime, 75019 Paris
T.P & Fax : 01 40 34 04 46

**தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்**

## Ocean Indien

30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு

195, Rue du fbg St,Denis
75010 Paris - FRACE
Tél - 01 42 09 31 50
Fax - 01 42 09 31 60

30 நிமிடங்கள் பீஸ்ஷா உங்கள் இல்லங்களில்

## New taxi Pizza

**பாரிசில்**

வீட்டில் இருந்தவாறே அழையுங்கள்
நேரத்தை மீதுப்படுத்துங்கள்
விநியோகம் சேவை இலவசம்.

01 53 26 76 27

## போட்டோ பாலா

புகைப்பட சேவையில்15 வருட அனுபவம் நிறைந்தவர்களால் நவீனமுறை தொழிநுட்பங்களோடு நிறைந்தசேவை

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்
TEL & FAX - 0142233915 0618354077
87 RUE DE CLIGNANCOURT
75018, PARIS.

## காளிகாம்பாள் ஜோதிட சாலை

**இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பண்டிட் சுவாமிகள் அவர்கள்**



கைரேகை மூலம், முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை மற்றும் நடக்கப்போகின்றவை பற்றி விபரமாகக் கூறுவார்.

தொழில், வியாபார, லட்சுமிகர விடயமான பொருத்தம், விவாகப் பொருத்தம், கிரகப் பிரவேசம், வாகனப் பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பெண்பிள்ளைகள் குடும்ப ஒற்றுமை, கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், இவற்றுடன் ஜாதகக் குறிப்பைக் கொண்டு எதிர்காலப்பலாபலன்களைத் தெரிவித்தல், பரிகாரம் செய்தல்.



**தொடர்புகளுக்கு**
Tel : 01 42 05 16 82
Por : 06 98 09 39 55
DESMINI S.A.R.L All IN ONE
75,rue Philippe de Girard - 75018 Paris
விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக M° La Chapelle/ Gare du Nord

## SRI MURUKAN ST

**மளிகைப் பொருட்கள், பசுமையான காய்கறிகள், சனி-ஞாயிறு தினங்களில் இறைச்சிப் பங்குகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.**



*Tel: 01 43 82 05 26*

*8, Rue du Paris - Villeneuve - saint-georges*

## ARCHANNA

**அனைத்து விதமான மளிகைப்பொருட்களையும் சகலவிதமான வாகனசேவைகளையும் ஒரே கூரையின் கீழ் மிகவும் மலிவாக பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள் அர்ச்சனா**

ஐரோப்பிய சுற்றுலா பயணத்திற்கும், சகலவைபவங்களுக்குமான (9சீற்றுக்களையுடைய, A/C) வாகனசேவைகளுக்கும் நாடுங்கள்

தொடர்பு - 01 47 90 05 83 / 06 65 02 29 71

0156053488

6, Rue Victor Hugo
92270 Bois Cocombes

## THIRUPPATHY

### FASHION HOUSE

**இன்றைய உலகின் நவநாகரிக ஆடைகளின் சாம்ராச்சியம் திருப்பதி பெஷன் கவுஸ்**

203, Rue Fbg St-Denis
75010 PARIS.
Tél : 01 40 37 56 44
M° La Chapelle / Gare du Nord

Fermé le Lundi

http://www.alltamilz.com
e-mail : alltamilz@hotmail.com

# KRISHNA BHAVAN

Restaurant Spécialitées Indienne
பரிசில் ஒரேயொரு சைவஉணவகம்
JANA. SARL
24, Rue Cail -75010 Paris
M°La Chapelle ou Gare du Nord
Tél : 01 42 05 78 43



# Sri Mahal

உங்கள் அனைத்து மளிகை தேவைகளுக்கும்

## Sri Mahal

Tel - 01 46 07 83 12
197, rue du fbg St.Denis 75010 Paris.

# சித்தி சுப்பர் மார்சே

அனைத்துவிதமான மளிகைப்பொருட்கள், தொலைபேசி அட்டைகள் போன்றவற்றை
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

7 Rue Marx Dormoy 75018 Paris.
M°: La Chapelle

# Errances Travels



55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

IATA

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய
நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |


# ENESAR

யாழ்ப்பாண முறைப்படி தயாரித்த
**NSR** வறுத்த
மிளகாய்க்கறித்தூள்



900 Gr. வாங்கி ஒரு 21 செ.மீ.எவர் சில்வர்
பாத்திரத்தை இலவசமாகப்
பெற்றுச் செல்லுங்கள்

**இலவசம்**



இச்சலுகை கையிருப்பு
இருக்கும் வரை மட்டுமே

உணவு உற்பத்தியில் உலகத் தரச் சான்றிதழ் **ISO 9001: 2000**
பெற்ற அனைத்து வசதிகளையும் கொண்ட உணவுத் தொழிற்சாலையில்
உற்பத்தி செய்யப்பட்ட, தாயக உணவுப் பொருட்கள்

தொடர்பு - பிருந்தா
Tel / Fax : 44 208 686 0873
Mobile : 44 795 890 3748
E-mail : enesar@hotmail.com

ENESAR &CO LTD
36 GraftonRoad, Croydon,
Surrey CRO 3RP, U.K

# Royal Saloon

ரூட்டிங்கின் முதலாவது தமிழர் சலூன்
பெண்களுக்கான சகல விதமான சிகை
அலங்காரங்களும் பெண்களாலேயே வழங்கப்படுகின்றன
Royal Beauty Parlor - for Women
Tooting கோயில் (சிவயோகம்) முன்பாக அமைந்துள்ளது.

## றோயல் சலூன்



159 Upper Tooting Road, Tooting, London SW17 7TJ

- Gents £4.00
- Children £3.00
- O.A.P £3.00
- Baby Girl £5.00

தொடர்புகளுக்கு - செல்வன் 07903 013374
Open 7days a Week - 9am to 8Pm

# `அந்தப்பிள்ளை அப்பதான் பிறந்திருக்கவேணும் தொப்புள்கொடிகூட அப்படியே கிடந்தது'

சம்பவதினம் முல்லைப் பகுதியில் நின்ற தமிழீழக் காவல்துறையின் வட்டுவாகல் சீர்திருத்தப் பிரிவு விசாரணைப் பொறுப்பாளர் சிவனேசன் தான் கண்ட காட்சிகளை விபரிக்கிறார்...

**7**

சம்பவம்




நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது நான் வட்டுவாகல்


தமிழீழக் காவல்துறையின் வட்டுவாகல் சீர்திருத்தப் பிரிவு விசாரணைப் பொறுப்பாளர் சிவனேசன்

பகுதியில் உள்ள சீர்திருத்தப்பிரிவில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். பெரிதாக ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அந்த வெடிச்சத்தம் கேட்டு ஒரு சில நிமிடங்களில் சனங்கள் எல்லாரும் சேர்ந்து பெரிதாகக் கத்தியவாறு கடல் பக்கம் இருந்து ஓடிவந்து கொண்டிருந்தனர். அவர்களிடம் “என்ன சம்பவம், ஏன் ஓடி வருகிறீர்கள் என்றுகேட்டோம்”. அதற்கு அவர்கள் எவரும் பதில் சொல்வதாய் இல்லை. திரும்பவும் அவர்களிடம் “என்ன நடந்தது, ஏன் இப்படி எல்லோரும் ஓடுகிறீர்கள்” என்று கேட்க. “ஐயோ கடலில இருந்து ஏதோ கறுப்பாய் எங்கண்ட ஊருக்குள்ள பயங்கர வேகமாய் வந்திட்டுது. நாங்கள் திரும்பிப் பாக்கேல்ல. இப்ப இஞ்சாலையும் வரும் நீங்களும் ஓடுங்கோ” என்று பயப் பீதியில் சொல்லிக் கொண்டு ஓடினார்கள்.

நான் கடலில் இருந்து கறுப்பாய் வருவதற்கு என்ன இருக்கிறது, என்று யோசித்தபடி உள்ளுக்குள் போய்க் கொண்டிருக்க கடல் பெருகி தண்ணி வந்து விட்டது. உடனடியாக என்னுடன் நின்றவர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பினேன்.

அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்க, கடல் தண்ணீர் இன்னும் கூடிவிட்டது. நான் சம்பவத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவுக் கண்காணிப்பாளர் கானகன் அண்ணாவுக்கு தெரியப்படுத்தினேன். தெரியப்படுத்திவிட்டு வெளியில் வந்தபோது சனங்கள் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டு மீனவர் ஓய்வு மண்டபம் இருந்த புட்டியில் ஏறிநின்று கொண்டிருந்தனர். அப்போதைய சூழலில் அந்தப் புட்டியைத்தவிர வேறு எந்தப் பக்கமும் போக ஏலாது. சுத்திவர தண்ணி ஏறிவிட்டது. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் உறவுகளைத் தேடிக்கதறிக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் நாங்கள் தண்ணி நின்ற இடங்களைப் பார்த்து சில இடங்களுக்குப் போனோம். அங்கெல்லாம் தப்பி நின்றவர்களை உயரத்தில் இருந்த கோயிலுக்கு அனுப்பிக் கொண்டிருந்தோம். புட்டியில் நிற்பவர்கள் எல்லோரும் குடும்பங்களாக இல்லை தாய் தந்தையைத் தவற விட்டவர்களும், பிள்ளைகளைத் தவறவிட்டவர்களுமாக அனைவரும் கதறிக் கொண்டிருந்தனர்.

அதுமட்டுமில்லாமல் சிலர் சம்பவத்தை நேரில் பார்த்த அதிர்ச்சியில் இருந்தார்கள். இப்படியே இருக்க மீட்பு அணிகள் பாலத்தின் அந்தக் கரையில் வந்து நின்றன. அவர்களுக்கு நான் இந்தப்பக்கத்து நிலவரத்தை அறவித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள் நாங்கள் பாலத்தை அந்தக் கரையில் இருந்து சீர்ப்படுத்திக் கொண்டு வருகிறோம். நீங்கள்? இக்கரையில் இருந்து சீர்செய்து

**அ.லோகீசன்**

வாருங்கள் என்றார்கள். உடனடியாக எங்களது உறுப்பினர்களுடன் செயலில் இறங்கினோம். பெரும் சிரமத்தின் மத்தியில் அந்த அணியுடன் இணைந்துவிட்டோம்.

வெளியில் இருந்து வந்த மீட்பு அணி ஒருமாதிரி உள்ளே வந்துவிட்டது. அதனால் உடனடியாகவே மீட்பு வேலைகளில் இறங்கிவிட்டோம். தொகுதி தொகுதியாகப் பாதிக்கப்பட்டவர்களை வெளியே அனுப்பினோம். பின்னர் நான் கிராமங்களுக்குள் மீட்பு வேலைகளுக்காகச் சென்றேன்.

நானும் இன்னுமொரு உறுப்பினரும் கடற்கரையை நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் சந்தைக்குக் கறிவாங்குவதற்காக கொண்டு போகிற பிளாஸ்றிக் பை ஒன்றைக் கொண்டு வந்து `இதைப் பாருங்கோ' என்று தயங்கியவாறு கூறினார். எனக்கு என்னவென்று தெரியாது அவரும் அதைச் சொல்லவில்லை. நான் அந்தப் பையைப் திறந்து பார்த்தேன். அதனுள் ஒரு உரப்பை இருந்தது. அதை வெளியால் எடுத்து விரித்துப் பார்த்தேன். பார்த்தவுடன் எனக்குத் தலைசுற்றியது என்ன செய்வது என்றே தெரியவில்லை. அந்தப்பைக்குள் ஒரு பச்சிளம் சிசுவின் உடல் இருந்தது. அதற்கு உயிர் இருக்கிறதா? இல்லையா? என்பதுதான் இப்போது என்னுள் உள்ள பலமான கேள்வி அந்தச் சிசுவின் உடலை உன்னிப்பாக அவதானித்தேன். அது உயிர் அற்று இருந்தது. அந்தப் பிள்ளை அலை அடித்த அதிர்வில்தான் பிறந்திருக்க வேண்டும். ஏனென்றால் அதன் தொப்புள்கொடி அறுபட்ட நிலையில் தொங்கிக் கொண்டிருந்தது.

சிசுவின் கண்கள் மூடியிருந்தது. அதன் பச்சைத்தோல் இரத்தம் தோய்ந்தது போல சிவப்பாக இருந்தது. கடற்கரையில் வீடு இருந்திருக்க வேண்டும்.



கர்ப்பிணித் தாய் அலையைக் கண்டு அதிர்ந்து போய் ஓடியிருப்பாள். ஆனால் அவளை அலை உருட்டி நசித்திருக்கும் அப்போதுதான் இந்தப் பிள்ளை பிறந்திருக்கும். பிறந்த கணத்தில் இருந்தே அநாதரவாகி விட்டது. உரிமைகோர எவரும் இல்லை. வேதனை தாங்க முடியாமல் இருந்தது. அதைக் கொண்டு வந்தவரிடம் எங்கே இருந்தது என்று கேட்டேன். அவர் சொன்னார் `நான் அதால வரும் போது ஒரு சின்னப் பத்தைக்குள் ஏதோ ஒன்று சிவப்பாய் தெரிந்தது. பாதைக்குப் பக்கத்தில எண்டபடியால் நான் அதை வடிவாய் பார்த்தனான். அப்பத்தான் தெரிஞ்சது ஒரு பிள்ளையின்ர பொடி. அதைப் பார்த்ததும் எனக்கு விட்டுட்டு வர மனம் வரேல்ல. அந்த உடம்பில இருந்த கஞ்சல்கள் எல்லாத்தையும் தட்டிப் போட்டு எடுத்துக் கொண்டு வந்தனான். நான் எடுக்கேக்குள்ளயே பிள்ளைக்கு உயிர் இல்லை எண்டு தெரியும். எங்கயிருந்து தண்ணி கொண்டு வந்திச்சுது எண்டு தெரியேல்ல' என்று கூறிக் கண்ணீர் வடித்தார், அந்த 35 வயது மதிக்கத் தக்க மனிதர்.

இந்தக் காட்சியைப் பார்த்ததும் எனக்கு இரத்தம் ஓடாமல் நின்று விட்டது போல இருந்தது. ஒருவாறு என்னைத் தேற்றிக் கொண்டு, புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு அந்த உடலை அனுப்பி விட்டேன். அதை அனுப்பி விட்டு ஒரு 50 மீற்றர் தூரம் போயிருக்கமாட்டோம் ஒரு சின்னப் பெடியனின் சடலம் இருந்தது. அதையும் எடுத்து அனுப்பிவிட்டு தொடர்ந்து செல்வபுரத்திற்குப் போனோம். போய்க் கொண்டிருக்க ஒரு இடிந்த வீட்டுக்குப் பக்கத்தில நிண்டு ஒருவர் `ஐயோ காப்பாற்றுங்கோ வீட்டுச் சுவருக்குள்ள சிக்குப்பட்டு உயிரோட இருக்கினம் ஓடிவாங்கோ எண்டு கத்திக் கொண்டிருந்தார்.

அந்த வீட்டுக்குப் போனோம் சுவர்கள் எல்லாம் இடிந்து கோப்பிசம் நிலத்தில் இருந்தது. கடல் தண்ணீர் சுற்றிவர இருந்தது. இந்த நிலையில் தேவன் என்ற உறுப்பினர் கூரையைப் பிரிச்சு வீட்டுக்கு உள்ளே இறங்கினார். இடிபாடுகளுக்குள் இருந்தவர்களை சில பொது மக்களுடன் சேர்ந்து வெளியால் எடுத்தோம். அவர்களில் இருவர் இறந்து போய் விட்டார்கள். ஒருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டு இருந்தார். கட்டடம் இடிந்து அவர்களின் மேல் விழுந்ததால் உடல்கள் நசிந்திருந்தன. இப்படி பல உடல்களை மீட்டோம். அடுத்து செல்வபுரம் கடற்கரைப் பக்கம் போனோம் எவரையும் காணவில்லை. எல்லா இடமும் சுற்றிப் பார்த்தோம் ஒன்றுமே இல்லை. குரல் கொடுத்தோம் ஒரு முதியவர் மாமரத்தின் மேல் ஏறி இருந்தார். அவரைக் கீழே இறங்குங்கள் என்றோம். அவர் அதைக் கேட்டபாடில்லை. அவருடன் கஷ்ரப்பட்டு ஒருவாறு மாமரத்தில் இருந்து கீழே இறக்கி விட்டோம் அவர் என்ன செய்வது என்று தெரியாமல் நின்றார்.

அந்தளவுக்கு சம்பவத்தைப் பார்த்த அதிர்ச்சி அவரை ஆழமாகப் பாதித்திருக்க வேண்டும். அந்தளவுக்கு அவரில் பாதிப்பு இருந்தது. அப்படியே திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது ஒரு பற்றைக்குள் இருந்து ஒருவரது கால்தொடை மட்டும் தெரிந்தது. தொடைக்குக் கீழ் கால் இல்லை. எப்படிப் போயிருக்கும் என்று யோசித்தபடி அவரை மீட்பதற்காக அவரின் அருகில் போனோம். அப்போதுதான் தெரிந்தது அவருக்கு ஏக்கனவே கால் இல்லை என்ற விடயம். அவரின் சடலத்தையும் எடுத்து அனைத்தையும் ஒன்றாய் சேர்த்து வாகனத்தில் ஏற்றி புதுக்குடியிருப்புக்கு அனுப்பிவிட்டோம்.

வட்டுவாகலில் உள்ள எங்கள் சீர்திருத்தப் பணிமனைக்கு வந்து அந்தத்தார் வீதியால் கொஞ்சத் தூரம் நடந்து போய்க் கொண்டிருந்தோம். அப்போது வீதிக்கும் தண்ணீருக்கும் நடுவில் ஒரு உடல் கரை ஒதுங்கியது போல இருந்தது. அதன் பின்னால் ஒருவர் ஆடைகள் எதுவும் இல்லாமல் தண்ணீருக்குள்ளால் நடந்து வந்தார். இவர்கள் வட்டுவாகல் ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அலை அடிச்சுக் கொண்டு போயிருக்க வேணும். அப்படியானால் வீதிக்கும் தண்ணீருக்கும் இடையில் இருந்த உடல் என்ன? அது எப்படி வந்தது என்பதை அடுத்த பகுதியில் தருகிறோம்.

**(தொடரும்)**

> ஏன் இப்படி எல்லோரும் ஓடுகிறீர்கள் என்று கேட்க `ஐயோ கடலில இருந்து ஏதோ கறுப்பாய் எங்கண்ட ஊருக்குள்ள பயங்கர வேகமாய் வந்திட்டுது. நாங்கள் திரும்பிப் பாக்கேல்ல. இப்ப இஞ்சாலையும் வரும் நீங்களும் ஓடுங்கோ' என்று பயப் பீதியில் சொல்லிக் கொண்டு ஓடினார்கள்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

(இடம்: புலம்பெயர் மண்ணிலுள்ள ஒரு கடவுள் ஸ்தலம். கடவுளர்கள் அவரவர் அடையாளங்களைப் பிரதிபலிப்பதாகவும் அதேநேரம் மேலைத்தேய நவீன உடையமைப்புகளுடனும் காட்சியளிக்கிறார்கள்)

(சிவன் - சடாமுடி, கங்கை, நாகம், புலித்தோல் ஜீன்ஸ்... நவீனரக சப்பாத்துடன் காட்சியளிக்கிறார். பார்வதி - சேலையுடனான ஒரு நவீன அலங்காரத்துடன் நிற்கிறார்)

# புலம் பெயர்ந்த கடவுளர்கள்

முருகன்:— அப்பா... பொய் சொல்கிறார்... நான் என் கண்ணால் கண்டேன்... ரசித்து நடனம் பார்த்துக் கொண்டிருந்ததை என் கண்ணால் கண்டேன்.

சிவன்:- (கோபமாக) முருகா...

**பார்வதி:—** அவனை ஏன் அதட்டுகிறீர்களா? பார்த்தீர்களா நாரதரே! பிள்ளைகள் என்னிடம் வந்து உண்மையைச் சொன்னால்... இவர் பிள்ளைகள் மீது காரணமில்லாமல் பாய்ந்து விடுகிறார்... இவரின் கூத்துகள் எல்லாம் ஏற்கனவே உலகமறிந்த விடயம் தானே?

**விஷ்ணு:—** வணக்கம் ஈஸ்வரா! வணக்கம் சக்தி தேவி!

**சிவன்:** வணக்கம் விஷ்ணு! வாரும்... நல்ல சமயத்தில் வந்தீர்?... இந்தப் பார்வதியுடன் தினமும் ஒரே ரகளையாக இருக்கிறது.

**விஷ்ணு:—** அப்படியென்ன பிரச்சனை உங்களுக்கிடையில் இருக்கிறது?

கணபதி:- விஷ்ணு மாமா! நான் சொல்கிறேன். எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம் இந்த முருகன் தான்! இவனின் தொல்லை தாங்கமுடியவில்லை மாமா! அப்பாவை நடமாடும் இடத்தில் கண்டதாக இவன் அம்மாவிடம் வந்து கோள்முடித்து வைத்திருக்கிறான்... அதனால் தான் அம்மாவுக்கும் அப்பாவுக்குமிடையில் தினமும் பிரச்சனை!

**விஷ்ணு:—** (சிரித்தவாறே) சரி சரி எனக்கு எல்லாம் விளங்கி விட்டது. நீங்கள் இனி எதுவும் எனக்குச் சொல்லத் தேவையில்லை.

**சிவன்:—** விஷ்ணு! நான் அன்றுநடனம் பார்க்க ஏன் போனேன் என்ற விடயம் எல்லாம் உமக்குத் தெரியும் தானே? நீராவது இந்தப் பார்வதிக்கு எடுத்துச் சொல்லும்... கணவன் மனைவி பிரச்சனைகள் எல்லாம் இப்படித் தெருத்தெருவாய் நாறிப் போகிறமாதிரி இந்தப் பெண்கள் ஆக்கிவிடுகிறார்கள்... என்ன செய்வது?

**பார்வதி:—** (கோபமாக) ஏன் பெண்களை இழுக்கிறீர்கள்? ஆண்கள் நீங்கள் செய்யும் கோமாளி வேலைகளையெல்லாம் சரியென்று நாங்கள் கைககட்டிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?

**விஷ்ணு:—** அடடா?... இருவரும் சற்று நேரம் பொறுங்கள். (நாரதரைப் பார்த்து) நாரதரே! நீர் வந்த வேலை அமோகமாக நடக்கிறது என்று நினைக்கிறேன்... அப்படித்தானே?

***நாரதர்:—*** சிவ சிவா... நான் எதுவும் அறியேன் மகாதேவா!... சுகம் விசாரிக்கலாம் என்று வந்தேன்... அவ்வளவு தான்.

விஷ்ணு:- ம்... இப்படித்தான்... அன்று லக்ஷ்மியிடமும் என்னை தருணம் பார்த்து மாட்டி வைத்தீர்...

**பார்வதி:—** சிவ...சிவா... அப்படியானால் நான் போய்விடட்டுமா மகாதேவா...

விஷ்ணு:- இனியென்ன போவது? ஒரு வழி செய்து விட்டுத்தானே போகவேண்டும்... சரி... சக்திதேவி... நீங்கள் சற்று அமைதியாக நான் சொல்வதைக் கேட்பீர்களா?

**பார்வதி:—**- சரி கேட்கிறேன் சொல்லுங்கள்.

**விஷ்ணு:—** நாங்கள் வந்து குடியேறியிருக்கும் இந்த ஐரோப்பிய நாடுகளில் எங்கள் மக்கள் என்னென்ன சொறி வேலைகளெல்லாம் செய்கிறார்களென்று உங்களுக்குத் தெரியுமா?

**பார்வதி:—** எல்லோரும் நன்றாகத்தான் இருக்கிறார்கள்... அங்கே கோயில்களைப் பாருங்கள்... எவ்வளவு பக்தர்கள் என்று.

**விஷ்ணு:—** இதை மட்டும் வைத்து, எல்லோரையும் கணக்குப் போடுகிறீர்கள் நீங்கள். சற்று வெளியில் சென்று... நல்ல இடங்கள், கூடாத இடங்கள் எல்லாவற்றிற்கும் போய் சுற்றிப் பாருங்கள்... அப்போ தான் எங்கள் இளசுகள் எல்லாம் என்னென்ன சுத்துமாத்துகள் செய்கிறார்கள் என்பது தெரியும்!

**பார்வதி:—** அப்படியென்ன செய்கிறார்கள்?

**விஷ்ணு:—** அப்படிக் கேளுங்கள் தாயே! அந்தத் திருகுதாளங்கள் பற்றிக் கேள்விப்பட்டுத்தான் ஈஸ்வரன் அவர்கள் அதனைப் பார்த்து ஒரு முடிவு எடுப்பதற்காக நீங்கள் சொல்லும் அந்த நடன பாருக்கு ஒருநாள் போயிருந்தார். அவர் நடனம் பார்ப்பதற்காகப் போவதென்றால்... ஏதாவது ஒரு பெரிய பொய்யாக உங்களுக்கெல்லாம் சொல்லிவிட்டுப் போகலாம் தானே? அவருக்குரிய ஒரு பிரதானமான அபிஷேக நேரமா அவர் போகவேண்டும்?

**பார்வதி:—** (யோசனையுடன்) ம்... அதுவும் சரிதான்.

விஷ்ணு:- அவர் போனது... அங்கே எங்களை ஆத்மார்த்தமாக வழிபடும் பெற்றோருக்குப் பிறந்த சில தமிழ் இளைஞர்கள் மது அருந்திவிட்டு... ஒரு girl friend பிரச்சனைக்காக... ஒருவரையொருவர் கத்தியால் வெட்டிக் குத்தி... சண்டைபிடித்துக் கொண்டிருந்ததை தடுத்து... அந்தப் பிள்ளைகளை அதிலிருந்து காப்பாற்றுவதற்காகத்தான்.

***கணபதி:-*** பார்த்தியா முருகா? உன் குரங்குப் புத்தியால் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் எத்தனை மனஸ்தாபம் என்று பார்த்தியா?

**பார்வதி:—** சிவ சிவா... என்னை மன்னித்து விடுங்கள் சுவாமி!

**சிவன்:—**சரி... சரி உன்னை எத்தனை தரம் தான் மன்னித்து விட்டிருக்கிறேன். நான் காரணம் சொல்ல முயன்ற போதெல்லாம் போதும் உங்கள் புழுகெல்லாம் என்று எத்தனை தடவைகள் உன் காதுகளை மூடிக்கொண்டாய்... இப்போ விஷ்ணு சொன்னபோது தான் கேட்டாயாக்கும்... இனி ஒவ்வொரு தடவைகளும் நான் என் பிரச்சனைகளை விளங்க வைக்க விஷ்ணுவைத்தான் அழைக்க வேண்டுமோ.

***நாரதர்:—*** சரி ....அப்போ.. .நான் வரட்டுமா ஐயனே?

**சிவன்:—** வந்த வேலை முடிந்தது தானே போய்வா....

***நாரதர்:—*** (மேடையை விட்டுப் போனவாறே) சிவ சிவா.... சம்போ மகாதேவா..



## காட்சி – 2

## (இடம்:— வீடு)

காட்சி:— (மேசையில் cake வெட்டுவதற்கான ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது. சுவரில் பிறந்த நாள் அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கிறது. பாத்திரங்கள்:— சிவன், பார்வதி, கணபதி, முருகன், விஷ்ணு, லக்சுமி, நாரதர்... யாவரும் நிற்கிறார்கள்)

**சிவன்:—** பார்வதி....இன்னும் யார்யாரெல்லாம் வரவிருக்கிறார்கள்...?

**பார்வதி:—** ம்...பிரம்மன் குடும்பம் இன்னும் வரவில்லை... நெருக்கமான உறவினர்களைத் தவிர வேறு யாருக்கும் நாம் சொல்லவில்லைத் தானே?

(அந்நேரம் வள்ளியும் தெய்வானையும் வருகிறார்கள். அவர்கள் நவீன உடையான tight skirt & blouse, high heels அணிந்திருக்கிறார்கள்)

தெய்வானை:- (நடந்து வந்தவாறே) ஹைய்...முருகா! எப்படி இருக்கீறீர்கள்? Happy Birthday to You!

முருகன்:- Thank you! தெய்வானை.

வள்ளி:- Happy Birthday to You முருகா!

முருகன்:— Thanks வள்ளி.

***நாரதர்:—*** கொஞ்சம் இருங்கள். (தெய்வானையைக் காட்டி) இவர் தெய்வானை... முருகனின் வருங்கால மனைவி. பெரியோர்கள் பார்த்து நிச்சயம் பண்ணியது! (பின்பு வள்ளியைக் காட்டி) இந்தப் பெண் யார்?

முருகன்:— (நாரதரே!... இவள் Just என் girl friend அவ்வளவு தான்.

***நாரதர்:—*** (முகத்தைச் சுளித்தபடி) சரி...சரி....பூலோகத்து மனிதர்கள் தான் என்னென்னவோ எல்லாம் செய்கிறார்கள் என்றால்... தேவலோகத்தவர்களுமா?

***கணபதி:—*** (மூச்சிரைக்க ஓடி வருகிறார்) அம்மா... அம்மா... பிரம்மன் அங்கிளும் சரஸ்வதி அன்ரியும் வருகிறார்கள்... இனி முருகனின் Birthday cake வெட்டலாம் அம்மா.

**பார்வதி:—** சரி... வெட்டுவதற்கு ஆயத்தப்படுத்துங்கள்.

(பிரம்மனும் சரஸ்வதியும் மேடைக்கு வருகிறார்கள்)

**சிவன்:—** பிரம்ம தேவனே வாருங்கள். எங்கே உங்கள் மனைவி... வீணையோடு வீட்டில் அமர்ந்து விடுவார்களோ என்று யோசித்தேன்... நல்லவேளை அவரும் வந்துவிட்டார்.

**பிரம்மன்:—** சரஸ்வதி இன்று party க்கு வராமல் தப்பமுடியவில்லை. ஏன் தெரியுமா? பார்வதி தேவி அவர்கள்,Phone ல் கையும் மெய்யுமாக பிடித்து, நிச்சயம் முருகனின் பேர்த்டேக்கு வரவேண்டும் என்று சொல்லி விட்டா... அதன் பிறகு அவள் எப்படி வராமல் இருக்கமுடியும்?

சரஸ்வதி:- (மெதுவாக புன்னகை செய்தவாறே) முருகனின் 21வது பிறந்தநாள் அல்லவா? வராமல் இருந்தால் நன்றாக இருக்காதல்லவா?

பார்வதி:- மிக்க நன்றி எல்லோருக்கும். சரி... இனி நாங்கள் cakeஐ வெட்டலாம்.

(எல்லோரும் வெட்டுவதற்கு ஆயத்தமாகிறார்கள்... அந்த நேரத்தில்... ஔவைப் பாட்டியும்... சில முனிவர்களும் வருகிறார்கள்)

ஔவை:- சிவன், சக்தி, விஷ்ணு, லக்சுமி, பிரம்மன், சரஸ்வதி... கணபதி, முருகன்... இன்னும் நாரதர்... முனிவர்கள் எல்லாரும் ஒன்றுகூடி நிற்கும் இந்த அற்புதமான நேரத்தை நான் தவறவிடலாமா என்று எண்ணி... நானும் அழையாத விருந்தாளியாக இங்கு வந்திருக்கிறேன். என்னை ஆசிர்வதியுங்கள் சுவாமி!

(எல்லோரும் ஏக குரலில், வருக...வருக...ஔவையே! என்று வரவேற்கிறார்கள்)

ஔவை:- எம்பெருமான் முருகனின் அழகு! இன்று அவனின் பிறந்த நாளன்று அவனை நான் வாழ்த்தி ஒரு பாடல் பாடவே முக்கியமாக இந்நேரம் வந்தேன்.

**சிவன்:—** சரி... முதலில் கேக்கை முருகன் வெட்டட்டும்... அதன் பின் ஔவைப்பாட்டி தன் பாடலைப் பாடட்டும்.

(பட்டாசுகளுடன் கேக் வெட்டப்படுகிறது. முருகன் எல்லோருக்கும் கேக் தீத்துகிறார்)

(அதன் பின் ஔவைப் பாட்டி பாட ஆரம்பிக்கிறார்)

பாடல்:- பழம் நீயப்பா... காய் நீயப்பா...
தமிழ் ஞானப் பூ நீயப்பா...
கடல் நீயப்பா... குளம் நீயப்பா...
எல்லாக் குட்டைகளும்
நீதானப்பா...

(இடையில் கணபதி குறுக்கிடுகிறார்)

கணபதி:- நிறுத்துங்கள்... ஔவைப்பாட்டியாரே..! அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை நீங்கள் எப்பவும் என் தம்பியைப் பற்றித்தான் அதிகமாகப் புகழ்ந்து பாடுகிறீர்கள்... என்னை, அவல் கடலை சுண்டல்... அரிசிக்கொழுக்கட்டையோடு மட்டும் நிறுத்திவிட்டீர்கள்... இன்று நீங்கள் என்னையும் போற்றிப் பாடவேண்டும். பாடுவீர்களா?

**ஔவை:—** ஆனை முகத்தானே! தும்பிக்கையானே!.. முருகனுக்கு மூத்தவனே! உன்னை நான் பாடாமலா !

(பாடல் ஆரம்பிக்கிறது)

ஔவை:- குளிர் பாலும்... சீனியில் கரைத்த தேனும்
பழைய பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்தெடுத்து
நான் தருவேன்!
கோலம் செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே!
நீ யெனக்கு இங்கிலீஸில் நாலுவார்த்தை
பேசி மகிழ... நல்லதொரு வரம் தா!?

(மேடையில் நிற்பவர்கள் அனைவரும் ரசித்து ஆரவாரப்பட்டுக் கைதட்டுகிறார்கள்)

**சிவன்:—** பிறகென்ன ஔவைப் பாட்டியே! உங்கள் கவிப்புலமையே புலமை! நீவிர் பெரும் பேறு பெற்று வாழ்வீர்! வர்ழ்க! வளமுடன்!

**பார்வதி:—** யாரோ வாசலில் வந்து நிற்பது போலத் தெரிகிறது. கணபதி... யாரென்று பார்.

***கணபதி:—*** அம்மா...! order பண்ணிய pizza வந்துவிட்டது.

சரஸ்வதி:- (மெதுவாக) எனக்கு mushroom ஒத்துக் கொள்ளாது....

***கணபதி:—*** சரஸ்வதி அன்ரி, எல்லா விதமான பிசாவும் வந்திருக்கிறது. பயப்படாதீர்கள். நீங்கள் தெரிவுசெய்து சாப்பிடலாம்.

**சிவன்:—** ஓகே... எல்லோரும் சாப்பிட ஆயத்தமாகுங்கள்.


*(முற்றும்)*

# நீதிமன்றத்தில் சதாம் தாக்கப்பட்டாரா?

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் விசாரணைக்காக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டிருந்தபோது அவரை ஒருவர் தாக்கியுள்ளார். அமெரிக்கப் படையினரின் பாதுகாப்பில் உள்ள சதாமிற்கு நடந்த இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, சதாம் உசேன் மீது பாகதாத் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று உள்ளது. 1991ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தில் குர்திஷ் மற்றும் ஷியா முஸ்லிம்கள் நசுக்கப்பட்டதாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டு இருந்தது.

இந்த வழக்கு விசாரணைக்காக சதாம் உசேன், நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தார். அவருக்காக அவரது வழக்கறிஞர் கலீல் துலாய்மி வாதாடிக் கொண்டு இருந்தார். விசாரணை முடிந்ததும் சதாம் உசேனை அறையில் இருந்து அழைத்துச் செல்ல தயாரானபோது, அங்கு நின்று கொண்டிருந்த ஒரு மர்ம மனிதன் சதாம் உசேனை தாக்கியுள்ளார். இதை சதாம் உசேன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. எனினும் சுதாகரித்துக்கொண்டு அந்த மனிதனை சதாமும் பதிலுக்கு தாக்கியுள்ளார். இந்தச் சம்பவத்தை தடுத்து நிறுத்த பாதுகாப்பிற்கு நின்ற அமெரிக்கப் படையினரோ அல்லது நீதிபதியோ, அங்கு கூடியிருந்தவர்களோ முயற்சி செய்யவில்லை.

இத்தகவலை சதாம் உசேன் ஆதரவு சட்ட நிபுணர்கள் குழு ஜோர்டான் தலைநகர் அம்மானில் இருந்து இந்த தகவலை வெளியிட்டுள்ளனர். ஆனால் இந்த தகவலை அமெரிக்கா மறுத்துள்ளது. சதாம் உசேன் அமெரிக்க இராணுவத்தின் பாதுகாப்பில்தான் உள்ளார். அவரை யாரும் தாக்கவில்லை. நீதிமன்ற அறையில் தாக்குதல் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்று அமெரிக்க இராணுவ தளபதி கிறிஸ்டி மில்லர் தெரிவித்துள்ளார்.





பிரித்தானியப் பிரதமர் ரோனி பிளேயர் கடந்த 29ம் திகதி வெள்ளிக்கிழமை கிழக்கு இலண்டனில் உள்ள இந்திய நடன பயிற்சி பள்ளிக்கு சென்று பார்வையிட்டார். அப்போது நடனப் பெண்களைப் போன்று பிரதமர் ரோனி பிளேயரும் "விரல்களில் அபிநயம் செய்து பார்ப்பதைப் படத்தில் காணலாம்.

## சிறுவர் உரிமைகளைப் பறிக்கும் அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்க ஐ.நா முடிவு

ஆயுதப் போராட்டங்கள் நடை பெறும் இடங்களில் உள்ள சிறார் களின் பாதுகாப்பை இலக்காகக் கொண்ட தீர்மானம் ஒன்றை ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்புச் சபை ஏகமனதாக நிறைவேற்றியுள் ளது. ஆயுத, தீவிரவாதக் குழுக்கள் மற்றும் அரசாங்கங்களால் சிறார்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதல் மற்றும் அவர்களது உரிமைகள் பறிக்கப்படுதல் போன்றவற்றைக் கண்காணிக்க ஒரு முறைமையை உருவாக்க அது முடிவு செய்துள்ளது.

சிறார்களை போருக்குச் சேர்த் தல், கொலை செய்தல், காயப் படுத்தல் மற்றும் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடும் ஐம்பதுக் கும் அதிகமான அமைப்புகளின் பெயர்களை ஐ.நா அமைப்பு இவ்வருட ஆரம்பத்தில் பட்டியலிட் டிருந்தது.

நேபாள கிளர்ச்சிக்காரர்கள், தார்பூரின் ஜேன்ஜாவிட் அமைப்பு போன்றவை சிறார்களை கொல்லுதல், கடத்தல், காயப்படுத்தல் போன் றவற்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட் டுள்ளன. இந்த அமைப்புகள் சிறார்களின் விடயத்தில் நல்ல பயன் ஏற்படும் வகையிலான நடவடிக்கைகளை எடுக்கத் தவறும் பட்சத்தில், அவற்றுக்கு எதிராக இலக்கு வைத்த நடவடிக்கைகளை எடுப்பது பற்றி கவனம் செலுத் தவும் பாதுகாப்புச் சபை உடன்பட் டுள்ளது. இதன்படி அந்த அமைப் புகளின் மீது பயணக் கட்டுப்பாடு, ஆயுதத் தடை, இராணுவ உதவிகள் தொடர்பான தடைகள் மற்றும் நிதிக் கட்டுப்பாடுகள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படலாம். கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஆயுத மோதல்களால் 20 இலட்சம் சிறார்கள் இறந்துள் ளார்கள் என்றும், உலகெங்கிலும் உள்ள பல மோதல்களில் இரண் டரை லட்சம் சிறார்கள் தற்போது போர் வீரர்களாகச் செயற்படுகிறார்கள் என்றும் ஐ.நாவின் தகவலொன்று கூறுகிறது.

இதுதொடர்பாக பதிலளித்த ஐ.நா சிறப்பு பிரதிநிதி ஒலரா ஒட்டுன்னு, இந்த கண்காணிப்பு மற்றும் அறிக்கை தரும் அமைப்பு என்பது மோதல் நடக்கும் இடங் களிலேயே அமைக்கப்படும் என்றும், ஐ.நா மன்றத்தலைமையின் கீழ் ஒரு செயல்பாட்டுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டு, அது தகவல் களை சேகரித்து, ஐ.நா மன்ற தலைமையகத்துக்கு அனுப்பும் என்றும், அங்கு, மற்றுமொரு செயல்பாட்டுக்குழு இது போன்ற உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் தகவல்களை ஒன்று திரட்டி, ஐ.நா மன்ற பாதுகாப்பு ஆணைக் குழு, மனித உரிமை ஆணையம், பன்னாட்டு குற்றவாளிகள் நீதிமன்றம் மற்றும் பிற முடிவெடுக்கும் அமைப் புகளுக்கு அனுப்பும் என்றும், எனவே செவ்வாய்க்கிழமை நிறைவேற் றப்பட்ட தீர்மானம் சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த ஒன்று என்றும் அவர் பதிலளித்தார்.

## தண்டனை முடிந்த பின்னரும் நளினி விடுதலைக்காக காத்திருப்பு

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நளினி, தண்டனைக் காலம் முடிந்து 27 நாட்களான நிலையில் விடுதலைக்காக காத்திருக்கிறார். ராஜீவ் காந்தி கடந்த 1991 மே 21ம் திகதி சிறீபெரும்புதூரில் கொல்லப்பட்டார். இதில், குற்றவாளிகளான முருகன், அவரது மனைவி நளினி, சாந்தன், பேரறிவாளன் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டனர். இதில், முருகன், அவரது மனைவி நளினி, சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்கு 1998 ஜனவரி 28ம் திகதி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றும்படி இவர்கள் ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினர். அப்போது நளினி கர்ப்பமாக இருந்ததால் அவருக்கு மட்டும் தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. மற்றவர்களுக்கு இதுவரை தண்டனை குறைக்கப்படவில்லை.

நளினி வேலூர் பெண்கள் சிறையிலும், அவரது கணவன் முருகன் உட்பட மூன்று பேர் வேலூர் ஆண்கள் சிறையிலும் தண்டனை அனுபவித்து வருகின்றனர். கடந்த யூன் மாதத்துடன் நளினியின் தண்டனைக் காலமான 14 ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இவரை விடுதலை செய்ய பரிந்துரை செய்து வேலூர் பெண்கள் சிறை அதிகாரிகள், சென்னையில் உள்ள சிறைத்துறை அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். இது குறித்து, வேலூர் பெண்கள் சிறை அதிகாரிகளிடம் கேட்டபோது, 'ஆயுள் தண்டனை என்பது 20 ஆண்டுகள். ஆனால், சிறைச்சாலை நன்னடத்தை விதிகளின்படி 14 ஆண்டுகள் சிறையில் இருந்தாலே, அவர்கள் நடத்தையைப் பொறுத்து விடுதலை செய்ய பரிந்துரை செய்யப்படுவது வழக்கம். இந்த வகையில் சிறையில் நளினி இருந்தவரை, அவர் மீது எந்தத் தவறும் நிரூபிக்கப்படவில்லை. எனவே, அவரது தண்டனைக் காலம் கடந்த யூன் மாதத்துடன் முடிவடைந்ததால், அவரை விடுதலை செய்யும்படி சென்னை சிறைத்துறை உயரதிகாரிகளுக்கு பரிந்துரைக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை பதில் வரவில்லை' என்றனர்.

## சீனாவில் மனிதருக்கு பன்றி நோய்

சீனாவில் பன்றி நோய் தாக்கியதில் 30க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர். பலர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பன்றியில் இருந்து புறப்பட்ட ஒருவகைக் கிருமிகள் மனிதர்களை தாக்கியதில் இந்நோய் ஏற்பட்டுள்ளது. இந்நோய் தாக்கத்துக்கு உள்ளான 152 பேர் சீனாவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சீனா சிச்சுவான் மாநிலத்தில்தான் இந்த நோய் கடுமையாக பாதித்துள்ளது. நோய் தாக்கிய பன்றிக் கறியை உட்கொள்ளும்போது, பன்றியை வெட்டும்போது சிதறும் இரத்தத் துளிகளின் மூலம் இந்த நோய் பரவி வருவதாக கூறப்படுகிறது. இந்த நோய் இப்போது கொங்கொங்கிற்கும் பரவி உள்ளதாகவும் அங்கு இதுவரை இந்நோய்க்கு உள்ளான ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.



## பயங்கரவாதத்தை தடுக்க முக்கிய மாற்றங்களை அமெரிக்கா மேற்கொள்ளவுள்ளது - கொண்டலீசா ரைஸ்

உலக அளவில் பயங்கரவாதத்தை எதிர்ப்பதிலும் பேரழிவு ஆயுத அபாயத்திலிருந்து காத்துக் கொள்ளவும் நிர்வாக ரீதியில் சில முக்கிய மாற்றங்களை அமெரிக்கா மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலீசா ரைஸ் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க அதிகாரிகள், தூதரக ஊழியர்கள் கூட்டத்தில் இதை அறிவித்தார்.



அங்கு அவர் கூறியதாவது, ஆயுத கட்டுப்பாடு குழு, ஆயுத பரவல் தடைக் குழு ஆகியவை ஒன்றாக இணைக்கப்படும். சர்வதேச பாதுகாப்பு, ஆயுத பரவல் தடைப் பிரிவு என இதற்கு பெயரிடப்படும்.


பயங்கரவாதிகளின் கையில் பேரழிவு ஆயுதங்கள் சிக்குவதை தடுக்க தனியாக புதிய பிரிவும் இதில் செயல்படும். அரசியல் - இராணுவ குழு மேலும் வலுவுள்ளதாக்கப்படும். உலக விவகாரங்களுக்கான சார்பு செயலர், இனி உலகில் எங்கெங்கு ஜனநாயகம் இல்லையோ அங்கெல்லாம் அதைக் கொண்டுவர முக்கிய கவனம் செலுத்துவார் என்றார்.

அமெரிக்காவின் ஈராக் மற்றும் பிற வெளிநாடுகள் தொடர்பான கொள்கையால், ஒவ்வொரு நாளும் பயங்கரவாதிகள் புதிது புதிதாக உருவாக்கப்படுகின்றனர் என்று பயங்கரவாத தடுப்பு நிபுணர்களும் முஸ்லிம் மத கொள்கைகள் தொடர்பான நிபுணர்களும் கருத்து தெரிவித்துள்ளனர் என்று நிருபர்கள் கேள்வி எழுப்பியபோது அதற்கு அமைச்சர் பதில் அளிக்கையில், அமெரிக்காவில் இரட்டை கோபுரம் தாக்கப்பட்டபோது, ஈராக்கில் அமெரிக்க படைகள் இல்லை. அப்போது ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்க படைகள் இல்லை. பயங்கரவாதிகளின் தாக்குதல் உலகம் முழுக்க நடக்கிறது. மொராக்கோவில், பாலித் தீவில், எகிப்தில், இலண்டனில், ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் தாக்குதல்கள் நடந்திருக்கின்றன. இதற்கெல்லாம் காரணமானவர்கள் கெட்டவர்கள், கொலை ஒன்றுதான் அவர்களது குறிக்கோள். வக்கிரமான சித்தாந்தம் கொண்டவர்கள் அவர்கள். இதை அவர்கள் இஸ்லாம் என்று தவறாகக் கூறுகின்றனர். பயங்கரவாதத்தை பயங்கரவாதம் என்று கூறாமல் இருந்தால் பயங்கரவாதம் தொடரத்தான் செய்யும் என்றார் அவர்.

# சிறுவர் முற்றம்

## அறிஞர் முற்றம்

### ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர்



அடிமை முறை வழக்கில் இருந்த 1864 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் அமெரிக்காவில் மிசௌரி மாநிலத்தில் டைமண்ட் க்ரோவ் (Diamond grove) எனுமிடத்தில் பிறந்தவர் ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர். குடிபெயர்ந்த ஓர் ஜெர்மன்காரருக்கு சொந்தமான விவசாயப் பண்ணையில் அடிமைப் பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார் கார்வர். தன்னுடைய பத்தாவது வயதில் தான் பிறந்த பண்ணையிலிருந்து இடம் மாறி கான்சானில் மின்னிபோலிஸ் என்னும் இடத்திற்கு வந்து தன் பள்ளிப் படிப்பை மேற்கொண்டார்.

கார்வருக்கு 30 வயதானபோது லோவா மாநிலத்தின் இண்டியநோலாயிலுள்ள சிம்சன் கல்லூரியில் முதல் கருப்பின மாணவராகச் சேர்ந்தார். பின்னர் அங்கிருந்து மாற்றப்பட்டு, லோவா மாநில வேளாண் மற்றும் இயந்திரக் கலைக் கல்லூரிக்குச் சென்று படித்தார். 1894 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற கார்வர் அதே கல்லூரியில் (தற்போது அந்தக் கல்லூரி லோவா மாநில பல்கலைக் கழகமாக உள்ளது) பயிற்றுநராகப் பணியில் சேர்ந்தார்.

தாவரவியல் துறையில் பக்டீரியா ஆய்வகத்தில் நிபுணராக விளங்கினார். இயற்கை மூலங்களாகிய விவசாய விளை பொருள்களிலிருந்து புதிய பொருள்களைத் தயாரிக்கும் ஆய்வுப் பணியை கார்வர் மேற் கொண்டிருந்தார்.

1896- ஆம் ஆண்டு ‘தஸ்கஜீ’ தொழிற் கூடத்தில் வேளாண் ஆராய்ச்சித் துறை இயக்குநராகப் பதவி யேற்றார். அவ்வாராய்ச்சியகத்தில் நிலக்கடலையிலிருந்து பயன்பாட்டுப் பொருள்கள் தயாரிக்கும் ஆய்வை மேற்கொண்டார்.

நிலக்கடலை, மரவள்ளிக்கிழங்கு, சோயா பீன்ஸ் போன்றவற்றிலிருந்து நூற்றுக்கணக்கான தொழிற் பயன்பாட்டுப் பொருள்களைக் கண்டெடுத்தார். புதிய வகைப் பருத்தியை அவர் உருவாக்கினார். அது கார்வரின் பெயராலேயே Carvers Hylorid (கார்வரின் கலப்பினம்) என்றே அழைக்கப்படுகிறது.

கார்வரின் கண்டுபிடிப்புகள் அமெரிக்காவின் தென்னக விவசாயிகளுக்கு புத்துணர்ச்சியளித்து பரத்தியுடன் பல்வேறு பயிர்களையும் பயிரிடவாய்ப்பளித்தது. மண் வளத்தை உயர்த்துவதற்கான அலோசனைகளையும் கார்வர் வழங்கினார்.

கார்வர் தனது ஆராய்ச்சியின் விளைவாக, நிலக்கடலையிலிருந்து 325 பொருள்கள், மரவள்ளிக் கிழங்கிலிருந்து 108 பயன்பாடுகள் போன்ற பல்வேறு பொருள்களிலிருந்தும் பயன்பாட்டுப் பொருட்கள், தொழிற் பொருட்கள் கிடைத்தன.

விவசாய விளைப் பொருட்களிலிருந்து 500 வகையான வண்ணக் கலவைகள், ரப்பருக்கு மாற்றுப் பொருள்கள், சாயங்கள் போன்ற வற்றைக் கண்டுபித்தார்.

உணவுப் பொருட்களாகப் பயன்படும் வெண்ணெய்க்கட்டிகள் (cheese), மிளகாய்ச் சாறு (chilli sauce), உடனடிகாபி (Instant coffee) போன்றவற்றையும் ஷாம்பூ ஷபாலிஷ், ஷேவிங் கிரீம், முகப்பூச்சு (Talcum Powder) உள்ளிட்டவற்றையும், வண்ணப் பூச்சுகள், மரப் பாலீஷ்கள் போன்ற பல்வேறு பொருள்கள் கார்வரால் உருவாக்கப்பட்டவையாகும்.

இவரது பணியைப் பாராட்டி 1923 ஆம் ஆண்டு கருப்பின மக்களுக்கான தேசிய முன்னேற்ற சங்கத்தின் ஸ்பிங்கார்ன் பதக்கம் வழங்கப்பட்டது இது அவ்வின முன்னேற்றத்துக்கு பாடுபடுவோருக்காக வழங்கப்படும் பதக்கமாகும்.

கார்வர் 1943- ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் தேதி மறைந்தார். ஆவ்வாண்டு யூலை 14ஆம் நாள் அமெரிக்க அதிபர் பிராங்களின் ரூஸ்வெல்ட் அவர்களால் கார்வரின் சாதனையைப் போற்றும் விதத்தில் தேசிய நினைவகம் அமைக்க 30,000 அமெரிக்க டாலர்கள் வழங்கப்பட்டது கறுப்பினப் பெருமகன் ஒருவருக்கு அவ்வாறு நினைவகம் அமைக்கப்படுவது அதுவே முதல் முறை.

சமா. இளவரசன்

## தகவல் முற்றம்

### மலைச் சிங்கம்

அமெரிக்காவில் உள்ள ஒரு பெரிய புலி இனம் பூமாவாகும். பலநேரங்களில் இதனைப் பெண் சிங்கம் என்று தவறாகப் பலரும் கருத நேர்கிறது. அதன் தோல்கள் வலிமை மிக்கவை. அதன் பெரிய பாதங்களில் உள்ள நீண்ட நகங்கள் எதனையும் கிழிக்கும் ஆற்றல் கொண்டவை. வெளிர் மஞ்சள் முதற்கொண்டு சிவப்பு. குளிர் காலத்தில் கருப்பு என்று பல நிறங்கள் கொண்டது பூமா. சிறுத்தைப் புலிகளைப் போன்ற புள்ளிகள் இதன் உடலில் இருப்பதில்லை.



பூமா ஒரு தனிமையான வாழ்க்கையை மேற்கொண்கிறது. பெரும்பாலும் அது கண்ணுக்கு மறைவாகவே வாழ்கிறது. அதன் பலமும் ஆற்றலும் பெயர் பெற்றவை. ஒரே பாய்ச்சலில் 6மீட்டர் தூரம் தாண்ட இயன்றது அது. தேவைப்படும் போது, 18 மீட்டர் உயரத்தில் இருந்தும் அது தரையில் குதிக்க முடியும். சிறுத்தையைப் போல பூமாவும் பல்வகைப்பட்ட விலங்குகளை உண்ணுகின்றன. பெரும்பாலும் அவை இரவிலேயே வேட்டையாடச் செல்லும். நீண்ட தொலைவில் இருந்தும் அது தனது இரையைத் தாக்கும். ரத்தத்தை உறைய வைக்கும் அதன் உறுமல்கள் அது ஒரு மூர்க்கத்தனமான மிருகம் என்ற எண்ணத்தை உருவாக்கும் ஆனால் அது அரிதாகவே மனிதர்களைத் தாக்கும்.

### அன்பார்ந்த சிறு வர்களே

மீண்டும் தொடங்கப்பட்டிருக்கும் சிறுவர் முற்றம் பகுதியில் உங்கள் ஆக்கங்களும் இடம் பெறவேண்டுமா? உடனே உங்களுடைய ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள் உங்கள் கைவண்ணங்கள் யாவும் இப்பகுதியில் இடம்பெறும் என்பதை அறியத்தருகிறோம். இப்பகுதியில் எழுதுவதற்கு உங்கள் பிள்ளைகளை ஊக்குவிக்குமாறு பெற்றோர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

## கதை முற்றம்

### அப்பம் விற்றார்கள் இப்படி!



ஓர் ஊரில் ஒரு பாட்டி இருந்தாள். அவள் தினமும் அப்பம் சுட்டு பக்கத்து ஊரில் கொண்டு போய் விற்று அதில் வருதைக் கொண்டு வாழ்ந்து வந்தாள். ஒரு நாள் பாட்டிக்கு சற்று சுகமில்லை. தன்னுடைய இரு பேரன்களான அகில், முகில் இருவரையும் அழைத்து, டேய் பசங்களா! இந்த அப்பங்களைக் கொண்டு போய் ஒன்று ஒரு ரூபாய் வீதம், விற்று வாருங்கள் என இரண்டு கூடைகளில் தலா இருபது அப்பங்களை வைத்துக் கொடுத்தாள். ஒருவனது கையில் செலவுக்காக இரண்டு ரூபாய்களை கொடுத்தாள்.

பேரன்மார்கள் இருவரும் பக்கத்து ஊருக்கு செல்கையில் அகிலுக்கு அப்பம் தின்ன ஆசை உண்டாக, தன் கையில் பாட்டி கொடுத்த இரண்டுரூபாயை முகிலிடம் கொடுத்து இரண்டு ரூபாய்க்கு அப்பம் தாயேன் என்று கேட்க, முகிலும் தனக்கு இரு அப்பம் விற்கின்றன என்று மகிழ்வுடன் இரண்டு அப்பங்களை அகிலிடம் கொடுத்தான். சிறிது தூரம் சென்றதும், முகிலுக்கும் அப்பம் தின்ன ஆசை வந்துவிட்டது. அவன் அகில் தந்த இரண்டு ரூபாயை அவனிடம் கொடுத்து இரண்டு அப்பங்களை வாங்கி தின்று விட்டான். இப்படியே அவர்கள் மாறி, மாறி ஒரே ஒரு இரண்டு ரூபாயை கொடுத்தும் வாங்கியும் பாட்டி கொடுத்தனுப்பிய அப்பம் முழுவதையும் சாப்பிட்டு விட்டனர். கடைசியாக மிஞ்சியது பாட்டி அகில் கையில் கொடுத்த இரண்டு ரூபாய் மட்டுமே. இருவரும் வீட்டையடைந்து பாட்டியிடம் அப்பம் விற்ற இரண்டு ரூபாயைக் கொடுக்க, பாட்டி முழிக்க, அகிலும், முகிலும் தாங்கள் எப்படி அப்பம் விற்றோம் என்பதை விளக்க, பாட்டிக்கு கடும் கோபம் ஏற்பட்டு அவர்களை அடிக்க முயல்வதற்குள் இருவரும் ஓட்டம் பிடித்தனர்.

கிராமத்துக் குயில்.

## விடுகதை முற்றம்

01) உமி போல் பூப்பூக்கும்
சிமிழ் போல் காய் காய்க்கும்- அது என்ன?
02) இரண்டு தோட்டம், நான்கு வேலி
பூப்பூத்தால் பூந்தோட்டம் பாழ்! அது என்ன?
03) ஆணியை எதில் அடித்தால் இறக்கும்?
04) அடி, காட்டில், நடு,மாட்டில்
நுனி, வீட்டில்- அது என்ன?
05) மரம் பருமரம்
பருமரத்தில் பன்னிரண்டு கொப்பு
கொப்புக்கு முப்பது பூ- அது என்ன?
06) பட்டை உண்டு கட்டை இல்லை
இலை உண்டு கிளை இல்லை
பூவுண்டு மணமில்லை- அது என்ன?
07) மூணு பெண்ணும் ஒரே முகம்
பூத்த பொண்ணு கடலிலே,- நடு பொண்ணு காட்டிலே, கடைசி பொண்ணு வீட்டிலே - அவர்கள் யார்?
08) கண்ணுக்கு விருந்தாய் கையில் இருக்கும்
கருத்துக்கு விருந்தாய் மனதில் ஒலிக்கும்
ஞானத்தைச் சுமந்து நமக்கு தந்தே நல்லபடி வாழ்வதற்கு
உதவியும் செய்யும் இது எது?
09) நீரிலே நீந்திப் போகும் மனிதன் அல்ல
நெடுந்தூரம் போகும் வரும் குதிரை அல்ல
காற்றிலே ஆட்டமிடும் செடியும் அல்ல
கரையேறி நடக்காது முடமும் அல்ல! அது என்ன?
10) ஊருக்கெல்லாம் ஓய்வு உழைப்பவர்க்கும் ஓய்வு
இவனுக்கு மட்டும் ஓய்வில்லை இரவும் பகலும் ஓட்டந்தான் - யார் அவன்?

**விடைகள் அடுத்தவாரம்.**

### கடந்த வார விடைகள்-

| | | |
|---|---|---|
| இத்தாலி | - | சாய்ந்த கோபுரம் |
| அமெரிக்கா | - | சுத்திரச் சிலை |
| பிரான்ஸ் | - | ஈபிள் கோபுரம் |

# முத்தரப்பு கிரிக்கெட்
# முதல் ஆட்டத்தில் சிறீலங்கா வெற்றி

சிறீலங்கா, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் கலந்து கொள்ளும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டித் தொடரில், இந்தியாவிற்கெதிரான முதலாவது போட்டியில் சிறீலங்கா அணி மூன்று விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. சனிக்கிழமை தம்புள்ள ரன்கிரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுகள் இழப்பிற்கு 205 ஓட்டங்களை எடுத்தது. இதில் அதிகபட்ச எண்ணிக்கையாக இந்திய அணித் தலைவர் ராகுல் டிராவிட் 54 ஓட்டங்களை எடுத்தார். சிறீலங்கா அணியின் முத்தையா முரளிதரன் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதேபோல தன்னுடைய முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியை விளையாடிய தில்ஹார லொகுஹெட்டிகே சிறப்பாக பந்து வீசி இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

வெற்றி பெற 206 ஓட்டங்கள் தேவை என ஆட்டத்தைத் தொடங்கிய சிறீலங்கா அணி ஒரு கட்டத்தில் 172 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுகளை இழந்து தத்தளித்த நிலையில் அணியின் பிரதான ஆட்டக்காரர் சனத் ஜெயசூரிய சிறப்பாக ஆடி 43 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்து சிறீலங்கா அணி வெற்றி பெற உதவினார். சிறீலங்கா அணியின் எண்ணிக்கை 48.2 ஓவர்களில் 209 ஓட்டங்கள். இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தியா - மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் எளிதாக வெற்றி பெற்றது.



# மேற்கிந்திய தீவு அணிகளின் உடமைகளைத் திருடிய சிறீலங்கா இராணுவச் சிப்பாய் கைது!

கொழும்பில், கடந்த 10ம் திகதி திருட்டுப்போன மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வீரர்களின் உடைமைகளை சிறீலங்காப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். சிறீலங்கா அணியுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாட வந்த மேற்கிந்தியத்தீவுகள் அணியினர், கடந்த 10ம் திகதி கொழும்பில் பயிற்சி போட்டியில் பங்குபற்றிக்கொண் டிருந்தபோது, அவர்கள் கொண்டுவந்த உடைமைகள் திருட்டுப் போயிருந்தன. அதில் வெளிநாட்டுப் பணம், செல்பேசிகள் இருந்துள்ளன.


இது குறித்து சிறீலங்கா கிரிக்கெட் சபை மூலமாக மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்வாகம் பொலிசாரிடம் முறைப்பாடு செய்திருந்தது. கொழும்பு குற்றவியல் பொலிசார் கடந்த 2 வாரங்களாக துருவித் துருவி விசாரணை மேற்கொண்டனர்.

காணாமல் போன பையில் வெளிநாட்டுப் பணம் இருந்ததால், குறிப்பாக வெளிநாட்டுப் பணம் மாற்றும் நிலையங்களில் அதிக கவனம் செலுத்தினர். பணத்தை மாற்ற முயன்றபோது ஒருவரை பொலிசார் கைது செய்தனர். அவரிடமிருந்து 3 செல்பேசிகள், மேற்கிந்தியத்தீவுகள் அணியினரின் உடைமைகளைக் கைப்பற்றினர். அவரை விசாரணைக்கு உட்படுத்தியபோது அவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் எனத் தெரியவந்துள்ளது.



# சிம்பாப்வே தொடரை இரத்து செய்ய வேண்டும்
## ஐ.சி.சிக்கு நியூசிலாந்து அரசு வற்புறுத்தல்

சிம்பாப்வே கிரிக்கெட் தொடரை இரத்து செய்ய வேண்டும் என்று ஐ.சி.சிக்கு நியூசிலாந்து அரசு வற்புறுத்தியுள்ளது. நியூசிலாந்து கிரிக்கெட் அணி சிம்பாப்வே பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 நாடுகள் போட்டியில் ஆடுகிறது. சிம்பாப்வேயில் மனித உரிமைகள் மீறப்படுவதாக கூறி நியூசிலாந்து அணி அங்கு செல்ல கூடாது என எதிர்ப்புகள் கிளம்பின.



இந்த நிலையில் பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையே நியூசிலாந்து அணி பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காக நமீபியா சென்றுள்ளது. நியூசிலாந்து அணி நமீபியா சென்றதை தொடர்ந்து பிரச்சினை முடிந்தது என நினைத்தால் அது மீண்டும் விசுவரூபம் எடுக்கத் தொடங்கியுள்ளது.

சிம்பாப்வே தொடரை இரத்து செய்ய வேண்டும் என்று ஐ.சி.சிக்கு நியூசிலாந்து அரசாங்கம் வற்புறுத்தி உள்ளது. இரத்து செய்வது தொடர்பாக நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

நியூசிலாந்து அணி சிம்பாப்வேயில் ஆடக்கூடாது என்பதற்கு ஆதரவாக 110 பேரும், ஆடலாம் என 10 பேரும் வாக்களித்தனர். அதனைத் தொடர்ந்து இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மனித உரிமைகள் மீறப்பட்டு வரும் இந்த நேரத்தில் சிம்பாப்வேயில் பயணம் செய்து விளையாடுவது நன்றாக இருக்காது. எனவே இந்த தொடரை இரத்து செய்ய வேண்டும் என்று ஐ.சி.சிக்கு நியூசிலாந்து பிரதமர் ஹெலன் கிளார்க் கோரிக்கை விடுத்துள்ளார். நியூசிலாந்து அணி சிம்பாப்வே செல்லாத பட்சத்தில் அந்த அணி பெரும் தொகை ஒன்றை அபராதமாகச் செலுத்தவேண்டி ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# வினாடியில் இழந்த உலக சாதனை!





தனக்கு பரிச்சயமான 200 மீற்றர் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றாலும், ஒரு வினாடி தாமதமாக இலக்கை எட்டியதால் உலக சாதனையை நிகழ்த்த முடியாமல் ஏமாற்றம் அடைந்தார் அமெரிக்காவைச் சேர்ந்த மைக்கல் 'பிஹெல்ப்ஸ்'. உலக நீச்சல் சம்பியன் போட்டிகள் கனடாவின் 'மொன்ட்றியல்' நகரில் சில தினங்களாக நடைபெற்று வருகின்றன.


20 வயதாகும் பிஹெல்ப்ஸ், 1 நிமிடம் 45.20 வினாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பெற்றார். ஆனால், 4 ஆண்டுக்கு முன்பு இயன் தோர்ப் நிகழ்த்திய சாதனையை முறியடிக்க நூலிழையில் தவறினார். தோர்ப் 1 நிமிடம் 44.06 வினாடிகளில் 200 மீற்றர் தூரத்தைக் கடந்ததே உலக சாதனையாகும். பிஹெல்ப்சுக்கு இரண்டாவது தங்கப் பதக்கமாக இப் போட்டி அமைந்துள்ளது.

# உலக இளைஞர் செஸ் போட்டி
# தமிழக வீரர் `சம்பியன்`

உலக இளைஞர் செஸ் போட்டியில் இந்திய சிறுவன் வெற்றி பெற்றுள்ளான். பிரான்ஸ். பெல்போர் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் ஆண்கள் 12 வயதுக்கு உட்பட்ட பிரிவில் தமிழக வீரர் சிறிநாத் 11 சுற்றுகள் முடிவில் 8.5 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். உஸ்பெகிஸ்தான் நாட்டுச் சிறுவனுடன் இறுதிப் போட்டியில் மோதி இந்த வெற்றியைப் பெற்றுள்ளார். 12 வயதான சிறிநாத் தமிழகம் சென்னை மைலாப்பூரை சேர்ந்தவர்.



14 வயதிற்கு உட்பட்டவர் போட்டியில் ஆடும் நோர்வே சிறுவன்



# புலம்பெயர் உறவிற்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்

கடந்த வியாழக்கிழமை (28.07.05) மாரடைப்பால் சாவடைந்த யேர்மனியைச் சேர்ந்த விஜயரட்ணம் கணேஸ்வரன் அவர்களை நாட்டுப்பற்றாளராக அறிவித்து விடுதலைப் புலிகள் கௌரவித்துள்ளனர். 1985ம் ஆண்டிலிருந்து புலம்பெயர் மண்ணில் தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்க விடுதலைப் புலிகளின் யேர்மன் பணியகத்துடன் இணைந்து டுசுல்டோர்வ் நகரச் செயற்பாட்டாளராகவும் பின்னர் 1995ம் ஆண்டிலிருந்து டுசுல்டோர்வ் தமிழாலய நிர்வாகியாகவும் செயற்பட்டு வந்தார்.

எதிர்வரும் 3ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு Stoffeler Friedhof, Bittweg-60, 40225 Düsseldorf எனும் முகவரியில் இவரது நல்லடக்கம் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் யேர்மன் பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

# இணைத்தலைமை நாடுகளின் எச்சரிக்கை சமாளிப்பதற்கு சந்திரிகா முயற்சி

(01.08.05)

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை மற்றும் போர்நிறுத்த உடன்பாடு எத்தகைய நிலையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பன உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து ரோக்கியோ மாநாட்டு இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா விளக்கிக் கூறியிருக்கிறார். அமெரிக்கா, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சார்பில் பிரித்தானிய தூதுவர் ஆகியோரை கொழும்பில் சந்தித்துப் பேசியபோதே சந்திரிகா இவ்வாறு விளக்கமளித்ததாக தெரிவிக்கப் படுகிறது.

அண்மையில் இணைத் தலைமை நாடுகளின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் - போர்நிறுத்த உடன்பாடு, சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கடுமையாக எச்சரிக்கப்பட்டிருந்தது. இந்தக் கண்டன அறிக்கை தொடர்பாக மேற்படி நாடுகளுக்கு விளக்கமளிக்கவே இந்தச் சந்திப்புக்கு ஒழுங்குபடுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில், சமீபத்தில் நான்கு இணைத் தலைமை நாடுகள் வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறப்பட்டிருந்த விடயங்கள் பற்றி ஜனாதிபதி விளக்கமளித்தார். கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சீர்குலைந்திருப்பதும் உண்மைதான். விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை பல தடவைகள் மீறியிருக்கின்றனர் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர்ப்பளித்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கலகங்களில் ஈடுபடும் கருணா குழுவினருக்கோ, வேறு எவருக்குமோ அரசாங்கம் புகலிடம் அளிக்கவில்லை, உதவிசெய்யவுமில்லை.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனை மேலும் உத்தரவாதம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தி, போர் நிறுத்த உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்வதற்கு தாம் மேற்கொண்டுள்ள ஆர்வம் பற்றி அரசாங்கம் பல சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளது. இத்தகைய பேச்சுக்களை ஊக்குவிப்பது ரோக்கியோ மாநாட்டுக்கு இணைத்தலைமை வகித்த நாடுகள் காட்டும் ஆர்வத்தை ஜனாதிபதி பாராட்டியதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வவுனியா அலுவலகம் மீது தாக்குதல்

(01.08.05)



வவுனியா, திருநாவுக்குளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது கடந்த வியாழக்கிழமை இரவு இரு கைக்குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அலுவலகம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பின் கைக்குண்டுகளை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரிவித்த வவுனியா மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தர்மேந்திரா, இச் சம்பவம் இடம்பெற்றபோது அலுவலகத்தினுள் நான்கு போராளிகள் இருந்ததாகவும் தெரிவித்தார்.

இக் கைக்குண்டு வீச்சினால் கட்டடத்திற்கும் உள்ளிருந்த கணினி உட்பட ஏனைய பொருட்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, இவ் அலுவலகம் திருநாவல்குளம் இராணுவ சோதனைச் சாவடியிலிருந்து 400 மீற்றர் தூரத்தில் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.



# விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்தமை அமெரிக்காவிற்கு பாதிப்பு

## – சிறீலங்காவிற்கான முன்னாள் அமெரிக்கத் தூதர்

விடுதலைப் புலிகளை அமெரிக்கா சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்துள்ளமை, இலங்கையில் அமெரிக்காவின் இராஜதந்திர முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக சிறீலங்காவிற்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் டெரெசிட்டா சி. ஸ்காவ்வர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளுடன் அமெரிக்கா நேரடியாக தொடர்புகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் இணையத்தளமொன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை விஸ்தரிப்பதற்கான படிப்படியான கொள்கையொன்றையும் வலியுறுத்தியுள்ள அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பினை சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது, இலங்கையில் அமெரிக்காவின் இராஜதந்திரத்தினை பாதித்துள்ளது. மேலும், அமெரிக்காவின் பயங்கரவாத சட்டமும், பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலும் அமெரிக்காவின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு பிரச்சினையாக அமைந்துள்ளன. இதனை அமெரிக்கா புத்திசாலித்தனமாக கையாளவில்லை.

கடல்கோளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனர்நிர்மாண நடவடிக்கைகளை திட்டமிடும், முகாமைத்துவம் செய்யும் பணிகளுக்குள் விடுதலைப் புலிகளையும் உள்வாங்கும் ஏற்பாடுகள் புனர்நிர்மாணப் பணிகளுக்கும், இறுதியில் இலங்கையின் தேசிய கொள்கையை புனர்நிர்மாணம் செய்யும் பாரிய பணிக்கும் மிகப் பெரிய பலாபலனை அளிக்கலாம்.

இலங்கை மீதான அமெரிக்காவின் கரிசனம் அதிகரிப்பதற்கு நான்கு காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. செப்டெம்பர் 11 தாக்குதல்கள், பயங்கரவாதம் குறித்த தீவிர கவனம் செலுத்தப்படும் சூழ்நிலையை உருவாக்கின. அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் முக்கிய இலக்காக இருந்த இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகள் போல், விடுதலைப் புலிகள் அமெரிக்கர்களைத் தாக்காத போதிலும், செப்டெம்பர் 11 அனுபவம் இலங்கையில் பயங்கரவாதத்தினை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்ற அமெரிக்க ஆர்வத்தினை அதிகரித்தது. இதே காலப்பகுதியில் இலங்கையின் சமாதான முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நோர்வே தனது முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவை என்பதை உணர்ந்து சமாதான முயற்சிகள் தொடர்வதற்கு அமெரிக்கா தனது பங்களிப்பினை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தியது.

மூன்றாவது முக்கிய காரணியாக அமைந்தது, அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான புதிய உறவுகள். இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வென்பது, இந்தியாவின் ஆதரவைப் பெறுவது அவசியம் என்பது தெளிவான விடயம். கடந்த காலங்களில் தனது அயல்நாடுகளில் அமெரிக்காவின் இராஜதந்திர செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாத மனோநிலை புதுடில்லியில் காணப்பட்டது. எனினும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்ட பாரிய மாற்றமும், இரு நாடுகளுக்கும் இடையிலான பொதுவான அக்கறைகளும் அமெரிக்காவின் பங்களிப்பு குறித்து இந்தியா முன்னர் போன்று சந்தேகம் கொள்ளாத சூழ்நிலைமையை உருவாக்கியுள்ளது.

எனினும், இவை யாவற்றையும் விட முக்கியமானது, இலங்கையில் உண்மையான, தீவிரமான சமாதான முயற்சிகள் தோற்றம் பெற ஆரம்பித்திருந்தன. மூன்று அரசாங்கங்கள் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. சந்திப்புகளும், யோசனைகளும் பரிமாற்றப்படுவதும் நடைபெற்றது. நோர்வேயின் திறமையான குழுவின் உதவியும் இருந்தது. இவை யாவும் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளை உருவாக்கியிருந்தன.

சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டிருக்காவிட்டால், இலங்கை அமெரிக்காவின் மூத்த அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்திராது. வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் விடுதலைப் புலிகளை சேர்த்துள்ளமை இலங்கையில் அமெரிக்காவின் இராஜதந்திரத்தை பல வழிகளில் பாதித்துள்ளது. முதலாவது பாதிப்பு பொதுசன தொடர்பு விடயத்தில் ஏற்பட்டுள்ளது.

செப்டெம்பர் 11ற்குப் பிந்திய சூழலில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டதன் மூலம் கிடைத்த சர்வதேச பரிச்சயம் காரணமாக, பயங்கரவாத பட்டியலால் உண்டாகும் பாதகநிலையை விடுதலைப் புலிகள் அமைப்பு உணர்ந்துள்ளது. சில வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் மாற்றுக் கருத்துள்ள தமிழர்களை படுகொலை செய்வதை நிறுத்தினால் பயங்கரவாதப் பட்டியலை அகற்றத் தயார் என அமெரிக்கா தெரிவித்திருந்தது. விடுதலைப் புலிகளுக்கு இது கோபத்தினை ஏற்படுத்தினால் கூட, அமெரிக்க அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு சரியானது.

பயங்கரவாத பட்டியலொன்றை வைத்திருக்கும் பட்சத்தில், அதனை அர்த்தப்படுத்தும் விடயத்தில் சரிசமமாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதை ஏனைய மக்கள் கொலை செய்யப்படுவதை விட சாதாரணமாக எடுக்க முடியாது. எனினும், அமெரிக்க பயங்கரவாத சட்டமும் பட்டியலும் அமெரிக்க இராஜதந்திரத்திற்கு பிரச்சினையாக அமைந்துள்ளது. இது புத்திசாலித்தனமாகக் கையாளப்படவில்லை. குறிப்பாக, பட்டியலில் உள்ள அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து சுட்டிக்காட்டுகின்றேன்.

சமாதான முயற்சிகள் உண்மையில் நடைமுறையில் உள்ளபோது, சமாதானத்திற்காக பாடுபடுபவர்கள் அமெரிக்க அரசாங்கம் உட்பட விடுதலைப் புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். அவர்கள் பயங்கரவாதத்தைக் கைவிடச் செய்வதற்கான ஊக்குவிப்பை வலுப்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசாங்கத்துடன் தம்மை சம அந்தஸ்து உடையவர்களாகக் கருத வேண்டும் என வலியுறுத்தி வருவதை கருத்தில் கொள்ளும் போது, பயங்கரவாத கொள்கையை அடிப்படையாக வைத்து, விடுதலைப் புலிகளின் சமாதான பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப்படாத இடங்களை தவிர்த்துக் கொள்வது முக்கியமானதாகின்றது.


விடுதலைப் புலிகள் தாங்கள் கலந்து கொள்வதற்கான சட்டபூர்வ அந்தஸ்து உள்ளது எனக் கருதும் கூட்டங்களை அமெரிக்காவிலோ அல்லது இதேபோன்ற கொள்கை உடைய ஏனைய நாடுகளிலோ நடாத்தக் கூடாது. விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை விஸ்தரிப்பதற்கான படிப்படியான கொள்கையொன்று அவசியம். விடுதலைப் புலிகளை புனர்நிர்மாணப் பணிகளை முகாமைத்துவம் செய்யும், திட்டமிடும் நடைமுறைகளைக் கொண்டு வருவது பலாபலன்களை அளிக்கக் கூடியது. இது இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சிறிய, சிறிய உறுதியான விடயங்களைச் செய்வதற்கும் இதன் மூலம், முதலாவது கட்ட பலவீனமான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் உதவும். வழமையான உதவிகளும், கடல்கோள் உதவிகளும் இலங்கை சமாதான பலாபலன்களை உருவாக்குவதற்கு உதவக் கூடியவை. நிதியின் அளவை விட ஒன்றாக இணைந்து செயற்படுவதே முக்கியம், என்று கூறியுள்ளார்.

## தூறல்

# கோடம்பாக்கப் படங்களை பார்ப்பதா, வேண்டாமா?

### இரவி பதில் சொல்வாரா ?

சகோதரன் அ.இரவி பதிவு செய்த ஷங்கர் (சங்கர் என்பது தானே எம் வ்ழக்கு) பற்றிய நிலைப்பாடு பார்த்தேன். கடந்த சில வருடங்களாகவே புலம்பெயர் இதழ்களில் ஒரு எதிரும் புதிருமான போக்கு இழையோடுவதை என்னால் காணமுடிகிறது. சங்கரின் அந்நியன் போன்ற திரைப்படங்களுக்கு பதிவுகள் வரும்போது. முத்தாய்ப்பாக கோடம்பாக்க சினிமாக்களே எமக்கு வேண்டாம். நாம் நிராகரிப்போம். என்ற குரலும் வந்து விடுகிறது. நல்லது ஐயா! நல்லது! அதைத்தான் நானும் வேண்டுகிறேன். ஆனால் இந்த குரல் எழுந்து அடங்கிய பின்னர் ஒரு ஐந்தாறு மாதம் கழித்து இன்னொரு படம் வரும் போது (எதிர்பார்ப்பு - காத்திருப்புடன்) மீண்டும் காட்டமான பதிவு அதே பழைய பழைய முத்தாய்ப்பு.



சகோதரன் அ.இரவியின் சங்கர் பற்றிய பதிலிலும் சங்கரது முந்தைய படங்கள் பற்றிய சிறு அலசலையும் காண நேர்ந்தேன். எனக்கு இப்போது ஒரே மண்டை காய்கிறது! இத்தால் சகலரும் அறிய நான் கேட்பது என்ன வென்றால், திரைபடங்களுக்கு பதிவுகள் தரும் எம்மவரே! நாம் கோடம்பாக்க திரைப்படங்களை பார்ப்பதா வேண்டாமா?

வேண்டாம் என்றால் பிறகெதற்கு விமர்சனமும் அதுபற்றிய பதிவும். சங்கர் ஜென்ரில்மன் படைத்தார் இந்தியன் கண்டார் என ஒன்றுவிடாமல் வரிசைப்படுத்திவிட்டு. புலம்பல் கூடாது.அ.இரவி அவர்கள் சங்கரின் அத்தனை படங்களிலும் கையாளப்பட்டிருக்கும் பிராமணியம் பற்றி அவைகளை ஒன்றுவிடாமல் பார்த்ததால் தானே எழுதுகிறார். நிச்சயமாக அவரின் பதிவு 'கேள்விச் செவித்துவம்' வாயிலாக வந்திருக்காதே?

ஆகவே 'ஊருக்கு உபதேசம்' என்ற போக்குமுதலில் நிறுத்தப்படுவது ஆரோக்கியம் தரும். அத்தோடு இவ்வாறான சங்கர்பற்றிய பதிவுகள் அவருடைய அடுத்த படத்திற்கான எதிர்பார்ப்பினை இயல்பாகவே வாசகர் மத்தியில் எழுப்பி விடும் அபாயமும் இருக்கிறது. நாம் சங்கரை தோலிருந்துக் காட்டுகிறோம் பார்! என எழுதப்போய் 'குளிக்கப் போனான் சேது பூசிய' கதையாக ஆகிவிடக்கூடாது என்பதே எனது கவலை. எனக்கு அடுத்தடுத்து கோடம்பாக்க திரைப்படங்களை பார்க்க நேரம் இல்லாவிடினும் எங்கு காணிலும் அன்னியன் பற்றிய பேச்சாயிருக்க, அது ஏதென அறிய நானும் அன்னியன் 'ஒளித்தட இறுவட்டு' ஒன்றை ஆவலாக ஆனால் இரவலாக வாங்கிச் சென்றேன். என் காலம் என்கருவி ஒத்தழைக்க மறுத்தது. (ஒருவேளை அது பிராமணிய எதிர்புக் கொள்கை கொண்டதோ என்னவோ)

இது வரை நான் அன்னியனைப் பார்க்கவில்லை. எம்மில் பொதுவாக ஒரு குணம் உண்டு. வீதியோரம் பாழும் கிணறு இருந்தாலும் அதையொருமுறை எட்டிப்பார்த்து விட்டே வருவோம். ஆனால் அதற்குள் வலிந்து விழ போகமாட்டோம். அதுபோலவே சங்கரையோ அல்லது சங்கராச்சாரியரையோ சில வேளை நாம் எட்டிப்பார்க்க முனையலாம் ஆனால் அதற்குள் விழுந்து விடமாட்டோம். சரி! பிராமணியம் தன்கருத்து நிலையை புகுத்த முனைந்தால் அதற்கு எதிர்கருத்து நிலையை அதே காட்சி ஊடகம் வாயிலாக செய்ய முனைவதே பயன்தரும் இப்போது செய்ய அரம்பித்திருக்கிறோம் என்பது எனது எண்ணம் சகோதரன். அ.இரவி மீதான எனது பதிலிற்கு காரணம் இருக்கிறது. அவரிடம் உள்ள எழுத்து வலு குறித்து எனக்கு பலமான நம்பிக்கையுண்டு. அந்த வலுவான 'சுலுசு' திறக்கப்பட்டு காத்திரமான கருத்துக்கள் பாயவேண்டும். முன்னர் ஈழமுரசில் பாய்ந்தது இப்போது ஒரு தேக்கம் போல் எனக்குப்படுகிறது. இலக்கற்று பிசிறடிப்பிற்கு இலக்காகி விட்டதோ என்ற கவலையும் தொடுகிறது. மீண்டும் தொடங்கட்டும் அவரின் மிடுக்கு.

அன்புடன் சகோதரன்

இளையவன்.

குறிப்பு- குத்துவிளக்கு படத்தில் இடம்பெற்று அப்போது இலங்கை வானொலியில் இடம் பெற்ற ஒரு பாடலை யாராவது நினைவூட்டினால் நல்லது என சில வாரங்களுக்கு முன்னர் பதிவு செய்திருந்தீர்கள். என்சிற்றறிவில் அது. "உன்னை நம்பி ஒரு தங்கை இருக்கு..." என்ற பாடலாக இருக்குமோ என்ற ஒரு ஊகம். சரியானால் இது பற்றி அடுத்த பதிலில் (சிலவேளை அது எனக்கான கிழியலாகவும் இருக்கலாம்) தெரியப்படுத்தவும்.

## சித்தார்த்தனிடம் போய் நீதிகேட்போம்!

ஆடி ஆடி
ஓடி வந்த
ஆடி மாதத்திற்க்கு
வணக்கங்கள்

ஆடி மாதமென்றாலே
எங்கள் அடிவயிறும்
அழுகிறது
நினைத்தாலே
நெஞ்சுக்குள்ளே
எரிமலை வெடிக்கிறது.

நாளங்களுக்குள்ளே
ஓடும் குருதி
எல்லாம்
எரிகுழம்பாக மாறுகிறது.

நாடித் துடிப்பு
வழமையை விட்டு
உச்சத்திலேறிக்
குதிக்கிறது.
சூரியனை
விழிங்கியது போலே
உடல்
வெப்பம் எல்லையைத்
தாண்டுகிறது

கவலைக்
கடல் கண்களைத்
தாண்டி
கரைகடக்க வழியின்றி
வியர்வைக் குளமாக
உடலெங்கும் எட்டிப்
பார்க்கும்

பசும் புல்லை
மிதிக்கவே பல நூறு
தரம் யோசிக்கும்
எண்ணம் கொண்ட
இனம்
தமிழினம்

கோழி அறுப்பது
போலே
அவர்களின் தலை
அறுக்க
எப்படி மனசு வந்தது

போர் என்ற கோலம்
தொடுப்பதற்கு புள்ளி
போட்டவர்களே

குட்டி மணியின்
கண்களைத் எதற்காகத்
தேண்டிப்பார்த்தீர்கள்
தமிழீழக் கனவுக்கண்
இன்னும் உயிர்ப்போடு
இருக்கிறதா
என அறிவதற்க்காகவா..?

செத்த பின்னும்
உயிர்த்தெழுவான்
போராளி எனும்
அச்சத்திலா

அவன் உடலை
வெட்டிச்
சாய்த்தீர்கள்...

சாவு மாளிகைக்குள்
தயக்கமின்றி
நுழைந்தவனின்
இந்திரியங்கள் உங்களை
கொல்லவும் வெல்லவும்
கருத்தரித்துக்கொள்ளலாம்
எனும் அச்சத்திலா
அவன் ஆணுறுப்பை
அறுத்தெறிந்தீர்கள்...

நெருப்பு மனிதர்கள்
எழுதிய
கவிதை வரிகளுக்கே
இவ்வளவு
கலக்கப்
பட்டிருக்கிறீர்கள்
என்றால்
படைக் கோலம் பூண்டு
உங்கள் முன் அவர்கள்
வரும்போது
என்ன செய்வதாய்
உத்தேசம்...

ஒரு சிறு
பொறியை
அணைப்பதற்காகவா
பஞ்சுப் பொதியை
மூடினீர்கள்


அந்தக்
கொழுந்துகளின்
குழந்தைகள் தானே
மில்லரும் அங்கையற்
கண்ணியும்

சிறைக்குள் இருந்த
பத்துவயதுப் பாலகனின்
தலை சீவி
அவன் அங்கங்கள்
துடிப்பதையும்
கை கால்கள்
அடிப்பதையும்
பார்த்துப் பார்த்து
சுவைத்த
பெருமான்களே...

மறக்க
முடியாத வடுக்கள்
ஆவணங்களாக
உங்களை உறுத்தும்
அப்போது வாருங்கள்
புத்தனிடம் போய் நீதி
கேட்போம்
அவன்
அன்னத்தின் உயிர்காக்க
போராடிய
புரட்சிக்காரன்
ஆயிற்றே...

- மட்டுவில் ஞானக்குமாரன் (யேர்மனி)

# ‘டிஸ்கவரி’ பூமிக்கு திரும்ப முடியுமா? விண்ணில் நடந்துசென்று ஆய்வ




பூமியிலிருந்து ‘டிஸ்கவரி’ விண்வெளி ஓடத்தில் எடுத்துச் சென்றிருக்கும் 13.5 தொன் எடையுள்ள கருவிகள், சாதனங்கள் மற்றும் இதர பொருள்களை விண்ணில் சுற்றிக்கொண்டு இருக்கும் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் விண்வெளி வீரர்கள் கடந்த 29ம் திகதி வெள்ளிக்கிழமை இறக்கியுள்ளனர்.

பூமியில் இருந்து 224 மைல் உயரத்தில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு மேல் விண்ணில் `சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையம்` அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்துக்கு 7 விண்வெளி வீரர்களை ஏற்றிக் கொண்டு ‘டிஸ்கவரி’ விண்கலம் கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்டபோது இரு பாகங்கள் உடைந்து விழுந்தன. வெளிப்புறம் உள்ள எரிபொருள் தாங்கியில் இருந்து மின்சாரம் கடத்தாப் பொருளாக பயன்படும் ‘பஞ்சு’ போன்ற பொருள் பிரிந்து விழுந்தது.

2 ஆண்டுகளுக்கு முன்பு பூமிக்கு திரும்பிக் கொண்டிருக்கையில் ‘கொலம்பியா’ விண்கலம் வெடித்துச் சிதறியதற்கும் இதுதான் காரணம். ‘கொலம்பியா’ வெடித்துச் சிதறியதில் இந்திய விண்வெளி வீரர் கல்பனா சாவ்லா உட்பட 7 விண்வெளி வீரர்கள் பலியானார்கள். இதைத் தொடர்ந்து விண்வெளித் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன.

இந்நிலையில் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் பாரிய ஆபத்தில் இருந்து தப்பியுள்ளது. எரிபொருள் தாங்கியிலிருந்து பிய்ந்துவந்த பெரிய துண்டு மோதாததால், ‘டிஸ்கவரி’ சேதத்திலிருந்து தப்பிவிட்டது. எனினும், அந்தப் பெரிய துண்டிலிருந்து பிய்ந்து சிதறிய சிறிய நுரைப்பஞ்சுத் துண்டுகள் மோதியிருக்கக்கூடும். ஆனால், அதனால் பெரிய பாதிப்பு ஏதும் ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதுகுறித்து விண்வெளித் திட்ட மேலாளர் பில் பர்சான்ஸ் கூறியதாவது, பஞ்சு தனியாகப் பிரிவதை தடுப்பதற்காக டிஸ்கவரியை விண்ணில் செலுத்துவதற்கு முன்பே, தொழில்நுட்பவியலாளர்கள் சில மாற்றங்களை செய்தனர். ஆனால் இவ்வாறு நடந்துவிட்டது. அதைச் சரி செய்வதற்கு மேலும் கூடுதலாக வேலை செய்ய வேண்டும். டிஸ்கவரியில் இருந்து உடைந்து விழுந்த பாகங்களால் என்ன விளைவு ஏற்படும் என்பதை தொழில் நுட்பவியலாளர்கள் தீர்மானிக்கும் வரை புதிய விண்கலங்கள் செலுத்தப்பட மாட்டாது, என்றார்.



விண்வெளி ஓடம் புறப்பட்டுச் சென்றபோது, அதன் வெளிப்புற எரிபொருள் தாங்கியிலிருந்து பிய்ந்து பறந்துவந்த நுரைப்பஞ்சுத் துண்டு, ஓடத்தின் இறக்கையில் மோதி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதியிருந்தனர். எனவே, அவ்வாறு துண்டு மோதி, ஏதேனும் சேதம் ஏற்பட்டுள்ளதா என்பதையும் விண்வெளி வீரர்கள் சோதனை நடத்தமாறு பணிக்கப்பட்டது. ஒரு சிறு பகுதிகூட சோதனையிலிருந்து தப்பிவிடக் கூடாது என்பதால், விண்வெளி ஓடத்தை அனைத்துக் கோணங்களில் இருந்தும் ஆராய்ந்துவிட திட்டமிட்டுள்ளனர்.


இப்போதைய நிலையில் பூமிக்குத் திரும்பத் தகுதியான நிலையிலேயே டிஸ்கவரி உள்ளது. எனினும், அதை திட்டவட்டமாக இன்னும் ஒரு சில தினங்களில் அறிவிப்போம் என்று நாசா விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இந்நிலையில் கடந்த 30ம் திகதி சனிக்கிழமை இரு விண்வெளி வீரர்கள் விண்வெளியில் நடந்து சென்று விண்வெளி ஓடத்தின் புறப்பரப்பில் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளை பழுதுபார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். விண்வெளி வீரர்களில் ஜப்பானைச் சேர்ந்த சொய்ச்சி நோகுச்சி மற்றும் ஸ்டீவ் ரொபின்சன் ஆகிய இருவரும் விண்கலத்தில் இருந்து வெளியே வந்து விண்வெளியில் நடந்தனர். 2 வெப்ப எதிர்ப்பு தகடுகள் கழன்று விழுந்ததால் ஏற்பட்ட பழுதை சரிசெய்யும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டனர். 6 மணி நேரம் வெளியே இருந்த அவர்கள் பின்னர் விண்கலத்திற்குள் சென்றனர்.

விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் முக்கியமான 4 சுழலும் பாகங்கள் உள்ளன. அவற்றில் 2 பாகங்கள் வேலை செய்யவில்லை. ரொபின்சனும், நோகுச்சியும் மீண்டும் இரு தடவைகள் வெளியே வந்து பழுதடைந்துள்ள சுழலும் பாகங்களை சரி செய்யும் பணியில் ஈடுபடுவார்கள். டிஸ்கவரி விண்கலம் ஆகஸ்டு 7ம் திகதி பூமிக்கு திரும்ப திட்டமிடப்பபட்டிருந்தது. ஆனால் விண்வெளி வீரர்கள் மேலும் ஒருநாள் ஆய்வு நிலையத்தில் இருந்து விட்டு பூமிக்கு திரும்புவார்கள் என்று நாசா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இம்முறை விண்கலம் பூமிக்குத் திரும்பும் போது எந்த ஆபத்தும் டிஸ்கவரிக்கு ஏற்படாது என்று நாசா விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, விண்வெளி நிலையத்தில் செர்ஜி கிரிகலேப், ஜான்பிலிப் ஆகிய மூவர் கடந்த 103 நாட்களாகத் தங்கி இருந்து ஆராய்ச்சி செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சூரிய குடும்பத்தில் 10வது கோள் கண்டுபிடிப்பு

## நவக்கிரம் தசக்கிரகம் ஆனது!




சூரிய குடும்பத்தில் இதுவரை ஒன்பது கோள்களே இருப்பதாக அறியப்பட்டிருந்தது ஆனால் 10வது புதிய கோள் ஒன்று இருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்து அறிவித்துள்ளனர். பூமியில் இருந்து 900 கோடி மைல் தூரத்தில் அந்த கோள்? உள்ளது.

சூரிய மண்டலத்தில் சூரியனுக்கு அடுத்ததாக புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், சந்திரன், செவ்வாய், வியாழன், சனி, நெடியூன், புளுட்டோ ஆகிய ஒன்பது கோள்கள் இருக்கின்றன. முன்னர் எட்டுக் கோள்களே கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. எனினும் சூரிய குடும்பத்தில் கடைசியாக கண்டு பிடிக்கப்பட்ட 9வது கோள் `புளூட்டோ`. 1930ம் ஆண்டு இந்த கோள் கண்டுபிடிக்கப்பட்டது. அன்று முதல் சூரிய குடும்பத்தில் 9 கோள்கள்தான் என்று நிலை பெற்று இருந்தது.

ஆனால், அமெரிக்காவின் கலிபோர்னியா தொழில்நுட்ப அறிவியல் நிலையத்தை சேர்ந்த வானியல் நிபுணர் மைக்பிரவுன் என்பவர் சூரிய குடும்பத்தில் 10வதாக புதிய கோள் ஒன்றை கண்டு பிடித்து வானியல் ஆராய்ச்சித் துறையில் புதிய அத்தியாயம் படைத்து இருக்கிறார்.

கிரகங்கள் பற்றி ஆய்வு செய்து வரும் பேராசிரியர் மைக் பிரவுன் தனது புதிய கண்டுபிடிப்பு பற்றி நிருபர்களிடம் கூறியதாவது: ‘தற்போது 2003 யுபி 313’ என்று அழைக்கப்பட்டு வரும் 10வது கிரகத்துக்கு விரைவில் புதிய அறிவியல் பெயர் சூட்டப்படும். இது `புளூட்டோ`வை விட 1 மடங்கு பெரியது. மீத்தேன் ஐஸ்வால் சூழப்பட்டுள்ள இது, பூமியில் இருந்து ஏறத்தாழ 1500 கோடி கிலோ மீட்டர் (900 கோடி மைல்) தூரத்தில் உள்ளது. சூரியனுக்கும் புதிய கிரகத்துக்கும் உள்ள தூரம் இதைப்போல் 97 மடங்கு அதிகமாகும். சூரிய குடும்பத்தின் தொலைதூரக் கிரகம் இதுதான்’ இவ்வாறு பேராசிரியர் மைக் பிரவுன் கூறினார்.




அவர் மேலும் கூறுகையில், இந்தக் கோள் ஒளி மிகுந்த கிரகங்களில் 3வதாக கருதப்படுகிறது. இந்த புதிய கிரகத்தின் சரியான அளவை கூற முடியாவிட்டாலும் அது ஒளி விடுவதை வைத்து ஓரளவு தீர்மானிக்க முடிகிறது. இந்த கிரகம் முதன்முதலாக 2003ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் திகதி தென்பட்டது. அப்போது சூரியனில் இருந்து வெகுதூரத்தில் இருந்ததால், சரியாக தெரியவில்லை. இப்போது சூரியனுக்கு நெருங்கி வரவும், அந்த கோள் தெளிவாக தெரிந்தது. இந்த புதிய கோள் மூலம் உலகில் இனி ஒன்பது கோள்கள் இல்லை, 10 கோள்கள் தான். பாடபுத்தகங்களில் 10 கோள்கள் என மாற்றி எழுதிக் கொள்ளுங்கள் என்று விஞ்ஞானி மைக் பிரஷன் மேலும் கூறுகினார்.

இது இவ்வாறிருக்க, 2003ம் ஆண்டு இது கண்டு பிடிக்கப்பட்டாலும் தற்போதே இதனை ஒரு கோள் என வானியலாளர்கள் உறுதி செய்துள்ளனர். பாறைகளையும், பனியையும் கொண்டுள்ள இந்த கோள் சூரியத் தொகுதியின் மிகச் சிறிய கோளான புளூட்டோவை விட பெரியதாகும் என வானியலாளர்கள் தெரிவிக்கின்றனர். 2003 யுபி 313 என்ற குறியிட்டுப் பெயருடன் தற்போது அழைக்கப்பட்டு வரும் இந்த கோள் பற்றிய தரவுகளும், கோளிற்குரிய பெயரும் இதனைக் கண்டு பிடித்த வானியலாளர்களால் அனைத்துலக வானியல் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்களின் தரவுகளை அனைத்துலக வானியல் சங்கம் உறுதிப்படுத்தினால் மாத்திரமே இது சூரியத் தொகுதியின் 10வது கோள் என ஏற்றுக் கொள்ளப்படும் என வானியளாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒன்பது கோள்களையும் கிரகங்கள் என்று வர்ணிக்கும் தமிழர்கள், கோபம் வரும்போது ஒன்பது கிரகங்களையும் ஒன்றிணைத்து ‘நவக்கிரம்’ என்றும் திட்டுவார்கள். இனி எவ்வாறு திட்டப்போகின்றார்கள். ‘தசக்கிரகம்’ என்றா?

# உலகில் மிக அதிகாரம் மிக்க பெண்கள் பட்டியலில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மீண்டும் முதலிடம்

## சந்திரிகா 25வது இடத்தில்!





உலகில் மிக அதிகாரம் மிக்க பெண்கள் பட்டியலில் மீண்டும் முதலிடம் பெற்றுள்ளார் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொன்டலீசா ரைஸ். அதிகாரம் மிக்க பெண்களை தர வரிசையாக தேர்வு செய்து ஆண்டுதோறும் அதை வெளியிட்டு வருகிறது ஃபார்பஸ் இதழ். இந்த ஆண்டுக்கான அந்த பட்டியலை கடந்த வியாழக்கிழமை ஃபோர்பஸ் இதழ் வெளியிட்டது.

கடந்த ஆண்டிலும் இந்த பட்டியலில் முதலிடம் பெற்றிருந்த கொன்டலீசா ரைஸ் இம்முறையும் அந்த இடத்தை தக்கவைத்துள்ளார். சீன துணைப் பிரதமர் வூ யி இந்த முறையும் 2வது இடத்தை தக்க வைத்துள்ளார். உக்ரைன் பிரதமர் யூலியா தைமோசெங்கு 3வது இடத்தில் உள்ளார். இதேவேளை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா இம்முறை இப்பட்டியலில் இடம்பிடித்துள்ளார். 25வது இடத்தில் அவர் உள்ளதாக அவ் இதழ் கூறுகின்றது. இதேவேளை, கடந்த ஆண்டில் 3வது இடத்தில் இருந்த இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இம்முறை பட்டியலில் இடம் பெறவில்லை.

பட்டியலில் இடம்பெற்றுள்ள ஏனைய சிலர்...

10 வது இடம் - மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸின் மனைவி மெலின்டா கேட்ஸ்
15 வது இடம் - மியான்மரின் ஜனநாயக இயக்கத் தலைவி ஆங் சான் சூ கியி
26 வது இடம் - முன்னாள் அதிபர் கிளிண்டனின் மனைவி ஹ்லாரி (கடந்த ஆண்டு 5வது இடத்தில்)
29 வது இடம் - வங்கதேச பிரதமர் பேகம் காலிதா ஜியா
30 வது இடம் - பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயோ
40 வது இடம் - ‘ஹரி பொட்டர்` புகழ் எழுத்தாளர் ஜே.கே.ரவ்லிங்
46 வது இடம் - அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் மனைவி லாரா (கடந்த ஆண்டு 4வது இடத்தில்)

# கறுப்பு யூலையை நினைவு கூர்ந்து விருதினைப் புறக்கணித்த சிங்கள இயக்குநர்!

(01.08.05)
83ம் ஆண்டு தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்பு மாதமான யூலை மாதத்தில் நடத்தப்பட்ட அரசத் தலைவரின் திரைப்பட விருது வழங்கும் விழாவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பிரபல சிங்கள திரைப்பட இயக்குனர் அசோகா ஹண்டகமே தனது விருதினைப் பெற்றுக்கொள்ள விழாவில் கலந்து கொள்ளவில்லை.

சிறீலங்கா அரசத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவிற்கு அவர் எழுதிய கடிதத்தில், வெலிக்கடை சிறைப் படுகொலையினையும், வைத்தியர் இராயசுந்தரத்தின் கொலையும் இடம்பெற்று சரியாக 22 ஆண்டுகள் ஆகிவிட்டன. இது கடந்த யூலை 27, 2005 அன்றுடன் நிறைவு பெற்றுள்ளதாகவும், அவ்வாறான ஒரு தினத்தில் இந்த விழா நடத்தப்படுவதனை அவர்குறிப்பிட்டு கண்டித்துள்ளார். குறிப்பிட்ட இனத்தினை சார்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக தமிழர்களை கொன்றொழித்த ஒரு தினத்தில், இவ்வாறான ஒரு திரைப்பட விழா விருது வழங்கும் வைபவத்தில் கலந்துகொள்வதனை விரும்பவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். இவரது கடிதம் வாசிக்கப்பட்ட போது பலத்த கரகோசம் எழுப்பப்பட்டதும், அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்க சிறப்பு விருந்தினராக சமூகமளித்திருந்ததும் இங்கு குறிப்பிடதக்கது.

1981ம் ஆண்டு சிங்கள இனவாதிகளால் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்ட யாழ். நூலகத்திற்கு தனது பரிசுத்தொகையான 150,000 ரூபாய்களை அன்பளிப்பு செய்யவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இவர் இயக்கிய 'இது எனது நிலா' எனும் சிங்கள திரைப்படத்திற்கே இந்த விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, ஆபாசப்படங்கள் திரையிடப்படுவதை தடுக்க முடியாமைக்கு சில அழுத்தங்களே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தரக் குறைவான ஆபாச திரைப்படங்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறிய அவர், சில அழுத்தங்கள் காரணமாக இவ்வாறான படங்கள் திரையிடப்படுவதை தடுத்துநிறுத்த முடியாமல் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்?, ஒரு காலத்தில், வருடத்திற்கு சுமார் 40 படங்கள் வெளிவந்தன. ஆனாலும், பின்னர் வெளிநாடுகளில் இருந்து தரக் குறைவான திரைப்படங்கள் இறக்குமதி செய்யத் தொடங்கியதை அடுத்து எமது சினிமா துறைக்கு பாதிப்பு ஏற்பட்டது. எனினும், நாம் 1998ம் ஆண்டு முதல் கொள்கை ஒன்றை ஏற்படுத்தி இலங்கை சினிமா துறையை முன்னேற்ற செயற்பட்டு வருகிறோம். இந்த துறைக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

இதேவேளை, இந்தியாவில் பல படங்கள் வெளியாகினாலும், இலங்கையில் தயாரிக்கப்படும் படங்கள் பல சர்வதேச விருதுகளை பெற்றுள்ளன. அண்மையில் இங்கு வெளியான படங்கள் பல சர்வதேச விருதுகளை பெற்றுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். எனவே, தரக்குறைவான படங்களை இறக்குமதி செய்வதை விடுத்து தரமான படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன்,



தரக்குறைவான படங்கள் திரையிடப்படுவதை கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவற்றை அடியோடு நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இந்த விருது வழங்கும் வைபவத்தில் பல முக்கிய அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உட்பட பல முன்னணி கலைஞர்களும் கலந்து கொண்டனர்.

# 25 வருடங்களுக்கு பின் ரஜினி - கமல் இணைந்து நடிக்கிறார்கள்

## –இலங்கையில் படப்பிடிப்பு–

கே.பாலசந்தரினால் அறிமுகப்படுத்தப்பட்ட ரஜினிகாந்தும் கமலகாசனும் 25 வருடங்களுக்கு பின் இணைந்து ஒரு படத்தில் நடிக்கவுள்ளார்கள். இப்படத்தினை கே.பாலசந்தரே இயக்கவுள்ளார். தமிழ்த் திரை உலகின் இருபெரும் நட்சத்திரங்களான ரஜினியும் - கமலஹாசனும் கடைசியாக இணைந்து நடித்த படம் கே.பாலசந்தர் இயக்கிய `தில்லு முல்லு`. 1980ம் வருடம் படம் வெளியானது. அந்தப் படத்தில் ரஜினிகாந்த் கதாநாயகனாக நகைச்சுவை வேடத்தில் நடித்து இருந்தார். படத்தின் உச்சக்கட்ட காட்சியில் கமலஹாசன் நடித்து இருந்தார். இருவரும் கடைசியாக இணைந்து நடித்த படம் இது தான்.



இந்நிலையில், ரஜினிகாந்த், கமலகாசன் இருவரும் 25 வருடங்களுக்கு பின் மீண்டும் ஒரு புதிய படத்தில் இணைகிறார்கள். இதுவும் அவர்களின் குரு கே.பாலசந்தர் இயக்கும் படம்தான். குருவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இருவரும் இந்தப் படத்தில் இணைந்து நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்தின் பெயர் `பொய்`. இப்படத்தினை நடிகர் பிரகாஷ்ராஜ் தயாரிக்கின்றார். `பொய்` படத்தின் படப்பிடிப்பு இலங்கையில் நடைபெறுகிறது. இந்தப் பத்தில் தெலுங்கு பட கதாநாயகன் உதய்கிரண் கதாநாயகனாக நடிக்கிறார்.

# 'நடிகர்' நாகேஷின் `சிரித்து வாழவேண்டும்`

நகைச்சுவை நடிப்பில் கொடிகட்டிப்பறந்தவர் நடிகர் நாகேஷ். அவரின் அனுபவங் களை பாரதி கலைக்கூடம் மற்றும் வானதி பதிப்பகம் சார்பில் எஸ்.சந்திரமவுலி தொகுத்து எழுதியுள்ளார். `சிரித்து வாழவேண்டும்` என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்நூலின் வெளியீட்டு விழா கடந்த 29ம் திகதி சென்னையில் நடைபெற்றது. இந்நூலை சோ ராமசாமி வெளியிட நடிகைகள் சரோஜாதேவி, மனோரமா பெற்றுக்கொண்டனர்.

இவ்விழாவில் கலந்துகொண்டு நடிகர் சிவகுமார் பேசும்போது, 'சிவாஜிக்கு பிறகு நான் மிகவும் நேசிக்கும் கலைஞர் நாகேஷ்தான். மிகச் சிறந்த நினைவாற்றல் உள்ளவர்கள் சிவாஜி, நாகேஷ், மேஜர் சுந்தர்ராஜன் ஆவார்கள். திருவிளையாடல் படத்தின் 40 சதவீத வெற்றிக்கு தருமி வேடமே காரணம்' என்றார். நடிகை சரோஜாதேவி பேசுகையில், நாகேஷ் என்னுடன் நடித்த அனைத்து படமும் வெற்றிப் படம். அதை நினைக்க பெருமையாக உள்ளது. அவருக்கு எவ்வளவு துக்கம் இருந்தாலும் அதை மறந்து எல்லோரையும் சிரிக்க வைக்க வேண்டும் என்று நினைப்பவர்' என்றார். நடிகை மனோரமா பேசுபோது, 'நாகேஷ் பற்றி பேச வார்த்தை இல்லை. இன்னும் அவரைப் பற்றி எழுதுவர் என்று நினைக்கிறேன்' என்றார்.

நடிகர் நாகேஷ் ஏற்புரை நிகழ்த்தும் போது, 'என்னை பொறுத்தவரை சில விடயங்களை விரும்பாதவன். விழா என்பது விழாமல் இருக்க எடுப்பது. நான் விழாமல் இருப்பதற்காக நடத்தப்படுகிறது என நினைக் கிறேன். நான் எந்த காரியத் திலேயும் கால் வைத்தால் முடிக்காமல் விட்டது இல்லை. இந்த நிகழ்ச்சியால் தனிப்பட்ட முறையில் தெம்பு வந்துள்ளது' என்றார்.



# தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியமாய்..

## உங்களின் அறிவுத்தேடலின் தேவையைப்பூர்த்தி செய்யக காத்திருக்கின்றது.

# பூபாளம்
பொத்தகசாலை




- தாயக வெளியீடுகள்,
- இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் நாவல்கள்,
- உலகப்போராட்ட வரலாறுகள்,
- அரசியல், கவிதைகள், அறிவியல் சார்ந்த நூல்கள்,
- பத்திரிகைகள், சஞ்சிகைகள்,
- இன்னும் பல..............








உங்களின் அறிவுத் தேடலின் எங்களின் இன்னொரு அறிமுகம்

# பூபாளம் நூலகசேவை

உங்களுக்குத் தேவையான அரிதான அற்புதமான பல்வேறு வகையான நூல்களையும் எமது நூலகத்தில் வாடகைக்கு பெற்று வாசித்துப் பயன்பெற முடியும். பல்துறைசார்ந்த 2000ற்கும் மேற்பட்ட நூல்கள்...



**27**
**Imprimerie 27**

## மலிவு விலையில்...
## நிறைந்த தரத்தில்...
## விரைவான
## சேவைக்கு...




**அழைப்பிதழ்கள் துண்டுப்பிரசுரங்கள் நூல்கள் சஞ்சிகைகள் உட்பட உங்கள் அனைத்துவிதமான அச்சுத்தேவைகளுக்கும்.**

வாழ்த்து மடல்கள், எழுது பொருட்கள், A3, A4 தாள்கள், Photo Copy மற்றும் சேவைகளுக்கும் எம்மை நாடவும்

**Poobalam S.a.r.l, 22 Rue Perdonnet, 75010 Paris.**
**Tel: 01 40 05 95 15 - Fax: 01 40 05 95 16**
**e.mail: poobalamad@free.fr**

# அச்சுவேலி நபர் சுட்டுக்கொலை

(31.07.05)

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஐந்து மணியளவில் அச்சுவேலி சந்திக்கு சமீபமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தோட்டத்தில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர். அச்சுவேலி சங்கானை வீதியைச் சேர்ந்த பிலிப்பையா பேர்னாட் ஜெயராஜா (56) என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சுட்டுக்கொல்லப்பட்ட இவர், இந்தியப்படை இலங்கையில் இருந்த காலத்தில் பல்வேறு பொய்க் குற்றசாட்டுக்களின் அடிப்படையில் தமிழ் இளைஞர்களை காட்டிக்கொடுத்து வந்தவர் எனவும், இந்திய இராணுவத்தினர் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர் வவுனியா சென்று புளொட் குழுவினருடன் இணைந்து செயற்பட்டவர் எனவும் தெரியவந்துள்ளது. அத்துடன் யாழ்குடா சிறீலங்கா இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் தனது சொந்த ஊரான அச்சுவேலிக்கு வந்து, தொடர்ந்தும் தமிழ் இளைஞர்களை சிறீலங்கா இராணுவத்தினரிடம் தனிப்பட்ட காரணங்களுக்காக காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்தார் என தெரியவந்துள்ளது. இவரது கொலைச் சம்பவம் தொடர்பாக தற்போது சிறீலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு போர் நிறுத்த உடன்படிக்கையில் உத்தரவாதம் உள்ளது

### – முன்னாள் சிறீலங்கா விமானப் படைத்தளபதி

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு அரசு உத்தரவாதமளிக்க வேண்டியது, போர் நிறுத்த உடன்பாட்டின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் விமானப் படைத் தளபதியும் இராணுவ விமர்சகருமான ஏயார் மார்ஷல் ஹரிகுணதிலக தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், அரச கட்டுப்பாட்டுப் பகுதியினுள் ஆயுதமற்ற விடுதலைப் புலிகளின் நடமாட்டத்திற்கு ஒப்பந்தத்தில் வழி செய்யப்பட்டிருக்கின்றது. முன்னைய ரணில் விக்கிரமசிங்கவின் அரசு இதனை செய்திருக்கின்றது. தற்போதைய அரசும் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க ஒப்புக் கொண்டிருக்கின்றது. எனவே ஒப்புக்கொண்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவது அரசின் தார்மீகக் கடமை. விடுதலைப் புலிகளால் கேட்கப்பட்ட பாதுகாப்பை அடிக்கடி வழங்குவது என்பது நிச்சயமாக இராணுவத்தின் மீது பயங்கரமான பழுவினைச் சுமத்தும் நடவடிக்கை. அவ்வாறான பாதுகாப்பு வழித்துணையை வழங்க ஏற்கனவே ஒப்புக் கொண்டதால் அதனை தொடர்ச்சியாக வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். ஆனால், ஒரு மாதத்திற்கு எத்தனை தடவைகள், கிழமைக்கு எத்தனை தடவைகள் எவ்வளவு எண்ணிக்கையானோர் செல்வது என்பவற்றில் சில நிபந்தனைகள் விதிக்கப்படலாம். யுத்த நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரும் போர் நிறுத்தம் அமுலில் உள்ள இந்த மூன்றரை வருட காலத்தில் இப்போது பாரிய சவால்களையும் ஆபத்தையும் முதல் முறையாக சந்தித்திருக்கின்றனர். போர் நிறுத்த உடன்பாடு ஆபத்தில் சிக்கி இருக்கின்றது. வெகுவிரைவில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்ற கேள்வி இன்று இலங்கையர் ஒவ்வொருவரதும் மனங்களிலும் எழுந்துள்ளது. ஆனால் நாடு மோதல்களின் விளிம்பில் தான் நிற்கின்றது என்றே கூறுவேன். இதேவேளை, அதிகரித்த இராணுவ முகாம், சோதனைகள் போன்றவற்றிலும் நாளாந்தம் சராசரி இரண்டு தொடக்கம் மூன்று பேர் வரை கொல்லப்படுவதாலும் யுத்தம் ஏற்படும் நிலையுள்ளது என்பதை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை இந்தநிலை தொடரும். ஆகவே, இந்த விடயத்தில் வெகுசீக்கிரம் தீர்வொன்று காணப்பட வேண்டியது நாட்டின் ஒட்டு மொத்த சமாதானத்திற்கு மிகவும் அவசியமானது எனவும் அவர் கூறினார்.

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் 'வாழ்க்கை சரிதை' நூல் வெளியீட்டு விழா கொழும்பில் கடந்த வெள்ளி இரவு இடம் பெற்றபோது நூலில் திருமதி சந்திரிகா கையெழுத்தைப்பெற பிரதமர் மகிந்த ராஜபக்ச காத்து நிற்பதையும், அருகில் நூலுடன் சகோதரர் அநுரா பண்டாரநாயக்கா நிற்கின்றார்.




# இலங்கை இளைஞனை திருமணம் செய்த தமிழகப் பெண்

## தந்தை முறைப்பாடு – சிறீலங்காப் பொலிசார் மன்னாரில் வைத்து கைது

(01.08.05)

மன்னார் பெரிய கடையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை சட்டபூர்வமாக திருமணம் செய்த தமிழ்நாடு திருநெல்வேலியைச் சேர்ந்த பெண்ணொருவரை கடந்த 28ம் திகதி சிறீலங்காப் பொலிசார் கைது செய்துள்ளனர். கொழும்பிலிருந்து வந்த உத்தரவுக்கமைய மன்னார் பொலிஸ் நிலைய சிறுவர் மகளிர் பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி சீதாமாலினி தலைமையிலான பொலிஸ் குழுவினரே இந்தியப் பிரஜையான மகாலட்சுமி (21) என்ற பெண்ணையும் அவரது கணவரையும் பெரிய கடையிலுள்ள வீடொன்றில் வைத்து கைது செய்துள்ளனர்.

குறிப்பிட்ட இந்தப் பெண்ணின் தந்தையினால் சென்னையிலுள்ள சிறீலங்காத் தூதரகத்தில் தனது மகள் இலங்கைக்கு கடத்தப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதேநேரம், குறிப்பிட்ட இந்தியப் பிரஜையான பெண்ணின் தந்தையாரும் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளித்து தனது மகளை மிரட்டும் தொனியில் செயற்பட்டதையும் காணக்கூடியதாக இருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

குறிப்பிட்ட பெண்ணையும் அவரது கணவரையும் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றில் பொலிசார் முன்னிலைப்படுத்தியிருந்தனர். அதேநேரம், தாம் இருவரும் இந்தியாவில் சட்டபூர்வமாக திருமணம் செய்து படகு மூலம் மன்னார் திரும்பியதாகவும் இரு மாதக் கர்ப்பிணியாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ள குறிப்பிட்ட பெண், தன்னை இந்தியாவுக்கு அனுப்பினால் குடும்பத்தினரால் பழிவாங்கப்படலாமென்றும் கண்ணீர் மல்க பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, சென்னை பல்கலைக்கழகம் ஒன்றில் இணைந்து கல்வி கற்ற மன்னாரைச் சேர்ந்த இலங்கைப் பிரஜையாகிய இளைஞன் ஒருவரைக் காதலித்து, பெற்றோரின் சம்மதமின்றி, கடந்த யூன் மாதம் 5ம் திகதி சென்னையில் சட்டப்படி பதிவுத் திருமணம் செய்து கொண்ட இவர்கள் இருவரும் இம்மாதம் 20ம் திகதி கடல் மார்க்கமாக மன்னாருக்கு வந்து சேர்ந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

இளம்பெண் 21 வயதுடையவர் என்றும் இளைஞன் 24 வயதுடையவர் என்றும் தெரிவித்த பொலிசார், இவர்களின் திருமணத்தில் எந்தவிதச் சட்டச்சிக்கலும் இருப்பதாகத் தெரியவில்லை எனவும் தெரிவித்தனர். எனினும் இந்தியப் பிரஜையாகிய இளம்பெண் உரிய பிரயாண ஆவணங்களின்றி இலங்கைக்குள் பிரவேசித்து தங்கியிருந்தமையே சட்டவிரோதமான செயற்பாடாகும் அதற்காகவே கைது செய்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

# அமெரிக்க கடற்படைக்குழு யாழ்குடாவிற்கு இரகசிய விஜயம்!

(01.08.05)

அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கடந்த 29ம் திகதி யாழ்.குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளதாக இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த 6 கடற்படை அதிகாரிகளைக் கொண்ட இந்தக் குழுவினர் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் விமான மூலமாக பலாலியை வந்தடைந்ததாகக் கூறப்படுகிறது. இந்தக் குழுவினர் அங்கிருந்து காங்கேசன்துறை மற்றும் காரைநகர் கடற்படைத் தளங்களுக்கு விஜயம் செய்து கடற்படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறீலங்காக் கடற்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும் நேரில் பார்வையிட்ட அமெரிக்க அதிகாரிகள் குழு இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்து உயர்மட்ட ஆலோசனைகளை நடத்தியிருப்பதாகவும் இணையத்தளச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

இதுஇவ்வாறிருக்க, அன்றைய தினம் அமெரிக்க தூதரக அரசியல் அதிகாரியும் யாழ்குடாவிற்கு சென்றிருந்தார். யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரியுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து - தற்போதைய நிலை தொடர்பாக உரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் - தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதில் அரசாங்கம் இழுத்தடிப்பது தொடர்பாகவும் எடுத்துக்கூறிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமெரிக்க அரசு நேரடியாக உதவிகளை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். அத்துடன் - தமிழ்மக்களின் நிலைப்பாட்டை அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும் என்றும், புலிகளுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி சமாதான முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றும் கோரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகள் மீதான தடையை அமெரிக்கா விலக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இதற்குப் பதிலளித்த அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரி, புலிகள் மீதான தடை விலக்கல் தொடர்பாக உடனடியாக எதுவும் கூற முடியாது என்றும், காலப்போக்கில் நல்ல மாற்றம் உருவாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

## இராணுவமும் துணைப்படையும் நிழல் யுத்தத்தை மேற்கொண்டுவருகின்றன.

**– அமெரிக்காவின் சட்டத்தரணி கரன் பார்க்கர் ஐ.நா. மாநாட்டில் உரை**

(01.08.05)

சிறீலங்கா இராணுவமும், அதன் துணைப்படையும் ஏதோ ஒருவகையான நிழல் யுத்தத்தினை நடத்திவருகின்றன என அமெரிக்காவின் சான் பிரான்ஸ்சிக்கோவைச் சேர்ந்த சட்டத்தரணி கரன் பார்க்கர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஊக்குவிப்பு, பாதுகாப்பான உப ஆணைக்குழுவின் 57வது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போது தெரிவித்துள்ளார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இருபது வருடகால யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். சுனாமிக்கு பின்னர், சர்வதேச உதவிகள் கூட இவர்களை சென்றடையவில்லை. அதை அனுமதிப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது. அதனாலும் இவர்கள் பாதிப்படைந்து வருகின்றார்கள்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த உப ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தமது சொந்த அறிக்கைகளின் வாயிலாக முன்வர வேண்டும். இதன்மூலம் ஏனைய ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுடனும், தொடர்புகளை கொள்ளவேண்டும். இலங்கையில் நிலவும் இந்த அவல நிலைக்கு ஆணைக்குழுவாலோ, உப ஆணைக்குழுக்களாலோ, ஒரு தீர்வினைக்காண முடியவில்லை. நோர்வேயினால் முன்னெடுக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படவேண்டும்.

இப்போது இலங்கையில் சமாதான முன்னெடுப்புக்கள் தடைப்பட்டுள்ளன. இலங்கை இராணுவமும் துணைப்படைகளும் இங்கு ஏதோ ஒரு வகையான நிழல் யுத்தத்தினை மேற்கொண்டுவருகின்றன. சிங்கள மக்கள் மீதும் அரசாங்கம் மீதும் தமிழ் மக்கள் கொண்டிருந்த அற்ப நம்பிக்கைகள் கூட அருகி வருகின்றன. யுத்தம் மீள மூளுவதற்கான விதைகள் தூவப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் இதர அமைப்புக்களும் உரிய பரிகாரங்களை காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். எனவும் அவர் தனது உரையின் போது கோரிக்கைகளை விடுத்துள்ளார்.

## பிரித்தானிய யுத்தக் கப்பல் கொழும்பு செல்கிறது

(01.08.05)

பிரித்தானிய கடற்படையின் யுத்தக் கப்பலான `எச்.எம்.எஸ்.ஜோர்க்` அந்நாட்டு கடற்படையின் துணை ஆதரவுக் கப்பலான `பிளாய்க் ரோவர்` உடன் அடுத்த மாதம் 5ம் திகதி கொழும்பு வருகிறது. மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வரும் இக்கப்பல்களானது, இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய நட்புறவின் அடையாளமாகவும், இருநாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பையும் வெளிப்படுத்துவதாயிருக்குமென சிறீலங்காவிற்கான பிரித்தானிய தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

`எச்.எம்.எஸ்.ஜோர்க்` இலங்கை வரும்போது அதன் கட்டளைத் தளபதி கொமாண்டர் மாற் ஹார்வி, சிறீலங்காவின் முப்படைகளினதும் சிரேஷ்ட அதிகாரிகளையும் கொழும்பு மாநகர மேயரையும் சந்தித்துப் பேசவுள்ளார். அதேநேரம், இக்கப்பல் மாலுமிகள் சிறீலங்கா கடற்படையினருடன் உதைபந்தாட்டம், ரகர் மற்றும் ஹொக்கி போட்டிகளிலும் பங்குபற்றுவர். இலங்கை கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டபோது பிரித்தானிய கடற்படையின் யுத்தக் கப்பலான `எச்.எம்.எஸ். சதாம்` மற்றும் துணை ஆதரவுக் கப்பலான `ஆர்.எவ்.ஏ.டிலிஜன்ஸ்` இலங்கைக்கு வந்து மீட்புப் பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தது. அந்தப் பணிகளின் தொடர்ச்சியாகவும் அதனை ஊக்குவிக்கும் நோக்கிலுமேயே தற்போது `எச்.எம்.எஸ்.ஜோர்க்` இலங்கை வரவுள்ளதாகவும் பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

## மரண தண்டனையை நிறைவேற்ற பணிப்பு

குற்றச் செயல்களுக்காக சிறீலங்கா நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டோரில் 20 பேருக்கான தூக்குத் தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். ஐந்து வழக்குகளில் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்ட சுமார் 20 பேருக்கு தண்டனை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இவர்களின் தண்டனையை நிறைவேற்ற பிரதம நீதியரசரின் அனுமதியுடன் நீதியமைச்சினூடாக ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்திருப்பதாக அந்த அதிகாரிகள் கூறினர். ஹோகந்தர கொலைச் சம்பவம், சதீப லக்சான் சிறுவன் கொலை, ரீட்டா ஜோன் கொலை, இனோகா செவ்வந்தி கொலை மற்றும் கிருசாந்தி குமாரசுவாமி கொலை ஆகிய 5 வழக்குகளில் இவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. சுங்க அதிகாரி சுஜித் பிரசன்ன பெரேராவின் கொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு அந்தத் தண்டனையை நிறைவேற்றுவது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகவும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொல்லப்பட்ட தமது உறுப்பினர் உடலை அநாதரவாக விட்டுச்சென்றது ஈ.பி.டி.பி.

(01.08.05)

யாழ்.நகரில் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி குழுவின் உறுப்பினரின் சடலம் தாங்கிய சவப்பெட்டியை, இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு யாழ். மாவட்ட அலுவலகத்திற்கு முன்பாக வைத்து, ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் இணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.



கண்காணிப்புக்குழு பதில் தராதமையால் உடலை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு சென்றுள்ள அக்குழுவின் உறுப்பினர்கள். யாழ். நகரில் கடந்த வெள்ளிக்கிழமை டக்ளசின் தினமுரசு பத்திரிகையை விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறை குடத்தனை பகுதியைச் சேர்ந்த சுளியாம்பிள்ளை நிக்ஷன் (24) என்ற உறுப்பினர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். கஸ்தூரியார் வீதிக்கு ஸ்டான்லி வீதி வழியாக அவர் சென்று கொண்டிருந்த போது உந்துருளியில் வந்த இனந்தெரியாத குழுவினர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சுமார் 20 மீற்றர்கள் தூரத்தினுள் இராணுவக் காவலரண் ஒன்று இருப்தும், மிகவும் சன நெரிசல் மிக்க இடத்தில் இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடக்கூடியதாகும். சம்பவம் இடம்பெற்றதும் அதிக எண்ணிக்கையான காவல்துறையினரும் இராணுவத்தினரும் ஈ.பி.டி.பி தேசவிரோதக் கும்பலின் உறுப்பினர்களும் குவிந்திருந்தனர்.

இச்சம்பவத்தில் பலியானவரின் உடலைத் தாங்கிய சவப்பெட்டியுடன் மறுநாள் கண்காணிப்பு அலுவலகம் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், சம்பவத்துடன் தொடர்புள்ளோரை இனம்கண்டு, அவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும், யுத்த நிறுத்தகாலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதை அனுமதிக்கத் கூடாது எனவும் கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்களை பொதுமக்கள் தாக்கிவிடாதபடி பெருந் தொகையான இராணுவத்தினரும் பொலிசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அத்துடன், சில வீதிகளையும் மக்கள் போக்குவரத்திற்கு தடைசெய்திருந்தனர்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டம் முடிவுற்றபின்னரும் பதில் வராமையால் ஆத்திரமடைந்த ஈ.பி.டி.பி.யினர் தமக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமிருந்து உறுதியான பதில் கிடைக்கும் வரை, பலியான உறுப்பினரது சடலம் தாங்கிய சவப்பெட்டியை எடுப்பதில்லையெனக் கூறி, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் முன்பாகவே வைத்துவிட்டுச் சென்றுவிட்டனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக சடலம் அநாதரவாக விடப்பட்டதால் சிக்கலை எதிர்கொண்ட பொலிசார், நீதிமன்றத்தின் உதவியை நாடினர். இதனையடுத்து சடலத்தை மீண்டும் பொலிசாரிடம் இருந்து பொறுப்பேற்குமாறு யாழ். மருத்தவமனை நிர்வாகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேவேளை, சடலம் வைக்கப்பட்ட பேழையை அங்கிருந்து அகற்றுவதற்கு முன்பாக அதனை சோதனையிடுவதற்கு பொலிசார் நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரினர். அதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அதன் பின் இராணுவத்தின் பொறியியல் பிரிவினர் அங்கு வரவழைக்கப்பட்டு பிரேதப் பெட்டியினுள் வெடி பொருள்கள் ஏதாவது உள்ளனவா என பரிசோதிக்கப்பட்டது.

இந்நிலையில், உயிரிழந்த இளைஞனின் தந்தையார் சடலத்தைப் பொறுப்பேற்க முன்வந்தார். அவரது வேண்டுகோளின் பேரில் சடலம் அவரிடம் கையளிக்கப்பட்டது. வைத்தியசாலையில் இருந்து சடலத்தைப் பெற்று மூன்று மணி நேரத்தினுள் அதனை அடக்கம் செய்துவிடவேண்டும் என்ற நிபந்தனையுடனேயே சடலம் அவரிடம் கையளிக்கப்பட்டது. உரிய நிபந்தனையின் பேரில் சடலம் முறைப்படி அடக்கம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பருத்தித்துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்டது.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக பதிலளித்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு பொறுப்பு வகிக்கும் வான் வின்கல் அவர்கள், காவல்துறைப் பணியைச் செய்வது தங்களின் வேலை அல்ல என்றும் யுத்த நிறுத்த சூழலை கண்காணிப்பது மட்டுமே தங்களது பணி எனவும் கூறினார். நடைபெற்ற சம்பவம் குறித்து விசாரித்து வருவதாகக் கூறிய வான் வின்கல், விடுதலைப் புலிகளுடன் இது போன்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து விவாதித்து வருவதாகவும் கூறினார்.

## அமைதி முயற்சிகள் சீர்குலைந்தால் நாம் நிதியுதவி வழங்க மாட்டோம்

**அமெரிக்க தூதர் லன்ஸ்றீட் எச்சரிக்கை**

(01.08.05)

சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து எதிரெதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு - சமாதான சூழ்நிலைக்குப் பாதிப்பு ஏற்படுமானால் சுனாமி புனரமைப்பு நடவடிக்கைககளில் இருந்து ஒதுங்கிவிடுவோம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. கொழும்பில் அமெரிக்க தூதரகத்தில் 25ம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ் றீட் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது, அமைதியை நிலைநாட்டுவதில் இருதரப்பினரும் பொறுப்புடன் செயற்படவேண்டும். அமைதியற்ற சூழலில் சுனாமி புனரமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது. சமாதான நடவடிக்கைகளில் முறிவு ஏற்பட்டால் அல்லது இருதரப்பினருக்கு மிடையில் எதிர்நடவடிக்கைகள் இடம்பெறுமாயின் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் தடை ஏற்படும். யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் சுனாமி நிவாரணத் திட்டங்களை நடைமுறைப்படுத்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட பகுதிகளில் நிலவும் அமைதிச் சூழலைப் பொறுத்தே அவை செயற்படுத்தப்படும். சமாதானம் இல்லையேல் இவ்வாறான திட்டங்களைக் கொண்டு செல்ல முடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை இலங்கையில் சுனாமி மீட்புப் புனரமைப்புக்காக யு.எஸ்.எயிட்ஸ் மூலம் 57.2 மில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்கியிருக்கிறது குறிப்பிடத்தக்கது.

# 8ம் ஆண்டு வீரவணக்கம்

## கப்டன். செல்லக்கிளி
## (இலங்கைநாதன் காண்டீபன்)

**காடிவளை இளவாலை- யாழ்ப்பாணம்**

(மல்லாகம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.)


**தாயின் மடியில்** 03.12.1974

**மண்ணின் மடியில்** 05.08.1997

**பெற்றோரின் மனங்குளிர நன்மகனாய்ப் பிறந்தாய்**
**ஈழத்தாயின் விடிவிற்காய் இள வேங்கையானாய்**
**சமரதிலே அனலாகி எதிரிகளை எரித்தாய்**
**ஒரு நாள் மல்லாகம் மண்ணிலே மாவீரனானாய் !**
**தமிழீழம் மலரும் காலம் வெகு விரைவில் .....**
**உன் வழமையான புன்முறுவலுடன் கலங்காமல் காத்திரு**

தகவல்- ஜெகன் (பிரான்ஸ்)





# திரு. பெனடிற் ஞானப்பிரகாசம்

மண்ணிற்கு 02.11.1937

விண்ணிற்கு 29.07.2005

# மரண அறிவித்தல்

இலங்கை யாழ்ப்பாணம் நாரந்தனையை பிறப்பிடமாகவும், இளவாலை, ஓமந்தையை வதிவிடமாகவும், பிரான்ஸை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முன்னைநாள் இளைப்பாறிய கொத்தணி அதிபர் (வ- ஓமந்தை) திரு.ஞானப்பிரகாசம் மாஸ்ரர் அவர்கள் 29.07.2005 அன்று FRANCE St. CLOUD இல் காலமானார்.

இவர் காலம் சென்ற திரு.திருமதி பஸ்ரியாம் பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும், அன்ரனி பீற்றர் (SRI LANKA) இன் சகோதரனும், திருமதி ஞானப்பிரகாசம் ஞானரத்தினம் (சின்னம்மா) வின் அன்புக்கணவரும் கறோலின் (HOLLAND), ஜெஸ்லின் (SRILANKA), காலம் சென்ற கெஸ்ரன் சிறிராஜ் (TOULOUSE), மர்லின் (paris) நியூட்டன் (paris) ஆகியோரின் அன்புத் தந்தையும், சேவியர் (HOLLAND) வரதன் (SRILANKA) டன்ஸ்ரன் (PARIS) சுமதி (வேணி) (TOULOUSE) ஆகியோரின் அன்பு மாமனாரும், (B) பிராண்டன், ஜெவ்றி, கிஷாளன், லனிஸ்க்கா, சோனியா, சரண்ராஜ் லூாயிசா, ஜரிற்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் - குடும்பத்தினர்.

**நல்லடக்கம் பற்றிய விபரங்களுக்கு**

| | | |
|---|---|---|
| டன்ஸ்ரன் மர்லின் | - | 01 41 12 97 36 |
| | | 06 60 13 10 66 |
| நியூட்டன் | - | 06 14 81 56 49 |
| அனுராஜ் | - | 06 60 68 23 84 |
| அல்ஸ்ரன் உதயராஜ் | - | 06 63 18 29 79 |

# பலாலி விமானத்தள ஓடு பாதை தற்காலிகமாக மூடப்படுகிறது

## படையினரை ஏற்றியிறக்க இந்தியாவிடம் உதவி கோரிக்கை

(01.08.05)

பலாலி விமானத்தள ஓடு பாதை ஐந்துமாத காலத்துக்கு மூடப்பட இருப்பதாக சிறீலங்கா விமானப் படைத் தளபதி எயார் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார். விமானத்தள ஓடுபாதையில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவிருப்பதன் காரணமாகவே ஐந்து மாதத்துக்கு மூடவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக தனியார் விமானங்கள் பலாலி விமானத் தளத்தில் தரையிறங்கமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் டொனால்ட் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார். பலாலி விமானத்தளத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், எனினும் இந்தப் பணிகள் ஒருங்கமைக்கப்பட்ட பின்னர் அங்கு விமானங்கள் தரையிறக்க முடியாதெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தினரை ஏற்றியிறக்குவதற்காக இந்தியாவிடமிருந்து எம்.ஐ.ரக உலங்குவானூர்திகள் இரண்டை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிகப்பட்டுள்ளதாக தெரிவித்தார். தற்பொழுது ரஷ்ய தயாரிப்பான அன்ரனோ-32 ரக விமானங்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு சுமார் 1500 இராணுவத்தினர் ஏற்றியிறக்கப்படுவதாகவும், எனினும், இந்தியாவிடம் வாடகைக்குப் பெறப்படவிருக்கும் எம்.ஐ.ரக உலங்குவானூர்தியில் ஒரு தடவையில் 95 பேர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு சுமார் 750 படையினரை ஏற்றியிறக்க முடியுமெனவும் தெரிவித்தார். ஓர் அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்திடம் கேட்கும் உதவியின் அடிப்படையில் போக்குவரத்துக்குப் பயன்படும் அதிக சுமை ஏற்றிச் செல்லக்கூடிய எம்ஐ-26 ரக உலங்கு வானூர்திகளை இந்தியாவிடம் வாடகைக்கு கேட்கமுடியும் என்றும் கூறியுள்ளார்.

## உயர் நீதிமன்றம் அனுப்பிய அழைப்பாணையை யாழ். நீதிமன்றம் திருப்பியனுப்பியது

(01.08.05)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் யாழ். நீதிமன்றின் நியாயாதிக்கத்தினுள் இல்லை எனத் தெரிவித்து உயர் நீதிமன்றம் அனுப்பிய அழைப்பாணையை யாழ். நீதிமன்றம் திருப்பி அனுப்பியுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, கடல்கோள் அனர்த்த நிவாரணப் பணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில் பிரதிவாதிகளில் ஒருவராக, பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் விடுதலைப் புலிகள் சார்பில் கையெழுத்திட்டுள்ள திட்டமிடல் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் ரஞ்சன் சண்முகநாதன் என்பவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்ருக்கான அழைப்பாணையே யாழ். நீதிமன்றத்திற்கு அனுப்பி அவருக்கு அதனைக் கையளிக்க உயர் நீதிமன்றம் முயற்சித்தது. எனினும் பிரதிவாதி யாழ். நீதிமன்றின் நியாயாதிக்கத்தினுள் உள்ள பகுதிக்குரியவர் அல்ல என தெரிவித்து யாழ். நீதிமன்று, இந்த அழைப்பாணையை கொழும்பிற்கு திருப்பியனுப்பியுள்ளது.

## தமிழ்க் குடும்பத்திற்கு கட்டுநாயக்காவில் நேர்ந்த அவலம்!

கனடாவிலிருந்து விடுமுறையை கழிப்பதற்காக இலங்கை சென்ற தமிழ் குடும்பமொன்று கொண்டு வந்த பொதிகளில் இருந்த இனிப்புகள், மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் விமான நிலையத்தில் வைத்து சூறையாடப்பட்டுள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழ் குடும்பமொன்று கனடாவிலிருந்து இலண்டன் ஊடாக கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடைந்தது. இவர்கள் தமது பொதிகளை பெற்றுக் கொள்ளச் சென்ற போது விமானம் மாறி வருகையில் பொதிகள் தவறி விட்டதாக விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். எனினும், பின்னர் இவர்களது இரு பொதிகளும் கையளிக்கப்பட்ட போதும் பொதிகளில் இருந்த இனிப்புகள் மற்றும் அன்பளிப்புக்காக கனடாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன. இதே குடும்பத்தவர்கள் சில நாட்களின்பின் இந்தியா சென்று திரும்பி வந்த போதும் இவர்களது பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன. இது தொடர்பாக குறித்த விமான சேவை நிறுவனத்தினரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போது அதற்கான நஷ்ட ஈட்டை வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
31.08.1925

மறைவு
30.07.2005

### திருமதி இரட்ணசிங்கம் நாகரத்தினம்

அளவெட்டியை பிறப்பிடமாகவும், காரைநகர் ஆலடியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரட்ணசிங்கம் நாகரத்தினம் 30.07.2005 அன்று பிரான்சில் காலமானார்.
இவர் காலஞ்சென்ற திரு.திருமதி நாகலிங்கம் இரத்தினம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்ற இரட்ணலிங்கம், நாகேஸ்வரி, சத்தியபாமா, சண்முகநாதன், யுவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தில்லைரத்தினம், காலஞ்சென்ற இரத்தினஜோதி, இரட்ணகுமார், கலாமாலினி, கீதா ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகநாதன், பத்மராணி, செந்தில்நாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜா, ஷார்லட், அபிஷா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், சிவபாக்கியம், ராஜாராணி, இரத்தினேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை, வைத்திலிங்கம், அம்பலவாணர், விஸ்வலிங்கம், கணேஸ்ஜயா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகட்கு.
குமார் - 06 67 45 17 03 (பிரான்ஸ்)
ஜீவா - 06 64 04 46 68 (பிரான்ஸ்)
கலா - 01 48 26 60 23 (பிரான்ஸ்)
யோகநாதன் - 02 44 66 59 82 (சுவிஸ்)
செந்தில்நாதன் - 07 95 83 24 67 (சுவிஸ்)


ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE **Gratuit**
**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)
**Directeur de la publication:**
A.F. Santiogu
**Redacteur:** K. Jeisanthar
**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
பிரான்ஸ்:
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16
இணையத்தளம்
www.poobalam.com
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-poobalamad@free.fr

பிரித்தானியா:
ரிஷி - 07859071910
சிவபாலன் 07958007132
மோகன் : - Tel: 07961582285

சுவிஸ் விநியோக தொடர்புகட்கு:
SAI TRADER GmbH
Raaterstrasse 24
CH- 8175 Windlach
TEL: 018 85 86 50
FAX: 018 85 86 51

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104

டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே
JAFFNA FOOD
Tel: 22425527


நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம் Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932

கனடா :
2390 Eglinton ave east #230,
Toronto, ONT M1K 2P5.
Tel: 416 752 4846/416 8573 941
Fax : 416 752 4136


**குறிப்பு:** இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.


GANAPATHY CASH & CARRY WINE MART



உங்களுக்கு தேவையான அனைத்துப்பொருட்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
வாரத்தில் இரு முறை உடன் மரக்கறிகள் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்கிறோம்.
Tel : 020 8795 4627
Fax : 020 8903 3185
34 - 38 Ealing Road, Wembley Middlesex, HA0 4TL

மங்கையர் மனம் கவரும் அசல் 22கரட் தங்க நகைத் தெரிவுகளுக்கு

**KMS JEWELLERS**

6, Rue Perdonnet
75010 Paris
Métro : La Chapelle



Tél : 01 44 72 08 02
Fax : 01 44 72 04 78

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்

POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr

www.poobalam.com

**வீடு வாங்குதல்–விற்றல் முதலீடு செய்தல்**

- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய –பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்

☎ 06 64 73 49 82

முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்

**Restaurant Tharsana's**

• இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

இங்கு
சாப்பாடுகளை
ஓடருக்குப்
பெற்றுக் கொள்வதுடன்,
உங்கள் விழாக்களையும்
இங்கு மகிழ்வுடன்
கொண்டாடலாம்

**Restaurant Prassah**

*Gastronomiques Indiennes*

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

**JAFFNA BOUCHERIE**

JB



அனைத்து இறைச்சி வகைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெறறுக்கொள்ளலாம். உடன் கோழி, உடன் ஆட்டுப்பங்கு கிடைக்கும்

70, rue Louis Blanc
75010 Paris
Tél : 01 40 35 39 79
M° : La Chapelle / Gare du Nord

# நல்லூர் கந்தன் களஞ்சியம்

**NALLAI KUMARAN TRADERS sarl**






191, Rue du Fg. St. Denis,
75010 Paris.
Tél : 01 42 09 06 82
06 23 71 35 96
RER/M° : Gare du Nord / Lachapelle
Bus : 350, 302, 65, 48

**பெண் விற்பனையாளர் தேவை**

2 Rue Cail இல் அமைந்துள்ள வெதுப்பகத்திற்கு பெண் விற்பனையாளர் தேவை. நன்கு பிரஞ் மொழி தெரிந்தவராக இருக்க வேண்டும்

தொடர்புகளுக்கு - 06 14 65 90 49
06 62 69 66 17
06 62 68 44 92

**GALAXY ALIMENTION & VIDEO**

இலங்கை, இந்திய உணவுப் பொருட்களையும் மற்றும் மங்களகர வைபவங்களிற்கான வீடியோ சேவைக்கும் நாடுங்கள்

100ஈரோக்கு மேல் பொருட்கள் கொள்வனவுக்கு வீடியோகம் இலவசம்

251, Avenue Jean Jeures
93300 Fort Aubervilliers
Tel - 01 48 37 96 64

**சாந்தினி உணவகம்**

அதிசயம் ஆனால் உண்மை
தினமும் 100 இடியப்பம்
(சம்பல், சொதியுடன்)
18 ஈரோ மட்டுமே!

**01 42 09 69 16**

SANTHINI Restaurant
57,S- rue louis Blanc
75010, Paris
Tel - 06 62 14 21 97

**LE MARCHE EXOTIQUE**

SHAMEEM + WORLD MARKET

1 RUE CAIL
75010 PARIS
TP-01 42 09 42 07
FAX- 01 40 38 03 82

10-12 RUE CAIL
75010 PARIS
TP- 01 40 37 05 47

# Jasijananth Travels and Tours GmbH

A great way to fly world wide

விமான பிரயானச்சேவையின் விருட்சம் அதுவே உங்கள் தேடல் தெரிவின் முதல் மைல்க்கல். உறுதியான உங்கள் பயணத்திற்கு உறுதுணையாக இருப்பவர்கள்.

Jasijananth Travels The Smart travellers Choice

எம்மிடம் விமானச்சீட்டுக்களை பதிவுசெய்து பெற்றுக்கொள்பவர்களுக்கு விமானநிலையம் செல்வதற்கு வாகனவசதிகளுடன் சகலவிதமான வாகனங்களும் எம்மிடம் வாடகைக்கு கிடைக்கும்.

உங்கள் பயணத்தை இலகுவாக்க பணத்தை மீதப்படுத்த பயணத்தை பாதுகாப்பானதாக்க உத்தரவாதத்துடன் உங்கள் தேடலின் தெரிவு

Off - 031 381 1964 Fax - 031 381 0421
Nat - 079 600 8966 - K.Kulenthy
www.jesijananthtravels.com

Jasijananth Travels
Freilburg Str - 111 b
3008 Bern - CH

**குறைந்த வட்டி வீதத்தில் மிகப் பெரிய வங்கிக்கடன்**

❊ வங்கிக் கடன்
❊ சேமிப்புத் திட்டங்கள்
❊ சேமிப்புடனான ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்

Anchalifinanz GmbH
Buchenweg 6
4554 Etziken
Switzerland.
Tel 032 614 40 51
Fax 032 614 40 64
e-mail: info@anchali.com

அஞ்சலி பினான்ஸ்